நன்றி - நூலகத்திட்டம்

SARINIHAR

சரிநிகர்

# சரிநிகர்


சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இதழ் 217 ஜன.14-20, 2001



களுத்துறைச் சிறைப்படுகொலை

தலைகுனிய வேண்டிய தருணம்!



## பிரபாவின் போர்நிறுத்தம்!
## சந்திரிகாவின் நிராகரிப்பு!
## எரிக் செய்ய வேண்டியது என்ன?



குமார் பொன்னம்பலம்

ஓராண்டு நினைவு!

வெலிவேரிய -

ஜே.வி.பி. -

அரச அடக்குமுறை



ஓவியம் :



நன்றி - நூலகத்திட்டம்




## வன்னி: நோயாளிகள் வைத்தியசாலைக்கு வரும் வழியிலேயே இறந்து போவார்கள்!

– கே. ஆர்

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னிப் பெருநிலப்பரப்பிற்குள் வாழுகின்ற மக்கள் பல்வேறு பட்ட வழிகளில் பாதிக்கப்பட்டு துன்ப துயரங்களுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அந்த மக்களின் வாழ்க்கை பொருளாதாரத் தடை, படை நடவடிக்கை போன்றவற்றினால் இருப்பிடம் நிரந்தமற்றதாகி, எதிர்காலம் பற்றிய கேள்வியுடன் ஏக்கமுடைய வாழ்வாகவுள்ளது.

இதில் வன்னியில் உள்ள மக்களிற்கு உள்ள மிக முக்கியமான பிரச்சினை போக்குவரத்து. விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிற்குள் எடுத்துச் செல்வதற்கான எரிபொருள் தடையினால், டீசல், வாகனங்கள் மண்ணெண்ணையில் ஓடுகின்றன. அதிலும் மண்ணெண்ணையின் மட்டுப்படுத்தலினால் மண்ணெண்ணையின் விலை அதிகம். இதனால் போக்குவரத்திற்கான கட்டணம் மிகவும் கூடுதலாகும். அத்துடன் வீதிகள் கடந்த 10 ஆண்டுகளிற்கு மேல் திருத்தப்படாததினால் வன்னியில் சகல வீதிகளும் குண்டும், குழியுமாக மிக மோசமான நிலையில் உள்ளது. வீதியின் மோசமான நிலைபற்றி எம்.எஸ்.ஆர் தொண்டர் நிறுவன சாரதி ஒருவர் கூறுகையில் எறிகணை வீச்சு, விமானக்குண்டு வீச்சு போன்றவற்றினால் காயமடைந்து அவசர சிகிச்சைக்காக வவுனியா வைத்தியசாலைக்குக் கொண்டு வருவோரைக் கொண்டுவராமலே விடலாம். வாகனக் குலுக்கல், தாமதம் போன்றவற்றினால் நோயாளர்கள் இடைவழியில் உயிரிழக்க வேண்டி வரலாம். இதைவிட துவிச்சக்கர வண்டிகளின் உதவியுடனே கூடுதலான போக்குவரத்து நடைபெறுகின்றது. ஆயினும் துவிச்சக்கர வண்டிகளின் உதிரிப் பாகங்களை வன்னிக்கெடுத்துச் செல்ல தடையுள்ளது.



இதைவிட வன்னியிலிருந்து படையினரின் கட்டுப்பாட்டிற்குள் வரும் மக்களின் அவலம் பெரும் அவலமாகும். கடந்த காலங்களில் பல்வேறுபட்ட பாதைகளினால் பல்வேறுபட்ட துன்ப துயரங்களுடன் போக்குவரத்தை மேற்கொண்டனர். தற்போது பிராமணாலங்குளம் ஊடாகவே மக்கள் போக்குவரத்து நடைபெறுகின்றது. இந்தப்பாதையூடான போக்குவரத்து செவ்வாய், வெள்ளி ஆகிய இரு கிழமை நாட்களில் மட்டுமே நடைபெறுகிறது. அதுவும் மட்டுப் படுத்தப்பட்டளவு தொகையினரே பயணத்தை மேற்கொள்ளலாம்.

இதனால் வன்னியிலிருந்து படையினரின் கட்டுப்பாட்டிற்குள் வருவோர் மடுவில் சிலநாட்கள் காத்திருக்க வேண்டியுள்ளது. பணச் செலவுடனும் கால தாமதத்துடனும், வவுனியாவிற்கு வருவோர் அனுமதிபெறுவது, தனியார் விடுதிகளில் தங்குவதென பணத்தையும் செலவு செய்து மன உழைச்சலுடன் தங்கி நின்று பின்னர் வன்னிக்குத் திரும்பிச் செல்வதற்கு அனுமதி பெற்றாலும் வன்னிக்கு செல்வதற்கு படாத பாடு பட வேண்டும். பல முறை பிராமணாலங்குளம் சென்று திரும்பி வருவதுபோல ஒரு பிரயாண துயரம் இல்லை என்ற வகையில் கேவலமான மோசமான பயணமாக இருக்கும். இதை அனுபவித்தவர்கள் அழுதழுது கூறுவார்கள். இப்படித் திரும்பி வருவதால் சில பொருட்களும் நாசமாகிப்போகின்றதென பிரயாணிகள் கூறுகின்றார்கள். திரும்பி அனுப்படுவதற்கு கூறப்படும் காரணம் இந்த மக்களில் கூடுதலான பொருட்களை கொண்டு செல்வதானல் பிராமணாலங்குளத்தில் படையினரிற்கு சோதனை செய்வது சிரமமாம். இதனால் பொருட்களைக் குறைவாகக் கொண்டுவருமாறு கடும உத்தரவு போடப்பட்டுள்ளது. நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்கு விமானப் பயணம் செய்வோருக்குக் கூட இப்படியொரு கட்டுப்பாடு இருக்காது. தேங்காயெண்ணையை, மண்ணெண்ணையுடன் 29 கிலோ நிறையடைய பொருட்களே வன்னிக்குச் செல்லும் ஒருவர் கொண்டு செல்லலாம். இதைவிட கொடுமையொன்று இருக்கோ? அப்படி அந்த நாட்டிற்கு துரோகம் விளையும்படி என்னத்தைத் தான் வன்னிக்கு கொண்டு செல்லப் போகின்றார்கள்? இப்படியான கட்டுப்பாடு மட்டுப்படுத்தல்களிற்கு பின்னரும் பேருந்துகளில் ஏற்றிச் செல்லப் படும் பயணிகள் முழுவரும் வன்னிக்கு அனுப்பி வைக்கப்படுவதில்லை.

காலையில் விடுதிகளில் தங்கி நிற்போர் உறவினர், நண்பர்கள், வீடுகளில் தங்கி நிற்போர் என வன்னிக்குச் செல்வோர் வவுனியா அரச செயலகத்திற்கு வந்து விடுகின்றனர். இங்கு ஒவ்வொருத்தராக முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி எனப் பிரிக்கப்பட்டு அனுமதிப் பத்திரங்கள் சோதனை செய்யப்பட்டு கொண்டு செல்லப்படும் பொருட்கள் நிறுக்கப்பட்டு பேரூந்துகளில் ஏற்றுகின்றார்கள். வன்னிக்குச் செல்லும் சகலரையும் சகல பேரூந்துகளிலும் ஏற்றிய பின்னர் படையினரின் வழித்துணையுடன் பேரூந்துகள் பிராமணாலங்குளம் செல்கின்றது. அங்கு ஒவ்வொரு பேரூந்துகளிலிருந்தும் பயணிகள் இறக்கப்பட்டு பொருட்கள் சோதனை செய்யப்பட்டு படையினரிற்கும், விடுதலைப் புலிகளிற்கும் இடை நடுவில் அனைத்துலக செஞ்சிலுவைக் குழுவினர் வழித்துணைக்கு நிற்க வன்னிக்குள் நுழைகின்றன. இப்படி சோதனை செய்யப்படும்போது மட்டுப்படுத்தப்பட்ட பொருட்கள் கூடுதலாக இருந்தால் அது படையினரின் கையில் தான். இந்த இடத்தில் இவர்களின் சோதனை செய்கையில் நின்றனுபவித்தால் பயணக்கேவலம் புரியும். அதுமட்டுல்லாது வரும் பேரூந்துகள் திரும்புகையில் உள்ள மன உழைச்சலை வெளிச்சொல்ல வார்த்தைகளில்லையென பயணிகள் நெஞ்சுள் அழுதபடி கூறுவர். இந்தப்பிராமணாலங்குளம் பகுதியில் உள்ள சோதனைகள் முடிந்ததும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிற்குள் சென்றதும் விடுதலைப் புலிகளும் பயணிகளை பொதிகளை சோதனை செய்வார்கள். இந்தச் சோதனையும் முடித்து வன்னி செல்லும் பயணிகள் முதல் நாள் பிராயணத்தினை தொடங்கி அடுத்த நாள் காலை வரை பயணம் செய்கின்றனர். பணச் செலவு, நேரச்செலவு, படையினரின் சோதனை, மன உழைச்சல், பல்வேறுபட்ட வேதனைகளைக் கொடுக்கும் இந்தப் போக்குவரத்து தொடரப்போகின்றது.

வவுனியா அரச செயலகத்தில் மழை முடிந்த பின்னர் மழையின் நனையாது மக்கள் பாதுகாப்பாக வரிசையில் நிற்பதற்கு கூரைகளும், தடுப்புக்களும், போடப்படுகின்றது. இதைப் பார்த்தால் இந்த அவலப் பயணத்தை இன்னும் மக்கள் அனுபவிக்கப் போகிறார்கள். இதற்காக வவுனியா அரச செயலக ஊழியர்களையோ, உத்தியோகஸ்தர்களையோ, அல்லது சோதனை செய்யும் படையினரையோ நொந்து கொள்வதில் பயனில்லை. அரசியல்வாதிகளும், அரசுமே இதற்கு பொறுப்பும் காரணமும். இவையெல்லாம் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமயநாயக்க போன்றவர்களின் ஆட்சியில் ஆச்சரியத்துக்குரியவை அல்ல என்ற உண்மையும் தெரியாத ஒன்றல்ல. ⊙

## புலிகளின் தந்திரம்!

புலிகளுடைய போர் நிறுத்தத்திற்கு எதிராக அரசும் அதனுடன் இணைந்த பேரினவாதிகளும் மட்டும் குரல் கொடுக்கவில்லை. சிங்கள சமூகத்தின் புத்திஜீவிகள் எனப்படுவோரும் குரல்கொடுக்க ஆரம்பித்துள்ளார்கள். அரசாங்கம் சமாதானம் பற்றிப் பேசிய போது சமாதானத்திற்காகத் தெருவில் இறங்கி கொடிபிடித்த இடதுசாரிகளையோ அல்லது அரசசார்பற்ற நிறுவனங்களையோ அதன் பத்திஜீவிகளையோ இப்போது காணக்கிடைக்கவில்லை. அவர்கள் மௌனமாகி விட்டார்கள். இங்கே பேராசிரியர் ரஞ்சித் எல். அபேவிக்கிரம என்பவர் தினமின பத்திரிகையில் எழுதிய கட்டுரையின் சில முக்கியமான பகுதிகளைத் தருகிறோம். புத்திஜீவிகளும் எவ்வாறு இனவாதமயமானார்கள் என்பதற்கு ஒரு உரைகல்லாக.

"புலிகள் தலைவர் பிரபாகரன் வழமை போல் தமது நாடகத்தை மீண்டும் ஆரம்பித்துள்ளார். இந்நாடகத்தில் முன்பு ஜே.ஆரும், பிரேமதாசாவும் துரதிருஷ்டவசமாக அகப்பட்டுக் கொண்டனர். பிரபாகரன் தனது நாடகத்தை மீண்டும் சந்திரிகாவின் முன்னாலும் நிகழ்த்திக் காட்ட ஆரம்பித்துள்ளார். எனினும், சந்திரிகா அதிர்ஷ்டவசமாக அவரது தந்திரத்திற்குள் அகப்படவில்லை.

"பயங்கரவாத இயக்கம் பலவீனமடையும் போது , புலிகளின் பலம் குறைவடையும் போது, ஆயுத பலம் குறைவடையும் போது பிரபாகரன் போர் நிறுத்தத்தை அறிவிப்பது வழமையான விடயமே. இம்முறையும் பிரபாகரன் மண் கவ்வும் போது இதனைப் பின்பற்றியுள்ளார்.



"அரசாங்கத்தை ஏமாற்றவும், கஷ்டப்படுத்தவும் வந்த புலிகள் இரகசியமாகப் பின்னடைவு கொண்டு விட்டனர்.

இதுவரை ஏற்றுக் கொள்ளப்பட்ட சம்பிரதாயங்களின்படி இரு சாராருக்கும் இடையில் போர் நிறுத்தம் அறிவிக்கப்பட வேண்டும். எனினும் அரசாங்கம் அதனை ஏற்றுக் கொள்ளாததினால் புலிகள் பக்கச் சார்பான போர் நிறுத்தத்தை அறிவித்துள்ளனர். இதுவும் பிரபாகரனது தந்திரமாகும்.

"கொலைகாரப் புலிகளுக்கு மனிதாபிமானம் ஏது? அவர்களுக்கு தேவை மனித இரத்தம் மட்டுமே. அதன்படி இவர்களுக்கு நாடு ஏது, மக்கள் ஏது, கலாசாரம் என்பது ஏது? பிரபாகரனுக்கு மக்களை கொன்று குவிக்கும் தேவை ஒன்றே உள்ளது. இதனால் அவர் மிகவும் சந்தோஷம் கொள்கிறார். ஒருவகையில் பார்த்தால் அவர் ஒரு மனநோயாளி என்றே கூற வேண்டியுள்ளது.

"பிரபாகரனுக்கு உள்ள ஒரே சவால் ஜனாதிபதி சந்திரிகா. இந்த பிரபலத் தலைமைத்துவம் அவருக்கு ஒரு தலையிடியாகும். பிரபாகரனுக்கு அடிபணியாது, அவரது தந்திரங்களுக்குட்படாது பலத்துடன் திகழும் அவர் நாட்டிற்கே ஒரு பலம் வாய்ந்த நபராக உள்ளார். இந்நிலைமை ஜே.ஆர்., பிரேமதாசா காலத்திலும் இல்லை எனலாம்.

"எமது இராணுவம் வளங்களை சிறப்பாகப் பயன்படுத்திக் கொண்டு புலிகளை அடக்க முயற்சிப்பது சிறப்பான செயல் என்றே கூற வேண்டும்.

"புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு அரசில் தீர்வு ஒன்று தேவையில்லாத போதிலும், ஏனைய தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு ஒன்று அவசியமாகவே உள்ளது. புலிகள் மீதான எரிச்சலைக் கொண்டிருக்கும் தமிழ் மக்கள் சமாதானமாக வாழ்வதற்கு அரசியல் தீர்வு ஒன்றைத் துரிதமாகப் பெற்றுக் கொடுக்க வேண்டியுள்ளது. எந்நாளும் அகதி முகாம்களில் வாழ வேண்டிய நிலை தமிழ் மக்களுக்கு இல்லை.

"புலிகள் ஏற்றுக் கொள்ளாத அரசியல் தீர்வொன்றை பிற மக்களுக்கு நாம் வழங்க வேண்டும். இதன்படி புலிகளின் தந்திரோபாயங்களை தகர்த்தெறிய உள்ள ஒரே வழி அரசியல் தீர்வாகும்.

"சிங்கள மக்கள் தமிழ் மக்களுக்கு எந்தவித அநீதியையும் இழைக்கவில்லை. சில அரசியல் வாதி களின் நடவடிக்கைகளைத் தவிர வேறு எந்த அநீதியையும் சிங்கள மக்கள் இழைக்கவில்லை எனலாம்.

"இதன்படி அனைத்து அரசியல் கட்சிகளும் தமது தனிப்பட்ட விரோதங்களை மறந்து ஒன்றிணைந்து ஜனாதிபதி சந்திரிகாவுக்கு ஆதரவு அளிக்க வேண்டும் என்பதையே கூற வேண்டியுள்ளது."

## புகைப்படங்களுக்கு 50 லட்சம்

ஜனாதிபதியின் மற்றும் அவரது பிள்ளைகளின் புகைப்படத்திற்கு லேக் ஹவுஸ் நிறுவனம் 50 லட்சத்தை செலவளித்துள்ளதாகத் தெரிய வருகின்றது.

சண்டே ஒப்சேர்வர், சிலுமின ஆகிய பத்திரிகைகளுடன் ஓகஸ்ட் 22ம் திகதி விநியோகிக்கப்பட்ட இப்புகைப்படங்களுக்கே இவ்வாறு பணம் செலவு செய்யப்பட்டது.

மக்களின் கோரிக்கைக்கேற்பவே மக்களின் விருப்பத்தை நிறைவேற்றும் முகமாக இப்புகைப்படங்கள் எடுக்கப்பட்டு பத்திரிகைகளுடன் விநியோகிக்கப்பட்டதாக ஆளும் கட்சி அமைச்சர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார் எனத் தெரிய வருகின்றது. ஆகா, மக்களின் ஆசையோ ஆசை! ⊙

நன்றி - நூலகத்திட்டம்



# மகேஸ்வரனைக் கொல்ல முயன்றனர்?

– சரிதன்

யாழ்ப்பாணத்தில் ஆட்கள் காணாமற் போகும் சம்பவங்கள் அதிகம் இடம்பெற்ற 1996, 97ஆம் ஆண்டு காலப் பகுதிக்குப் பின்னர் யாழ்ப்பாணத்தில் மனித உரிமைகளைப்பேணும் விடயத்தில் அதிக அக்கறை கொள்வதாகக் காட்டிக்கொள்ள பல நடவடிக்கைகளை படையினர் மேற்கொண்டனர். அவற்றில் ஒன்று கைதானோர் தொடர்பாக கைதை உறுதிப்படுத்தும் 'ரிஸீற்' ஒன்றை உறவினரிடம் வழங்குவது. கைது செய்யப்பட்டவரின் பெயர், விபரம், கைதான திகதி, கைது செய்த படைமுகாமின் விவரம் என்பன அதில் இருக்கும். இந்த 'ரிஸீற்' வழங்கும் நடைமுறை அமுலுக்கு வந்தபோது இனி கைதானோரின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் என்று அரசு பிரச்சாரம் செய்தது.

ஆனால், இன்றைய நிலை என்ன?

'ரிஸீற்' வழங்குவது ஒரு சம்பிரதாய நடவடிக்கை போன்று மாறிவிட கைதுகள் தொடர்ந்து அதிகரித்தே செல்கின்றன. ஆட்கள் கைதான பின் காணாமற்போகும் சம்பவங்கள் ஓரளவு குறைந்துள்ள போதிலும் கைதாகும் இளைஞர்களின் நிலை பின்னர் எப்படி அமைகிறது என்பது அதிர்ச்சி அளிக்கிறது. கைது செய்யப்பட்டவர்கள் படை முகாம்களிலோ, அல்லது தடுத்து வைக்கப்படும் இடங்களிலோ எவ்வாறு நடத்தப்படுகிறார்கள் என்பதைக் கண்காணிக்க மனித உரிமைகள் ஆணைக் குழுவினாலோ, அல்லது வேறு எந்த அமைப்பினாலோ இதனைக் கண்காணிக்க முடியாது. அதற்கு அனுமதியும் தரப்படுவதில்லை.

'சந்தேகத்தின் பேரில்' என்ற காரணம் கூறி விடுதலைப்புலிகள் அமைப்புடனோ அல்லது வேறு எந்தவகையிலும் சட்டத்துக்குப் புறம்பான நடவடிக்கைகளிலோ சம்பந்தப்படாத அப்பாவி இளைஞர்கள், மாணவர்கள் கைது செய்யப்படுகிறார்கள். அதற்காக உறவினரிடம் வழங்கப்படும் 'ரிஸீற்' மனித உரிமைகள் ஆணைக் குழுவிடம் சென்று முறையிட மட்டுமே உதவுகிறது. ஆணைக்குழு அதிகாரிகளும், அதை வாங்கிப் பதிவு செய்வதுடன், தம் கடமை முடிந்தது என இருந்து விடுகின்றனர். கைதானவர்கள் முகாம்களில் கடுமையாகத் தாக்கப்படுகின்றனர். விடுதலைப் புலிகள் என்ற சொல்லையே உச்சரிக்க அஞ்சி நடுக்கும் வகையில் சித்திரவதைகள் இடம்பெறுகின்றன. பின்னர் சில தினங்களில் பெற்றோரை முகாமுக்கு அழைத்து அவர்கள் முன்னிலையில் அவரை ஒப்படைத்து விடுதலை செய்கின்றனர். 'எழுந்து நடக்க முடியாத நிலையில் விட்டதே போதும்' என்று பிள்ளைகளை வீடுகளுக்குக் கூட்டிவந்து விடுகின்றனர் பெற்றோர். கடுமையான உட்காயங்களுடன் வீடு திரும்புவோர் பின்னர் நடைப் பிணங்களாகவே வாழ வேண்டி உள்ளது. அண்மையில் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்ட பலர் தொடர்ந்து ஆஸ்பத்திரிகளில் தங்கிச் சிகிச்சை பெற்றுவருகின்றனர். கடுமையாகத் தாக்கப்பட்ட பலர் உடல் உறுப்புகள் செயலிழந்த நிலையில் நிரந்தர நோயாளிகளாக மாறி உள்ளனர். யாழ் நகரில் உள்ள பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் பணியாளரான இளைஞர் ஒருவரும், கைது செய்யப்பட்டு ஊரெழு படைமுகாமில் வைத்துக் கடுமையாகத் தாக்கப்பட்ட பின்பு பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டார். அவரை விடுவித்தபோது 'படையினர் என்னைத் தாக்கவில்லை' என எழுதப்பட்ட கடிதம் ஒன்றில் கையொப்பம் பெற்றுக் கொண்ட பிறகே விடுவித்துள்ளனர். அந்த இளைஞரும் கடுமையான உள்காயங்களுக்காக ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறுகிறார். கைதாகும் பல இளைஞர்களது எதிர்காலம் இருள் சூழ்ந்ததாகிறது.

கைதானவர்களை விடுவித்து விடுகிறோம். அதை உறுதிப்படுத்த ரிஸீற் வழங்குகிறோம். இப்படிக்கூறி மனித உரிமைகளைப் பேணுவதில் சூரர்கள் என்றவாறு படையினர் பிரசாரம் செய்கின்றனர். ஆனால், உண்மையில் என்ன நடக்கிறது, கைதுகள் குறைந்தனவா, கைதானோரின் மனித உரிமைகள் மதிக்கப்படுகின்றனவா? மனித உரிமைகள் ஆணைக்குழு சுயாதீனமாக இயங்குவதற்கு அனுமதிக்கப்படுகின்றதா?

யாழ்ப்பாணத்தில் மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தின் பணிகள் ஏதோ பெயருக்கு மாத்திரமே நடக்கின்றன. அங்கு பொறுப்பான ஒரு இணைப்பு அதிகாரியோ அல்லது கள உத்தியோகத்தர்களோ இல்லை. மாவட்ட இணைப்பதிகாரியின் பணியை வேறு ஒருவர் மேற்கொண்டு வருகிறார். படையினர் சம்பந்தப்பட்ட மனித உரிமை மீறல் சம்பவங்களைத் தடுக்க



படைமுகாம்களுக்கே நேரில் சென்று விசாரணைகளை நடத்த ஆணைக்குழு அதிகாரிகளுக்கு அதிகாரம் உண்டு. ஆனால், தற்போது அப்படி எதுவும் நடப்பதாய் தெரியவில்லை.

மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ் அலுவலகத்துக்கு நிரந்தர இணைப்பு அதிகாரி ஒருவரை நியமிக்கும் அதன் பணிகள் தங்கு தடையின்றி நடைபெற வசதிகளைச் செய்யுமாறும் சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழு கடிதம் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

அண்மையில் மிருசுவில் சம்பவத்தின் போது படையினரால் எட்டு பொதுமக்கள் கொடூரமாகக் கொன்று புதைக்கப்பட்டனர். அந்த சம்பவத்தின்போது தப்பிவந்த முக்கிய சாட்சியான பொன்னுத்துரை மகேஸ்வரனை எப்படியாவது மீண்டும் பிடித்துக் கொன்று விடுவதன் மூலம் புதைகுழி தொடர்பான தகவல்களை மூடிமறைக்க அப்பிரதேச படையினர் ஆரம்பத்தில் முயன்றுள்ளனர். மகேஸ்வரனைக் கூட்டிவந்தால் ஏனைய எண்மரையும் விடுவிப்பதாக தேடிச்சென்ற உறவினர்களிடம் சில படையினர் கூறியிருக்கின்றனர். அது குறித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவினரிடம் சென்று முறையிட்டபோது 'நீங்கள் மகேஸ்வரனைக் கூட்டிக் கொண்டுபோய் படையினரிடம் கொடுங்கள். அவர்கள் விட்டுவிடுவார்கள்' என்றவாறு ஆணைக்குழு அதகாரிகள் தரப்பில் ஆலோசனை கூறப்பட்டதாம்.

யாழ்ப்பாணத்தில் மனித உரிமைகள் ஆணைக்குழு செயற்படுகின்ற சீர்த்துவத்தை இதன் மூலம் விளங்கிக்கொள்ள முடிகிறது அல்லவா?

⊙

---

# யாழ் மக்களும் நிவாரணமும்

– பரமர்

யாழ்ப்பாணத்தில் வலிகாமம், வடக்கு, தென்மராட்சிப் பிரதேசங்களைச் சோந்த சுமார் 70,000 குடும்பங்கள் இடம்பெயர்ந்து (தமது இருப்பிடங்களுக்குப் போக முடியாத நிலையில்) வாழ்ந்து வருகின்றனர். இவர்களைவிட குருநகர், பாஷையூர், கொழும்புத்துறை, அரியாலைப் பகுதி மக்களும் இடம்பெயர்ந்து வசித்து வருகின்றனர். இவர்களில் 80 வீதமானோர் வறுமைக் கோட்டிற்குக் கீழேயே வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களில் அரசாங்க உத்தியோகத்தர்களைத் தவிர ஏனையோர் தொழில் வாய்ப்பற்ற நிலையிலேயே காணப் படுகின்றனர். இவர்களில் 1500 ரூபாவுக்கு குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு ஒரு ஆளுக்கு 150 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருட்களும், ஐந்து பேர் கொண்ட குடும்பத்திற்கும், ஐந்திற்கு மேற்பட்ட அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பங்களுக்கு 600 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருட்களும் நிவாரணமாக வழங்கப்பட்டு வருகிறது.

யாழ் மாவட்டத்தில் கணிசமானளவு குடும்பங்கள் நிவாரணத்தை நம்பியே தமது காலத்தைக் கழித்து வருகின்றன. இப்போது நிவாரணம் பெறும் குடும்பங்களின் எண்ணிக்கையை அரைவாசியாகக் குறைப்பதற்கு அரசு முடிவு செய்துள்ளது. அரசாங்கத்தின் உத்தரவைச் செயற்படுத்துவதிலும், கண்ணியம் தவறாத யாழ் செயலக அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

யாழ் செயலக அதிகாரிகள் இதன் முதற்கட்டமாக வறுமைக்கோட்டு எல்லையை 1500 ரூபாவிலிருந்து 750 ரூபாவாகக் குறைக்கத் திட்டமிட்டுள்ளனர். இதற்காக உலர் உணவு அட்டைகளை மீளாய்வு செய்ய அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர். ஆனால், கடந்த இரு வருட காலப்பகுதியில் ஆறு தடவைகள் உலர் உணவு அட்டைகள் மீளாய்வு செய்யப்பட்டுவிட்டன.

உலர் உணவு அட்டைகள் மீளாய்வு செய்யப்படும்போது இவர்கள் சொல்லும் காரணம் மோசடிகளைத் தவிர்ப்பதற்காக என்பதே. ஆனால், ஒரே உத்தியோகத்தரே மீளாய்வு நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றார்.

இதைவிட 1500 ரூபா வறுமைக் கோட்டு எல்லை என்பது அமைச்சர் அஷ்ரஃப் சமூக சேவைகள் அமைச்சராக இருந்தபோது 1990ம் ஆண்டு தீர்மானிக்கப்பட்டது. அத்துடன் 1500 ரூபா வறுமைக்கோட்டு எல்லை என்பது இலங்கை முழுவதற்கும் பொதுவாகத் தீர்மானிக்கப்பட்டது. தற்போது வாழ்க்கைச் சுட்டெண் 500 வீதம் அதிகரித்துள்ளது. அத்துடன் யாழ்ப்பாணத்தில் சகல பொருட்களும் கிலோவுக்கு ஏழு ரூபா வரையில் கூடுதலாக வைத்து விற்பனை செய்யப்படுகின்றன.

இந்த ரீதியில் பார்த்தால் வறுமைக் கோட்டு எல்லை தற்போது உள்ளதிலிருந்து இரண்டு மூன்று மடங்கு அதிகரிக்கப்பட வேண்டும். தமிழ் மக்களின் வயிற்றிலடிக்கும் இந்தத் திட்டத்திற்கு வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சரும் ஏனைய தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களும் என்ன சொல்லப்போகிறார்கள்.

⊙

---

# சபாஷ்!

யாழ் சென் ஜோன்ஸ் அம்புலன்சை சேர்ந்த மாணவர்கள் கொழும்பு வந்து தங்கள் திறமைகளைக் காட்டியதை தொலைக்காட்சிகளில் காட்டி மகிழ்ந்தார்கள்.

தாம் இங்கு வருவதற்கு தமக்கு எந்த உதவியும் வழங்கப்பட வில்லை: குறைந்தபட்சம் போக்குவரத்து செலவு கூட தரப்படவில்லை. மாணவர்கள் தமது சொந்தப் பணத்திலேயே வந்து திருமலையில் தங்கியிருந்தார்கள் என்று தெரிவித்தார்கள்.

இலங்கையின் தேசிய கீதம் அவர்களால் சிங்களத்தில் பாடப்பட வேண்டும் என்று கூறி அதிகரிகள் நிர்ப்பந்தித்ததாக கேள்வி. தேசிய கீதம் இரண்டு மொழிகளில் பாடப்படக் கூடாது என்ற விதித்திரக் கோட்பாட்டை கொண்ட ஒரு நாடல்லவா இது? அவர்கள் சிங்களத்திலேயே பாடினார்கள்.

அவர்களுக்கு போக்குவரத்து செலவை தான் தருவதாக அமைச்சர் டக்ளஸ் கூறி, ஒருபகுதியை வழங்கியதாக கூறப்படுகின்றது.

உடனே கூட்டணியும் அவசர அவசரமாக முந்திக்கொண்டு, அம்புலன்ஸ் மாணவர்களுக்கு அவர்களுக்கு தேவையான வாத்தியக் கருவிகளை வாங்கித்தரப் போவதாக அறிவித்ததாம்.

சபாஸ்! எப்படியாவது நல்லவிஷயம் நடந்தால் சரி!

⊙

நன்றி - நூலகத்திட்டம்



# தமிழ்க் கைதியின் படுகொலை! தலைகுனிவு யாருக்கு?

2000 ம் ஆண்டு புத்தாண்டு அப்பாவி தமிழ் கைதிகள் இருவரின் படுகொலையுடன் ஆரம்பமானது யாவரும் அறிந்ததே. 2000 ஜனவரி 6ம்,7ம் திகதிகளில் இடம் பெற்ற களுத்துறை சிறைக் கூட காவலாளிகளுடனான மோதலில் இரு தமிழக் கைதிகள் உயிரிழந்தனர்.

மீண்டும் ஒரு தமிழ் இளைஞனின் படுகொலையுடன் இம்முறை புத்தாண்டு பிறந்துள்ளது. திருகோணமலை நிலாவெளியைச் சேர்ந்த 25 வயதான சண்முகதாசன் நித்தியதாசன் ஜனவரி 4 ம் திகதி காலை சிறைச்சாலைக்குள் பிணமாக மீட்கப்பட்டார்.

ஜனவரி காலை 6 மணிக்கு களுத்துறை சிறைச்சாலையின் சி-3 பிரிவு கதவினை திறந்த சிறைக்காவல் அதிகாரிக்கு முதல்நாளிரவு அடைக்கப்பட்ட 34 கைதிகளில் 33 பேர் மட்டுமே வெளியேறியது அதிர்ச்சியை ஏற்படுத்தியது. துரிதமாக அறையைப் பரீட்சித்துப் பார்த்த அதிகாரிகள் ஒரு கைதி இரத்த வெள்ளத்தில் இறந்து கிடப்பதைக் கண்ணுற்றுள்ளனர் என்று தகவல் தெரிவிக்கின்றனர் சிறைச்சாலை வட்டாரத்தினர்.

இரத்த வெள்ளத்தில் கழுத்து அறுபட்ட நிலையில் இறந்து கிடந்தார் சண்முகதாசன் நித்தியதாசன்,



படுகொலை செய்ய பாவிக்கப்பட்ட ஆயுதம்

திருகோணமலை விசேட பொலிஸ் பிரிவினரால் 1998 ஒகஸ்ட் மாதம் 10ம் திகதி, புலி உறுப்பினரானமை, ஆயுதப் பயிற்சி பெற்றிருந்தமை, அரசியல் தலைவர்களைப் படுகொலை செய்வதற்காக திட்டம் தீட்டியமை, எண்ணெய் குதங்களை தகர்த்தெறிய திட்டம் தீட்டியமை போன்ற காரணங்களுக்காக கைது செய்யப்பட்டிருந்தார். ஆயினும் இவர் சில தினங்களின் பின்னர் விடுவிக்கப்பட்டார். பின்னர் திரும்பவும் புலிகளின் சார்பாக நிதி சேகரித்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். இச்சந்தர்ப்பத்திலேயே அவர் கொலையுண்டுள்ள இச்சம்பவம் நடந்து முடிந்திருக்கின்றது.

களுத்துறை சிறைச்சாலையைச் சேர்ந் இளைஞர் கொல்லப்பட்ட இந்த சி பிரிவு கட்டிடம் இரண்டு மாடிகளைக் கொண்டதாகும். இதில் சி-2 மற்றும் சி-4 ஆகிய பிரிவுகள் மேல் மாடியிலும், சி-1 மற்றும் சி-3 ஆகிய பிரிவுகள் கீழ் மாடியிலும் அமைந்துள்ளன. சி-3 பிரிவில் விடுதலைப் புலிகள் என்ற சந்தேகத்தின் பேரில் 34 பேர் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். அங்கு கைதிகள் மலசல கூடத்திற்கு செல்வதற்கென உட்கதவு திறக்கப்பட்டிருக்கும் என் அறியக் கிடைக்கின்றது. ஜனவரி 3ம் திகதி அதிகாலையில் மூன்று மணியளவில் அந்த பிரிவில் முனகல் சத்தம் கேட்டுள்ளது என்றும், அது யாரோ கெட்ட கனவு கண்டு கத்தியதாகத் தாம் நினைத்ததாகவும் சக கைதிகள் தெரிவித்துள்ளனர்.

படுகொலைக்கு பயன் படுத்தப்பட்ட கத்தி போன்ற கூர்மையற்ற ஆயுதம் அசுத்தநீர் நிரம்பிய நீர்நிலையில் கிடந்து கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இவ் ஆயுதம் தகர வாளியின் அடிப்பாகத்தைப் பயன்படுத்தி செய்யப்பட்டுள்ளது எனவும் அறியக் கிடக்கிள்றது.

எவ்வாறெனினும், இக்கோரக் கொலை தனிப்பட்ட விரோதத்தின் பேரில் மேற்கொள்ளப்பட்டதாகவே மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணையும் பொலிஸ் விசாரணையும் தீர்ப்பளித்துள்ளன. ஆனால் அந்த தனிப்பட்ட விரோதம் என்ன, அப்படிப்பட்ட விரோதங்கள் உருவாதலுக்கு காரணம் என்ன? தனிப்பட்ட விரோதமுள்ள இருவர் ஒரே



கொல்லப்பட்ட நித்தியதாசன்

சிறையில் விடப்படலாமா போன்ற கேள்விகட்கு எந்தப் பதிலும் இதுவரை இல்லை.

தனிப்பட்ட விரோதத்தின் (?) காரணமாக களுத்துறைச் சிறைச்சாலையில் எத்தனையோ அப்பாவித் தமிழ் கைதிகள் படுகொலை செய்யப்பட்டதாக முன்பும் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படிக் கொல்லப்பட்டவர் பட்டியலில் இச்சம்பவமும் ஒன்றாக இணைந்து விட்டது.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு நீதியினை எதிர்பார்த்து விரைவில் தமது குடும்பத்தாருடன் இணைந்து வாழ வேண்டும் என்ற ஆர்வம் கொண்டு காத்திருக்கும் ஒவ்வொரு கைதிக்கும் இச்சம்பவம் அதிர்ச்சியையே ஏற்படுத்தி விட்டுள்ளது. இந்தப் படுகொலை ஏற்படுத்தியுள்ள தலைகுனிவு யாருக்கு?

⊖

# பத்திரிகையாளரைத் தாக்கிய மாணவர்கள்

கடந்த வியாழக் கிழமை யாழ் பல்கலைக்கழகத்திற்குச் செய்தி சேகரிக்கச் சென்ற உதயன் பத்திரிகை நிருபர் என்.கே.துரைசிங்கம் சில பல்கலைக்கழக மாணவர்களால் தாக்கப்பட்டுள்ளார். இவரைத் தாக்கிய இக்கும்பல் பிடித்துக் கட்டுங்கோடா, அடித்துக் கொல்லுங்கோடா என்று கோஷமிட்டதுடன் சைக்கிளுக்குக் காற்றைத் திறந்து விட்டு வால்வ் கட்டைகளையும் கழற்றி வீசியுள்ளது.

இந்தச் சம்பவத்தைக் கண்டித்து அறிக்கைவிட்ட வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்தலைவர் கதிர்காமத்தம்பிக்கும், தொலைபேசியில் கொலைப்பயமுறுத்தல் விடுத்துள்ளனர். அதுவும் என்னவென்று தெரியுமா? நிமலராஜனுக்கு நடந்தது தெரியும் தானே என்று. (இவர்கள் தான் நிமலராஜனின் கொலையைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் செய்தவர்கள். அப்போது சொன்னார்கள்: நிமலராஜனின் கொலையைக் கண்டு ஏனைய பத்திரிகையாளர்கள் அஞ்சத் தேவையில்லை. அவர்களுக்குப் பின்னால் பல்கலைக்கழகம் அணிதிரளும் என்று)

படையினருக்கும் தமிழ்க் குழுக்களுக்கும் பயந்த காலம்போய் இப்போது பல்கலைக்கழக மாணவர்களுக்குப் பத்திரிகையாளர்கள் பயப்பட வேண்டிய காலம் வந்து விட்டது போலிருக்கிறது. இவர்கள் ஏற்கெனவே உதயன் காரியாலயத்திற்கு கல் வீசியதுடன், பத்திரிகையைத் தீயிலிட்டும் கொளுத்திய வீரர்கள். துரைசிங்கம் தாக்கப்பட்ட போது சிலர் "இவர்கள் (பத்திரிகையாளர்கள்) படிப்பறிவில்லாதவர்கள். மழை பெய்தால் பல்கலைக்கழகத்திற்குள் ஒதுங்குபவர்கள். இவர்களுக்கு என்ன தெரியும்" என்று கிண்டல் செய்தார்களாம்.

நல்லது, இவங்கள் எல்லாம் தூங்கிக் கிடந்த போது இந்தப் படிப்பறிவில்லாதவர்கள் தான் தமிழ் மக்களுக்கெதிரான ஒடுக்குமுறை பற்றிக் குரலெழுப்பினார்கள்.

அநீதியை அம்பலப்படுத்தினார்கள். நியாயத்திற்காக தங்கள் எழுதுகோலைப் பயன்படுத்தினார்கள். ஏன் தங்கள் உயிரையே கொடுத்தார்கள்.

புரிகிறதா? என்று கேட்கிறார் புண்பட்டுப் போன பத்திரிகையாளர் ஒருவர்.

⊖

## வேல் பாய்ச்சாதீர்கள்!

புலிகளின் போர் நிறுத்த அறிவிப்பு வெளியிடப்பட்டு இரண்டு வாரங்கள் கடந்துவிட்டன. யுத்த நிறுத்த அறிவிப்பை சொன்னபடியே புலிகள் நடைமுறைப்படுத்தி வருகிறார்கள். ஆனால், புலிகளின் இந்த அறிவிப்பை ஒரு கபட நாடகம் என்று வர்ணித்த அரசாங்கம் குடாநாட்டுக்குள் முடிந்தளவு பிரதேசங்களை கைப்பற்றுவதில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. பிடிபட்ட பிரதேசங்களில் பொது மக்களை குடியேற்றவும் அது முயன்று வருகிறது.

இந்த முயற்சி மக்களுக்கு ஆபத்தை தரக் கூடியது: மக்களை பகடைக் காய்களாக பயன்படுத்தும் உள்நோக்கம் கொண்டது என எச்சரிக்கிறது ரெலோ.

ஆனால், இப்போது அரசாங்கம் ஒரு புதுக்கதையை தொடங்கி விட்டிருக்கிறது. புலிகள் தங்களுக்கு போர் நிறுத்தத்தை உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை. அறிவித்திருந்தால் அதைப்பற்றி யோசித்திருக்கலாம் என்பது தான் அது.

நோர்வேயூடாக போர்நிறுத்தததுக்கு அழைப்பு விட்டிருக்கலாம். அப்படியானால், அரசின் பதில் சாதகமாக இருந்திருக்கும் என்று சொல்கிறார் நெதர்லாந்து தூதுவர்.

படிக்கும்போது சிரிப்பதா, அழுவதா என்று தெரியாத திகைப்பு ஏற்படுவதை தவிர்க்க முடியவில்லை.

யுத்த நிறுத்தத்தை 'நேரே சொன்னால் தான் நிறுத்துவோம் என்று சொல்கிற அரசாங்கத்திற்கும், டச்சுத் தூதுவருக்கும் யுத்தம் ஏதோ காசுக் கொடுக்கல் வாங்கல் விவகாரம் போல தெரிகிறது போலும்.

பண்டிகை- கிறிஸ்மஸ், முதல் பொங்கல்வரையான - காலத்தை முன்னிட்டு புலிகள் அறிவித்த இந்த அறிவிப்பை அரசைவிட மக்களுக்கு அறிவிப்பது தான் என்று புலிகள் நினைத்து நியாயமே. ஏனென்றால், அவர்களுக்குத் தான் பண்டிகையை கொண்டாட அது அவசியம். அரசாங்கத்துக்கல்ல.

அரசாங்கத்திற்கு யுத்தத்தை தற்காலிகமாவேணும் நிறுத்தி மக்களுக்கு மூச்சுவிட அனுமதிக்கும் அக்கறை இருந்திருந்தால் இந்தச் சாக்குபோக்கு அவசியமில்லை.

முடக் கழுதைக்கு சறுக்கியது சாட்டு என்பதைப்போன்று இருக்கிறது அரசின் அறிவிப்பு.

செய்வதையும் செய்து கொண்டு, யுத்தத்தில் விருப்பமில்லை என்று சமாதானவாதிகளாக நடிக்கவும் அது ஆசைப்படுகிறது.

செய்மதியில் பேசிய அம்மையார் புலிகள் யுத்தத்தைக் கைவிடவேண்டும் என்று தமிழ் மக்ளை நிர்ப்பந்திக்குமாறு கோருகிறார்.

ஒரு தற்காலிகமான போர் நிறுத்தல் அறிவிப்பையே உதாசீனம் செய்து தீவிரமாக யுத்தத்திலீடுபட்ட, புதைகுழிகளுக்குள் பொதுமக்களைப் புதைத்த அரசின் தலைவிக்கு இப்படிக் கேட்க என்ன தார்மீக நியாயம் இருக்கிறதோ தெரியவில்லை.

தார்மீகமாவது மண்ணாங் கட்டியாவது, வெற்றிபெற கிடைக்கிற குடாநாட்டை நசுக்கக்கிடைக்கிற ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் பயன்படுத்த நினைக்கிற அரசுக்கு தார்மீகம் பற்றி என்னதான் கவலை.

ஒத்துாதுகிற தூதரங்கள் இதைப்பற்றி அலட்டிக்கொள்ளாவிட்டால் பரவாயில்லை: குறைந்த பட்சம் மௌனமாக இருக்கலாம்.

தமிழ் மக்களின் மனதிலேயே 'வெந்தபுண்ணில் வேல்பாய்ச்சும்' செயலை செய்யவில்லை என்ற நிம்மதியாவது இருக்கும்.

## இனப்படுகொலை?

களுத்துறை சிறையில் தமிழ்க்கைதி ஒருவர் வெட்டிக்கொல்லப்பட்ட பரிதாப நிகழ்வு ஒன்று திரும்பவும் நிகழ்ந்திருக்கிறது.

'இம்முறை வெட்டிக்கொன்றது கைதிகள் தான்' என்றாலும் அவர்கள் தமிழ்க் கைதிகள் என்பதால் இதை இனப்படுகொலை என்று சொல்ல முடியாது என்று பேசப்படுகிறது.

இனப்படுகொலை என்பது செய்பவர்கள் தமிழரா இல்லையா என்பதைத் வைத்துத் தீர்மானிக்கப்படும் ஒன்றா என்பதை இப்படிச் சொல்பவர்கள் கொஞ்சம் சிந்திப்பது நல்லது.

அப்படியானால், கதிர்காமர் கூட பேரினவாதி அல்ல என்று ஆகிவிடுவார்...?

களுத்துறை தமிழ்க்கைதிகளுக்கு பாதுகாப்பான இடம் அல்ல என்று கைதிகள் முதல் மனித உரிமையாளர்கள் வரை தொடர்பு ஊடகங்கள் முதல் அரசியல்வாதிகள் வரை எல்லோராலும் சொல்லப்பட்டு விட்டது.

ஆயினும், அரசு அக்கறை காட்டுவதாக தெரியவில்லை. திரும்பத்திரும் தமிழ்க் கைதிகளை அங்கே அனுப்பிவைக்கிறது. அவர்கள் கொல்லப் படுவதற்கான சூழலை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது.

நீதித்துறைக்கு இதுபற்றி அக்கறை இல்லை. இனவாதம் ஆட்சிக் கோட்பாடாக மாறியபின் நீதியும் இது சரி என்று நினைக்குதோ என்னவோ?

ஆனால், இதில் வேடிக்கை என்னவென்றால், தாம் இனப்பாகுபாட்டற்று செயற்படுவதாக அடிக்கொருதடவை எல்லோரும் உச்சரித்துக் கொண்டிருப்பது தான்.

அது சரி, கைதிகளிடமிருந்து கொலைக்கான உண்மைக்காரணம் அறியப்பட்டுவிட்டதா? அல்லது அவர்கள் மௌனமாக இருக்கமாறோ, சொல்லிக் கொடுத்ததை சொல்லுமாறோ மிரட்டப்பட்டார்களா?

யார் தான் பதில் சொல்வார்கள்?

⊖

நன்றி - நூலகத்திட்டம்



# தேசிய விடுதலையும் மனநோயாளிகளும்...

**- நாசமறுப்பான்**

இலங்கை அரசாங்கத்தின் அமைச்சரவைக் கூட்டங்கள் அடுத்தடுத்து நடாத்தப்பட்ட போதும் யுத்த நிறுத்தம், பேச்சுவார்த்தை என்ற விடயங்கள் தொடர்பாக எந்தவிதமான தீர்மானங்களும் இன்றி அவை முடிவடைந்துள்ளன.

ஓரளவுக்கு இந்த நிலைமை எதிர்பார்க்கப்பட்டது தான்.

முடிந்தளவுக்குப் புலிகளை இராணுவ ரீதியில் பலவீனப்படுத்திய பின்னரே பேச்சுவார்த்தையில் இறங்குவது பற்றி யோசிக்கலாம் என்ற நிலைப்பாட்டில் அரசாங்கம் இருப்பது ஆச்சரியத்தை தரக்கூடிய ஒரு விடயம் அல்ல. பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா உள்ளிட்ட அனைத்துக் கடும்போக்காளர்களும் மற்றும் படை யணிகளும் இத்தகைய ஒரு முடிவுடன் செயற்படுவது எதிர்பார்க்கக் கூடிய ஒன்று தான். ஏனென்றால், அவைக்கு இந்தப் பேச்சுவார்த்தை என்பது ஒரு உடனடியான வாழ்க்கைப் பிரச்சினை அல்ல: அவர்களது அன்றாட செயற்பாட்டுக்கும் இருப்புக்கும் அவசியமான ஒன்று அல்ல. பொருட்களின் விலையேற்றம், வரி அதிகரிப்பு, ரூபாய் மதிப்பிறக்கம், அன்னிய உதவிகள், உள்நாட்டு வெளிநாட்டுக் கடன்கள் போன்றவற்றின் மூலம் இந்த யுத்தத்தை நடாத்திக் கொண்டிருப்பதில் அதைத் தொடர்வதில் அவர்களுக்கு உடனடியான நெருக்கடிகள் எதுவும் இல்லை. வெளிநாட்டு அரசுகளும், சர்வதேச சமூகமும் உள்நாட்டிலும் ஒரு சில பெரியளவு சக்தி அற்ற ஜனநாயகக் குழுக்களும் சமாதானம் குறித்த அரசின் செயற்பாட்டை விமர்சிக்கின்றார்கள் என்ற போதும் நடைமுறையில் அவை எத்தகைய பாதிப்பையும் பெரியளவில் செய்து விடவில்லை.

இலங்கை அரசின் இருப்பே, சிங்கள பௌத்தத்தைப் பாதுகாப்பது, வளர்த்தெடுப்பது என்ற கோட்பாடுகளின் அடித்தளத்தில் கட்டி எழுப்பப்பட்ட ஒன்று என்ற வகையில் அவற்றைச் செயற்படுத்துவதிலேயே தங்கியுள்ளது. மாறி மாறி வந்த எல்லா அரசாங்கங்களும் இந்த இருப்பைத் தக்க வைத்துக் கொள்வதில் தமது தீவிரத் தன்மையையும் அக்கறையையும் முடியுமானளவுக்குக் காட்டி வந்திருக்கின்றன. இதைச் சரிவரச் செய்ய முடியாத, அல்லது அதில் அக்கறை காட்டாத அரசாங்கம் என்று சுதந்திரத்திற்குப் பின்னான எந்த ஒரு அரசாங்கத்தின் மீதும் குற்றம் சாட்டி விட முடியாது. அரசாங்கம் கைமாறுகின்ற போதெல்லாம், அந்தக் கைமாறுதலுக்குப் பிரதான காரணமாக இருந்தவை இந்த விடயங்களில் அதிக சிரத்தை எடுப்பவர் யார் என்ற கேள்வியே சுதந்திரத்திற்குப் பின்னான ஆரம்ப காலங்களில் இருந்து. 1977 இல் ஆட்சிக்கு வந்த ஜே.ஆர் அரசாங்கம் 1978 ல் கொண்டு வந்த புதிய அரசியல் யாப்பு மூலம் இந்தக் கேள்விக்கு இனிமேலும் இடமில்லாத விதத்தில் இவ்விடயம் நிறுவனமயப்படுத்தப்பட்டு ஸ்திரப்படுத்தப்பட்டு விட்டது. இந்த நிறுவனமயமாக்கலும் ஸ்திரமாக்கலும் தனது சக்தியை வெளிப்படுத்த எடுத்துக் கொண்ட நடவடிக்கையின் ஒரு விளைவு தான். 1983 இல் நடந்த இனக்கலவரம். தமிழர்களை ஒரு இனம் என்ற அடிப்படையில் முழுக்க முழுக்க ஒதுக்கப் போகிறோம் என்ற செய்தியை எழுதிய இந்தக் கலவரம், அதுவரை காலமும் இருந்து வந்து கொஞ்ச நஞ்ச 'அதிகாரப் பகிர்வு' வாய்ப்புக்களையும் முற்றாக இழுத்து மூடிவிட்டதற்கான ஒரு சமிக்ஞையாக நடந்து முடிந்தது.

ஆனால், வரலாறும், வரலாற்று நிகழ்வுகளும் ஒருவருடைய தனிப்பட்ட விருப்பத் தேர்வின் அடிப்படையில் நிகழ்வதில்லையே. இந்த இன ஒதுக்கலுக்கெதிரான எதிர்ப்பு தமிழர்கள் மத்தியிலிருந்து தீவிரமான ஆயுதமேந்திய போராட்டமாக மாறிற்று.

'தேசிய விடுதலை' என்ற முழக்கத்துடன் நடந்த இந்தப் போராட்டம் தமிழ் தேசியத்தினை ஒருமுகப்படுத்தி ஸ்திரப்படுத்தும் செயலில் இன்னொரு மட்ட வளர்ச்சியை ஏற்படுத்தியது. முரண்பட்ட இரண்டு தேசங்களுக்கிடையிலான யுத்தமாக இந்த யுத்தம் மாறியது. வெறும் உள்நாட்டு கிளர்ச்சியாளர்கள் - கலவரம் என்ற நிலை மாறி ஒடுக்கப்படும் ஒரு தேசிய இனத்தின் விடுதலைக்கான ஆயுதமேந்திய போராட்டம் என்ற நிலைக்கு இது வளர்ச்சி கண்டது. இன்று இங்குள்ள பிரச்சினையை வெறும் சராசரி உரிமைகளுக்கான போராட்டம் என்ற நிலையைக் கடந்த ஒன்று என்பதை இவ்வளர்ச்சி நிறுவிக் காட்டியது.

ஆனால், துரதிர்ஷ்டம் என்னவென்றால், இந்த உண்மையை தமிழ் தரப்பு புரிந்து கொண்டிருக்கும் அளவுக்கு சிங்களத் தரப்புப் புரிந்து கொண்டதாக இல்லை. அது புரிந்து கொள்வதற்கு தயாரற்ற ஒரு நிலையில் இருந்தபடியே உண்மையைத் தரிசிக்க விடாப்பிடியாக மறுத்து வருகிறது. தமிழ்த் தேசியத்தின் உரிமைக்கான போராட்டத்தை 'பயங்கரவாதம்', அதிகாரவெறி' போன்ற சொற்களுக்குள் போட்டுக் குழப்பி தனக்கும் தனது நாட்டிற்கும் தனது எதிர்கால சந்ததிக்கும் மாபெரும் அநியாயத்தை ஏற்படுத்துகின்ற யுத்தத்தில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது.

இவ்வாறான ஒரு சிந்தனைத் தளத்தில் இருக்கும் அரசு, சிங்கள பேரினவாத நிலைக்கு, தமிழ் தேசிய இனத்தை அடக்கி ஒடுக்கி வெற்றி கண்டுவிட முடியும் என்ற நம்பிக்கைச் சிறையிலிருந்து விடுபடுவதற்கான வாய்ப்பு மிகவும் குறைவே. சந்திரிகா குமாரதுங்கவிடம் இது பற்றிய பருமட்டான புரிதல்கள் அவர் ஆட்சிக்கு வந்த புதிதில் இருந்தது உண்மை தான். ஆனால், பேரினவாத ஒடுக்குமுறை அரசின் தலைவியாக அவர் மாறியதும் அவர் அந்த இயந்திரத்தை இயக்கும் ஒருவர் என்ற நிலைக்கு வீழ்ச்சி அடைந்து விட்டார். அவரது அரசியல் தெளிவும், பார்வை வீச்சும் இந்தப் பொருத்தமற்ற பதவியைத் தேர்ந்தெடுத்தல் என்ற முடிவின் காரணமாக மழுங்கடிக்கப்பட்டு விட்டன.

அற்ப சலுகைகளுக்காகவும், தனிப்பட்ட லாபங்களுக்காகவும் அவரை அண்டிப் பிழைக்கும் நோக்குடன் அவருடன் கூட்டுச் சேர்ந்த தமிழ், சிங்கள புத்திஜீவிகளும், ஆலோசகர்களும் அவரது புதிய இருப்புக்கு நியாயம் கூறும் 'அந்தணர்கள்' ஆகச் செயற்பட்டனர். எல்லாவற்றிற்கும் இருக்கும் நிலைமைக்கேற்ப நியாயம் கூறி, குற்றம் செய்வதை உரிமையாக்கி, தண்டனைக்குப் பதில் பிராயச்சித்தத்தை செய்யும் வழிகளைக் காட்டி அவரை இல்லாமலாக்குவதில் வெற்றி பெற்றனர்.

உண்மையில் இந்த 'அந்தணர்கள்' இதனால் பெற்ற லாபம் எல்லாம் வெறும் தனிப்பட்ட லாபம் தான். ஆனால், அவர்கள் என்றென்றைக்குமாக இந்த நாட்டின் இரு தேசிய இனங்களுக்கும் விடுதலையற்ற ஒரு எதிர்காலத்தை உருவாக்கும் வரலாற்றுத் துரோகத்திற்குச் சந்திரிகாவை உள்ளாக்கி விட்டிருக்கின்றனர். சந்திரிகாவும் பதவிச் சுகத்தில் அமிழ்ந்து தனது தகப்பனாரைப் போலவே தன் அறிவுத் துணிபுக்கு எதிரான செலவில் ஈடுபட்டு வருகிறார். வரலாறு இதையும் துரோகம் என்றே பதிவு செய்யும் என்பதைச் சொல்லத் தேவையில்லை.

சிங்கள பௌத்தம் தனது ஆட்சியின் ஸ்திரப்பாடு என்பது பிற தேசிய இனங்களின் சுதந்திரத்தை நசுக்கி, அவர்களின் வளர்ச்சியை ஒடுக்கி வைப்பதன் மூலமே சாத்தியம் என்கிற முட்டாள் தனமான மரபார்ந்த சிந்தனைக்குள் கிடந்து உழல்வதால அது மேலும் நிலைமையை சிக்கலானதாக்கி வருகிறது: தமிழ் மக்கள் மீதும், பிற இனக் குழுமங்கள் மீதும் கட்டற்ற ஒடுக்குமுறையை கட்டவிழ்த்து விடும் மனோவியாதிக்குட்பட்ட ஒன்றாக மாற்றிவிட்டுள்ளது.


'பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க இந்த மனோவியாதியின் பிரதிநிதி. அவர் வெளிப்படுத்தும் கேலிக் கூத்தான கருத்துக்கள் நோயின் தீவிரத் தன்மையை வெளிப்படுத்துகின்றன. அதைச் சரியானதாகவும், இயல்பானதாகவும் ஏற்றுக் கொள்கிற அரசாங்கமும் அதன் தலைவர்களும் இந்த நோய்ச் சூழலையே இயல்பு நிலை என்று கருதும் நிலைக்கு மோசமடைந்து விட்டனர்.

இந்த நிலையில், புலிகள் பலவீனமடைந்து விட்ட பின்னரே பேச முடியும் என்று அவர்கள் நினைப்பதில் எந்தப் புதுமையும் இல்லை.

புலிகளுடன் பேச வேண்டிய அவசியம் எதுவும் அரசுக்கு இல்லை என்பது போலவும், இராணுவ வெற்றி மூலம் எதையும் சாதித்துவிடலாம் என்பது போலவும் தமது தற்காலிக வெற்றிகளை நிரந்தர வெற்றிகளாக நம்பும் ஒரு அரசியல் தலைமையின் வரலாற்றுக் குருட்டுத்தனம் இதை விட வேறெந்த முடிவையும் எடுக்க அனுமதிக்கப் போவதில்லை!

படுகொலைகளும் புதைகுழிகளும் மலிந்த, கிராமங்கள் தோறும் இளஞ்சந்ததி பலியிடப்படுகின்ற, வறுமையும் துயரமும் நிறைந்த ஒரு நாட்டினை நோக்கி இந்தச் செயற்பாடுகள் சென்று கொண்டிருப்பதை எதிர்ப்பதற்கு திராணியுள்ள எதிர்க்கட்சிகள் எவையும் இல்லை. பௌத்த சிங்கள பேரினவாதத்தின் தளத்தில் நின்றபடி இதை அவர்களால் புரிந்து கொள்ளவும் முடியாது. பிரச்சினையை ஒரு புறவயமான பொருளாக எடுத்து ஆராய முயலும் பக்குவத்தை அவையும் வந்தடையவில்லை. அப்படி முடிந்தாலும் அடுத்த அரசாங்கத்தை அமைப்பதற்கு அது அவசியமற்ற, சரியாகச் சொல்வதானால் எதிரான ஒரு நடவடிக்கையாக இருக்கும் என்பது அவர்களது அச்சமாக இருக்கிறது.

ஆயினும் யுத்த நிறுத்தத்தை கடைப்பிடிக்கும் புலிகள் அதை அவர்கள் குறிப்பிட்ட காலம் வரை தொடர்வது அவசியம். தற்காலிக பிரதேச இழப்புக்கள் நிரந்தரப் பலவீனமாகிவிடப் போவதில்லை. அவை அரசியற் பலத்தையும், நியாயத் தன்மையையும் தார்மீக வலுவையும் வளர்ப்பதுடன் அரசின் கோரமுகத்தை துகிலுரித்துக் காட்டிவிடும் சக்தி மிக்கவை. இதுவே இன்று தமிழர் தரப்பில் முக்கியமானது. ஒரு படைத் தள வீழ்ச்சி காரணமான சோர்வும், பின்னடைவும் வேறொரு வெற்றிகரமான தாக்குதல் மூலம் இலகுவில் சாதித்துவிடக் கூடியவை. ஆனால்,



அரசியல் பின்னடைவு அணிகளுக்கிடையில் குழப்பத்தையும் சீர்குலைவையும் ஏற்படுத்தக் கூடிய ஆபத்து நிறைந்தது. எனவே இந்த 'யுத்த நிறுத்தம், பேச்சுவார்த்தை' என்ற நிலைப்பாடு தொடர வேண்டும் என்பதை திரும்பவும் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். தமிழர் தரப்போ, விடுதலைப் புலிகளோ இதையிட்டு அஞ்ச வேண்டியதில்லை.

அஞ்ச வேண்டியதெல்லாம், இந்தச் சூழலை சாதகமாக்கிக் கொண்டு அரசியல் பிழைப்பு நடாத்தும் சந்தர்ப்பவாதிகளும் அரசாங்கமும் தான். ( அரசாங்கம் இப்போதே அஞ்சத் தொடங்கியிருப்பது, தங்களுடன் நேரடியாகப் பேசியிருந்தால் யுத்த நிறுத்தத்தை பரிசீலித்திருக்கலாம் என்ற அதன் அறிவிப்பிலிருந்தும் சந்திரிகாவின் 'சற்றலைற்' பேச்சிலிருந்தும் தெளிவாகிறது.)

அவர்கள் விரைவிலேயே தமது எதிர்காலத்திற்கு மாபெரும் புதைகுழியை தாமே வெட்டி விட்டிருப்பதை உணர்வார்கள். அவர்கள் அப்படி உணரும் போது, அந்தப் புதைகுழிகளுக்காக பரிந்து பேச இந்த நாட்டில் இருக்கப் போவது சிங்கள பௌத்தமோ, இந்த அந்தணர்களோ அல்ல!

மாறாக தமிழ்த் தேசம் தான்! தன் விடுதலைக்காகப் போராடும் தமிழ் தேசந்தான்.

ஏனென்றால், தனது விடுதலையை நேசிக்கிற எந்த ஒரு தேசமும் மற்றைய தேசங்களின் விடுதலை உணர்வை கௌரவிக்கிறது: மதிக்கிறது: ஆதரிக்கிறது: அதற்காகக் கை கொடுக்கிறது.

அதுவரை, மனநோயாளிகளின் பணி தொடரட்டும்!

⊖

> இவ்வாறான ஒரு சிந்தனைத் தளத்தில் இருக்கும் அரசு, சிங்கள பேரினவாத நிலைக்கு, தமிழ் தேசிய இனத்தை அடக்கி ஒடுக்கி வெற்றி கண்டுவிட முடியும் என்ற நம்பிக்கைச் சிறையிலிருந்து விடுபடுவதற்கான வாய்ப்பு மிகவும் குறைவே. சந்திரிகா குமாரதுங்கவிடம் இது பற்றிய பருமட்டான புரிதல்கள் அவர் ஆட்சிக்கு வந்த புதிதில் இருந்தது உண்மை தான். ஆனால், பேரினவாத ஒடுக்குமுறை அரசின் தலைவியாக அவர் மாறியதும் அவர் அந்த இயந்திரத்தை இயக்கும் ஒருவர் என்ற நிலைக்கு வீழ்ச்சி அடைந்து விட்டார்.

நன்றி - நூலகத்திட்டம்



# மலையகத்தில் புதிய இராணுவ முகாம்கள்

## வடகிழக்குப் போல் மலையகத் தமிழ் இளைஞர் மீதான வேட்டை ஆரம்பம்!

- அர்ஜுன்

மலையகத் தமிழர்கள் நாட்டின் இனத் துவக் கட்டமைப்பில் புறக்கணிக்க முடியாத ஒரு அங்கமாக இருந்து வருவதோடு சுதந்திர இலங்கையின் அரச கட்டமைப்பின் பேரினவாத சக்திகள் மேற்கொண்டு வரும் திட்டமிட்ட பேரினவாத இன ஒடுக்குமுறைகளில் மிகவும் சக்திவாய்ந்த ஒரு தேசமாக உருவாகி நிற்கிறார்கள்.

மலையகத் தமிழர்களை நாட்டின் சமத்துவமிக்க குடிமக்களாக ஏற்று அங்கீகரிக்க மறுத்த பேரினவாத அரச இயந்திரங்களும், அவர்களோடு, பதவி சுகங்களுக்காக தம் வர்க்க அடையாளத்தை இழந்து விட்டு சங்கமமான இடதுசாரிக் கட்சிகளுக்கும், இன்று மலையகத் தமிழர் ஒரு தவிர்க்க முடியாத அரசியல் சமூகமாக, தேசமாக உருப்பெற்று நிற்பதனை ஜீரணிக்க முடியாதவர்களாகி நிற்கின்றனர்.

அரை நூற்றாண்டுகளுக்கு மேலாக முல்லோயா முதல் பிந்துனுவெவ வரையிலான படுகொலைக்களுக்கெதிரான மலையகப் பேரெழுச்சிவரை இடைவிடாத போராட்டங்களை சந்தித்து புடம் போடப்பட்ட ஒரு வெகுசனத் திரள் மலையகத் தேசத்தின் சக்திமிக்க மூலவிசையாக இருக்கின்றமை வெளிப்பட்டுள்ள தருணத்திலும் கூட மலையக அரசியல், தொழிற்சங்க அமைப்புகள், புத்திஜீவிகள், ஊடகவியலாளர்கள் (விதிவிலக்குகளும் உண்டு) அதை ஒரு தேசத்தின் எழுச்சியாக இனம் காண மறுத்து வருகின்றார்கள் பேரினவாத அரசியலாளர், ஆய்வாளர்கள், கல்வியியலாளர்கள் அதிகாரத்துவ தரப்பினர் இந்திய எஜமான்கள் தேசமாக உருப்பெறும் மக்களை சிதைத்துவிட துணிகின்ற சந்தர்ப்பவாதிகள் இலக்கற்ற வெகுஜனப் பத்திரிகைகளின் வழிகாட்டலில் தம்மை மூழ்கடித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

இந்நிலையில் 18 மலையக தொழிற்சங்க, வெகுஜன அமைப்புகள் கூடி அடிப்படையான மலையகத் தமிழர்களின் பிரச்சினையில் ஒன்று பட்டு குரல் கொடுப்பதென முடிவெடுத்துள்மையும், பல்வேறுபட்ட இயங்கு சக்திகள் ஒரு மலையக, தேசிய அரசியலையும் அதே வேளை பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தையும், ஒருங்கே ஏற்று முன்னெடுக்கவும் மேற்கொண்டு வரும் பிரயத்தனங்களும், நம்பிக்கை அளிப்பனவாய் இருக்கின்றன.



ஒடுக்கப்பட்ட தேசங்களோடு பேரினவாத அரசு நிபந்தனையற்ற விட்டுக் கொடுப்புக்களைச் செய்து தேசங்களின் கூட்டாட்சியை ஏற்க மறுத்து வருமானால், ஒடுக்கப்பட்ட தேசங்களின் கூட்டரசு எதிர்காலத்தில் மலர்வதைத் தடுத்து நிறுத்த முடியாது போகும். யதார்த்தம் இவ்வாறிருக்க தமிழீழத்தை குடியேற்ற, இராணுவ முற்றுகைக்கு உள்ளாக்கி நிர்மூலமாக்கி வரும் பேரினவாத அரசு மலையகத் தமிழர்களை நிரந்தரமாக அடக்கி ஒடுக்கி அடிமைப்படுத்தி விடலாம் என மனப்பால் குடிக்கிறது. போதாமைகள் இயலாமைகள் இருந்த போதும், போர்க்குணமும் ஒடுக்குமுறைக்கெதிரான உதைத் தெழுதலும் மலையகத்தின் வர்க்கக் குணாம்சம் என்பதை பேரினவாத மேலாதிக்க வெறியர்கள் உணர்வதாயில்லை.

நாடு சுதந்திரமடைந்தது முதல் பிரஜாவுரிமை, வாக்குரிமை சட்டங்களின் மூலம் மலையகத் தமிழரை நாடு கடத்தியும், சிதைத்தும் அவர்களது வாழ்வாதார பிரதேசங்களில் திட்டமிட்ட குடியேற்றங்களைச் செய்தும், கேந்திர மையங்களில் குடியேற்றங்களை நிறுவி, குடியேற்ற முற்றுகையை மேற்கொண்டும், மலையக நகர்புறங்களில் இருந்து மலையகத் தமிழர்களை விரட்டியடித்தும், நிர்வாக இயந்திரத்தை முற்று முழுதாக சிங்கள மேலதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தும் கொடிய இன ஒடுக்கமுறையை மேற்கொண்டு வரும் அரசு அண்மைக் காலமாக தொழிலாளர்களின் வேலை நிறுத்தங்கள் ஆர்ப்பாட்டங்கள், அரசியல் எழுச்சிகளை நேரடியாகப் பயங்கரவாத தடைச்சட்டம், அவசரகால சட்டம் என்பவனவற்றைப் பயன்படுத்தி ஒடுக்கி வருகின்றது.

இறுதியாக நடைபெற்ற மலையகப் பேரெழுச்சி இராணுவ, பொலிஸ், குண்டர்களின் கூட்டு வன்முறைத் தாக்குதலுக்குள்ளானது.

துப்பாக்கிச் சூடுகள், குண்டர் தாக்குதலால் கொல்லப்பட்டோர் குதறப்பட்டோரின் கதி அதோ கதி தான். ஆனால், மலையகத் தேசம் சோர்ந்து விடவோ, செத்து விடவோ இல்லை. நூற்றுக் கணக்கான கைதுகளும், தடுத்து வைத்தலும் வல்லுறவுகளும் கூட அந்த தேசத்தின் வரலாற்றின் திசை வழியை மாற்றிவிடப் போவதில்லை.

அரசும், அதன் மலையகக் கூட்டாளிகளும் பேரினவாத வெறியர்களும், மலையகத் தமிழரை நிரந்தரமாக திறந்த வெளிச் சிறையில் வைக்கத் திட்டமிட்டு வருகின்றனர். 2000 ஒக்டோபர் 29 பேரெழுச்சிக்குப் பின்:

- கொடிய ஒடுக்கு முறைகள் பிரயோகிக்கப்பட்டன.
- மலையகத் தமிழர் மீதான ஒடுக்குதலை தீவிரப்படுத்த அட்டனை மையமாகக் கொண்ட பிரதிப்பொலிஸ் மா அதிபர் பிரிவு தொடங்கப்பட்டது.
- அவசரகாலச் சட்டத்தில் நூற்றுக்கு மேற்பட்ட இளைஞர்கள் வேட்டையாடப்பட்டனர்.
- தலவாக்கலை, லிந்துல, எலமியர் தோட்டத்தில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இராணுவ முகாம் அமைக்கப்பட்டுள்ளது.
- நோட்டன் - காசல்றியில் ஒரு இராணுவ முகாம்.
- அட்டன் காமினிபுரவில் ஒரு தளம்.
- தலவாக்கலை கென்சியர் தோட்டத்தில் இரு இராணுவ முகாம்கள் அமைக்கப்பட விருக்கின்றன.

இவை மலையகத் தமிழரை மேலும் இறுக்கமான குடியேற்ற முற்றுகைக்கும் இராணுவ முற்றுகைக்கும் உள்ளாக்கும் பேரினவாத சதியாகும்.

ஏற்கெனவே நுவரெலியா, தியதலாவ, நோட்டன் போன்ற முக்கிய இடங்களில் பெரும் தளங்கள் இருக்கின்றன.

இத்தளங்களில் இருந்தே மலையக நகரங்களில் வன்முறை காடைத்தனம் ஏவப்பட்டது என்பது ஊரறிந்த இரகசியம்.

இதுமட்டுமல்லாமல் பதுளை, மாத்தளை, களுத்துறை, கண்டி மாவட்டங்களில் அரச பொலிஸ், உளவுத் துறையினால் கடுமையான நெருக்கடிகள் மலையகத் தமிழருக்கு கொடுக்கப்பட்டு வருகின்றன.

கண்டி மாவட்டத்தில் கம்பளை, கலகா, கண்டி பொலிஸ் பகுதிகளில் அடிக்கடி மலையகத் தமிழர்கள் கைது செய்யப்படுவதும், பொலிஸ் பதிவுகள் மேற்கொள்வதும், எனப் போய் இப்போது விசேட அடையாள அட்டை வழங்கவும், அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது. கலஹா பொலிஸ் பிரிவில் குடும்பப் படங்களோடு, பொலிசில் சகல மலையகத் தமிழரும் தம்மைப் பதிய வேண்டுமென கேட்கப்பட்டுள்ளது. விசேட அடையாள அட்டை வழங்குதல், பொலிஸ் பதிவு, நடைமுறை, புகைப்படம் கோரல் என்பன நடைமுறை படுத்தப்படமாட்டதென பிரதமரும் சிங்கள பௌத்த இனவாதிகளின் ஏகத் தலைவருமான ரட்ணசிறி விக்ரமநாயக்க அறிவித்துள்ள போதும், மலையக அமைப்புகள் இத்திட்டத்தை கைவிடுமாறு இரந்து நின்ற போதும் மாத்தளை, இரத்தோட்டையில் மலையகத் தமிழர் புகைப்படத்துடன் பொலிஸ் பதிவு மேற்கொள்ள வேண்டுமெனக் கோரப்பட்டுள்ளது.

பசறையில் தொடரும் கைதுகளுக்கு நமுனுகுல மலையில் புலிகள் பயிற்சியளித்ததாக அரசும், அதன் ஊடகங்களும் பிரச்சாரம் செய்கின்றன. இவ்வாறு பெரும் பேரினவாத பிரச்சாரங்களோடு இந்த அரசு ஆட்சி கட்டில் ஏறிய கையோடு வேட்டையாடப்பட்ட மலையக விடுதலை முன்னணியினர் எங்கே? அவ்விளைஞர்கள் மீது ஏதாவது குற்றம் நிரூபணமாகியதா?

அரசும் அதற்கு முண்டுகொடுக்கும் மலையகத் தலைமைகளும் விரைந்து விடைகாண வேண்டிய வினாக்கள் இவை.

வரலாற்றில் எந்தத் தேசமும் என்றென்றைக்குமாக அடிமைப்பட்டுக் கிடந்ததில்லை. மலையகத் தமிழரும் மௌனித்திருக்கப் போவதில்லை!

---


## மலையகப் பெண்கள்

# நியாயத்தைக் காண்பது என்று?

- நேசன்

மலையகத்தில் தலைவிரித்தாடும் வறுமை, வேலையின்மை கீழ் உழைப்பு என்பன காரணமாகவும், சுயதொழில் முயற்சிகளான கால்நடை வளர்ப்பு, சிறுதோட்டச் செய்கை, சிறுவியாபார முயற்சிகள் என்பன தோட்ட நிர்வாகங்களால் திட்டமிட்டு நசுக்கப்படுவதோடு தோட்டத் தொழிலாளின் வேலைநாள் குறைப்பு, வேதன வீழ்ச்சி உபரி உழைப்புக்கான ஊதியமின்மை என்பன காரணமாக கடும் பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்குவதோடு, தோட்டங்களில் வேலைச்சுமை அதிகரிப்பு காரணமாக பெரும் தொகையான -ஏறத்தாழ இரண்டு லட்சம் பேர் - தொழிலாளர்கள் தம் தொழிலைக் கைவிட்டு நீங்கியுள்ளனர். மறுபுறத்தில் கொழும்பு, புறநகர் பகுதிகளில் அடையாள அட்டையின்மை பாதுகாப்பு நெருக்குவாரங்கள் காரணமாக தொழில் இழந்த பெருந் தொகையான இளைஞரோ மலையகத்தில் தங்க முடியாதுள்ளது.

இப்பின் புலத்திலும், மலையகம் நாட்டின் சிங்களம், தமிழ், முஸ்லிம், மேட்டுக்குடி, மத்தியதர வர்க்கக் குடும்பங்களின் ஏவலாட்களாக கூலிக்காரர்களாக அடிமைக் குடிகளாக நடத்தப்படும் பாரம்பரியத்தின் தொடர்ச்சியாகவும், இளம் பெண்கள், சிறுவர்கள், வயோதிபர்கள் ஆகியோரின் உழைப்பு சுரண்டப்படுகிறது.



ஆண்கள் தேடித்தந்த வருமானத்தின் கணிசமான பகுதியை மலையகப் பெண்களும், தம்குடும்பங்களுக்கு பெற்றுக் கொடுத்து வந்துள்ளனர். தற்போது குடும்ப வருமானத்தை அதிகரிப்பதற்காக அல்லது உயிர்வாழ்வதற்காக, முதியவர்களும், பெண்களும், சிறுவர்களும், வீடுகள், கடைகள், அலுவலகங்கள், விடுதிகள், ஆடைத் தொழிற்சாலைகள், வெளிநாட்டு வேலைகள் என்று எண்ணற்ற அடியை உழைப்புகளில் எவ்வித உடல், உள பாதுகாப்போ, பாதுகாப்பான இருப்பிடமோ, சுகாதார வசதிகளோ, நிர்ணயகரமான கூலியோ இன்றி வதைக்கப்பட்டு, சிதைக்கப்பட்டு வருகின்றனர். மீளமுடியாத வறுமையின் கொடுமையும், கடன் சுமையும், பீடித்துள்ள தோட்டத் தொழிலாளர்கள் தம் பிள்ளைகளையும், முதியவர்களையும், பெண்டிரையும் அடிமை உழைப்பில் ஈடுபடுக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறான இருள் சூழ்ந்த சூழ்நிலையில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்கள், உள்ளூர் ஆள்பிடிக்கும் தரகர்கள் மேட்டுக்குடிகளின் ஓய்வுகால முதியவர்கள், செல்லப்பிள்ளைகள் தோட்டக்கமிட்டி தலைவர்கள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள் வட்டிக்கடைகள், ஊழியர் சேமலாப நிதிய தரகர்கள் மூலம் பல்வேறு வகையில் கசக்கிப் பிழியப்பட்டு அற்பசொற்ப இருப்பையும் இழந்துவிட்டு வன்முறைகள், வல்லுறவுகள், பாலியல் வக்கிரங்களுக்கு இரையாகி மௌனமாக சிதைந்து வருகின்றனர். இந்நிலைபற்றி கேள்வி எழுப்பவோ, விழிப்புணர்வூட்டவோ நடவடிக்கைகள் எடுக்கவோ எவருமே முன்வருவதில்லை. தொழிலாளர்களின் சந்தாப் பணத்தில் சுகம் காணும் தொழிற்சங்க முதலாளிகள், அன்றைய பணத்தில் உல்லாசப் பவனிக்கும், அரசு சார அமைப்புகளின் முதலாளிகள் ஊழியர்கள், பன்னாட்டு முகவர்கள், சட்டத்தரணிகள், வைத்தியர்கள், வாகன உரிமையாளர்கள் ஆகியோரின் கூட்டுமொத்த வக்கிரத் தாக்குதலுக்கு இலக்காகியுள்ள மலையக சமூகத்தின் தீர்மானகரமான பிரிவினரான பெண்கள், சிறுவர்கள், முதியவர்கள் மீது எவ்விதக் கரிசனையும் இவர்களுக்கில்லை. மனித உரிமைக்காக ஊர்வலம் போகமுடிகிறது. மனித உரிமை மீறப்படும்போது

⇨

நன்றி - நூலகத்திட்டம்



கொண்டாடிவிட்டு தொழிலாளர் மீது சவாரி விடுகிறார்கள். இந்த அவலத்தில் அலறுகிறது மலையகம்.

- ✔ பட்டப்பகலில் கொழும்பு மருதானையில் பஸ்ஸில் இருந்து கடத்தப்பட்ட மலையக யுவதி என்னவானாள்?
- ✔ வன்முறைக் காடையரால் கடத்தப்பட்ட யுவதிகள் எங்கே?
- ✔ நுவரெலியா, விவசாயப் பண்ணையில் புதைக்கபட்ட யுவதி யார்? இதைச் செய்தவர் யார்?
- ✔ எல்ல பாடசாலை மாணவியை குதறிய கயவரை பொலிஸ் கைது செய்ததா?
- ✔ [illegible] ரங்கலையில் [illegible]லைக் குமார் [illegible]ன்கிற 10 வயது சிறுவன் கொல்லப்பட்டான். அதற்கு யார் பொறுப்பு?
- ✔ நாலாந்த எல்லாவலயின் சகோதரியும், சுரங்கனி எல்லாவலயின் மகளுமான விசாகா வீரசிங்க, 15 வயது சிறுமி நிரோசா நாமலிங்கத்தை மரணவதைக்கு உற்படுத்தி-னாளே, அவளுக்கு மலையகத் தலைவர்கள்/ தரகர்கள் என்ன நடவடிக்கை எடுத்தார்கள்?
- ✔ வெளிநாட்டு வேலைவாய்ப்பு என்ற பெயரில் போலி ஆவணங்களை கொடுத்துப் பணம் பறித்த கும்பலிடம் ஏமாந்த நான்கு பேர் கம்பளை நீதிமன்றில் 25,000 பிணைகட்ட நேர்ந்ததே இதற்கு யார் பொறுப்பு?
- ✔ வெளிநாட்டு வேலைவாய்ப்பு, பெயரில் ஏமாற்றி மோசடி செய்யப்பட்டு வன்புணர்வு செய்யப்பட்ட மலையகப் பெண்களுக்கு என்ன பதில்?
- ✔ நுவரெலியா கோல் கிளப்பில் போடப்பட்ட பெண்ணுடல் மண் தின்ற கதை தானா?
- ✔ தீபாவளியன்று அட்டன் நகரில் பெண்ணை ஓட ஓட விரட்டிய ஆட்டோ சாரதி மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?
- ✔ மத்திய மாகாண அமைச்சர் ராதாகிருஷ்ணன் பெயரில் போலி ஆசிரிய நியமனக் கடிதம் வழங்கிய கும்பல் என்னவாயிற்று?
- ✔ ஊவாவில் வேலைவாய்ப்பு தருவதாக [illegible]ற்றிய சச்சிதானந்தனுக்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?
- ✔ வேவல்வத்தை வன்முறையின் போது அரசியல்வாதியால் வன்புணர்வு செய்யப்பட்ட மலையக யுவதியின் கதியென்ன?
- ✔ மலையக எம்.பி. ராஜனின் வாகனத்தில் கடத்தப்பட்டு வன்புணர்வு செய்யப்பட்ட யுவதியின் கதி என்ன?
- ✔ தெரணியாகலைப் பகுதியில் தோட்டப் பெண்கள் கசிப்பு காய்ச்சி உயிர்வாழும், நிலைக்கு தள்ளப்பட்டதற்கு யார் பொறுப்பு?
- ✔ மாத்தளையில் பிரதேச சபைத் தலைவரால் அப்பஸ்பிட்டிய தோட்ட பெண் கணவன் முன்னாலேயே கடத்தப்பட்டாளே அந்தப் பிரதேச சபைத் தலைவருக்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?
- ✔ பேராதனை சிங்கப்பிட்டி தோட்டத்தில் தொடரும் பெண் கொலையின் மர்மம் என்ன?
- ✔ பசறையில் வீதியில் வைத்து தமிழ்ப் பெண்களை வதைத்த பொலிசாருக்கு இடமாற்றம் மட்டும் தீர்வாகுமா?
- ✔ மடகும்புற அக்கரமலை பங்களாவை ஆளும் கட்சி பிரதேச சபை உறுப்பினர் நந்தகுமார ஒரு கும்பலுடன் பார்த்து விட்டுச் சென்ற பின்பே மூன்று யுவதிகள் கடத்தப்பட்டு வன்புணர்வு மேற்கொள்ளப்பட்டது. இதில் நந்தகுமாரவின் பங்கு என்ன? வீட்டைச் சோதனையிட அவருக்கு அதிகாரம் கொடுத்தவர் யார்?
- ✔ கொட்டகலை பரீட்சைக்குச் சென்ற மாணவி மீது பாலியல் சேட்டை புரிந்த ஆசிரியரை மலையகம் என்ன செய்யப் போகின்றது?
- ✔ சட்டமும், நீதியும் நிர்வாகமும் பொலிசும், ஆளும் வர்க்கமும், அதிகாரத்துவமிக்க மலையக மக்களுக்கு எதிரான சக்திகளுக்கும் திட்டமிட்ட ஒடுக்கு முறைகளுக்கும் துணை போகின்றனவா?
- ✔ அண்மையில் நோர்வூட் பொலிசாரால் கைதான 23 வயது மலையக யுவதி 20 மணித்தியாலம் பெண் பொலிஸ் துணையின்றி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு வசவுக்கும், அருவருப்புக்கும் உள்ளானர். இவரது விடயத்தில் தலையிட மறுத்த மலையகத்தின் எம்.பி ஒருவர் தனது நண்பரின் மகனுக்கு மட்டும் வக்காலத்து வாங்கினார்.
- ✔ இவ் யுவதி ஒரு கலைக் கல்லூரி மாணவி. தேர்தலில் போட்டியிட்டவர். இவரது நடத்தை மீது ஆணாதிக்க திமிருடன் வக்கிரம்பாடிய பொலிசுடன் போராட ஒருவரும் இல்லை. மேன் முறையீடுகள் விசாரிக்கப்படுவதுமில்லை.
- ✔ சமூகத்தில் பரந்தளவில் பெண்கள் மீதான காடைத் தனம் புரிவோர் மலையக அரசியல்வாதிகளும் பொலிசாரதும் அரவணைப்பில் இருக்கின்றனர்.
- ✔ மலையக பாடசாலைகள், சமூகம், செயற்பாட்டு குழுக்கள் இவ்வன்முறை, கொடுமைகள் குறித்து வாய்திறப்பதே இல்லை.
- ✔ இக்கொடூரம், இன அழிப்பு ஆக்கிரமிப்பு, வக்கிரம், வன்புணர்ச்சி, அடிமைத்தனம், ஆணாதிக்கத்திமிரை களையெடுக்க

"அன்னையை வைத்திழந்தான்
அண்ணர் எரிதழல் கொண்டு
வாடா
அவன் கையை எரித்திடுவோம்"

என மலையக பெண்களும், ஆண்களும் இந்நிலைமைகளுக்கு எதிராக போர்க்குரல் கொடுக்க வேண்டும் அல்லவா? கொடுப்போமா?

⊙


– மகேஷ்

ஊரான் ஊரான் தோட்டத்திலே....

# அமெரிக்காவின் உபதேசம் !

உலகநாடுகள் ஒவ்வொன்றிலும் நடந்து கொண்டிருக்கும் அரசியல் நிலவரங்கள் தொடர்பாக மூக்கை நுழைத்து அபிப்பிராயம் சொல்வதற்கு பேர்போனவர்கள் அமெரிக்கர்கள் என்று சொல்வார்கள்.

உலகத்திலேயே மிகவும் நாகரீகமானவர்களாகவும், ஜனநாயக பூர்வமானவர்களாகவும் தாங்கள் இருப்பதாக அவர்கள் திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டிருப்பார்கள். பாலஸ்தீனப் பிரச்சினையா? ஈராக்கின் உள்நாட்டுப் பிரச்சினையா? இந்தியாவில் அல்லது ரஷ்ஷியாவிலும் பிரச்சினையா? ஆபிரிக்க நாடுகளில் கலவரமா எது வென்றாலும், அந்த நாடுகள் அபிப்பராயம் தெரிவிப்பதற்கு முன்பாக முந்திக் கொண்டு அபிப்பிராயம் தெரிவித்து விட நிற்கும் ஒரு நாடு அமெரிக்கா.



உலக நாடுகளில் இருக்கின்ற அனைத்துப் பிரச்சினைகளையும் தாங்கள் தீர்த்துவிடுகிற பிரச்சினைகள் தான் என்ற இந்த நிலைப்பாடு தங்களை என்றுமே, எல்லோரையும் விட உயர்ந்தவர்கள் என்று கருதிக்கொள்ளும் திமிர்த்தனத்தில் இருந்து உருவான தென்பது வெளிப்படை.

ஆயுதபலம், அதன் காரணமான அதிகார பலம் மற்றும் பொருளாதார பலம் என்பவற்றின் காரணமாக ஏனைய நாடுகள் மீது குறிப்பாக மூன்றாம் உலக நாடுகள் மீது தனது சட்டாம்பிள்ளைத் தனத்தைக் காட்டுவதற்காக அது எல்லா விதமான வழிவகைகளையும் கைக்கொண்டு வருகிறது. பிரச்சார பலமும் தொழிநுட்ப பலமும் ஐ.நா. சபையை தனது ஏவலுக்கு செயற்படும் கருவியாக மாற்றியிருப்பதும் அமெரிக்காவிற்கு தனது உலகமயமாக்கல் கோட்பாட்டின் அடிப்படையில் முழு உலக நாடுகளையும் மிரட்டும் வாய்ப்பை அளித்து வருகின்றது.

இலங்கையில் இப்போது நடந்து கொண்டிருக்கும் அரசியல் நெருக்கடி நிலைமையை வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டு சகல நாடுகளும் தமது அபிப்பிராயங்களை வெளியிட்டு வருகின்றனர். அண்மையில் அமெரிக்காவின் இலங்கைத் தூதுவர் ஆஷ்லி வில்ஸ் இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக எரிச்சலூட்டும் கருத்து ஒன்றை வெளியிட்டுள்ளார். "அமெரிக்கா, இலங்கையில் எந்தவொரு காரணத்திற்காகவும் ஒரு தனிநாடு உருவாகுவதற்கு எதிராக இருக்கும், என்றும் 'அமெரிக்கா இந்த நாட்டிலுள்ள சிறுபான்மை இனங்கள் பெரும்பான்மை இனத்துடன் ஒரு ஐக்கிய இலங்கை அமைப்புள் வாழ வேண்டும் என்றே விரும்புகிறது. அரசாங்கமும் புலிகளும் யுத்தத்தை நிறுத்தி பேச்சுவார்த்தை மூலமாக பிரச்சினையை தீர்த்துக் கொள்ள வேண்டும்' என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் வாழ்கின்ற சிறுபான்மை இனங்களின் பிரச்சியை என்ன? அவர்கள் ஏன் அரசுடன் போராடிக் கொண்டிருக்கிறார்கள்? தனி நாட்டைக் கோருமளவுக்கு அவர்கள் தள்ளப்பட்டது ஏன் என்பது போன்ற கேள்விகளைப் பற்றி அவருக்கு அக்கறை இல்லை.

அமெரிக்காவுக்கு இந்த நாடு பிரியக்கூடாது என்பதில் அக்கறை இருப்பதாகக் கூறும் அவர், இந்த அக்கறை ஏன் வந்தது என்பது பற்றி எதுவும் சொல்லவில்லை. நாடு பிரிவது இலங்கை வாழ் மக்களுக்கு அவர்களின் எதிர்காலத்துக்கு நல்லதல்ல. அவர்களின் சுபீட்சத்துக்கும் பொருளாதார மேம்பாட்டுக்கும் அது நல்லதல்ல என்ற காரணங்களுக்காக அவர் [illegible]

ஒரு நாடு பிரிவது அவசியமா இல்லையா என்பதை எந்தத் தனி நபரது விருப்பு வெறுப்புக்களிலும் இருந்து தீர்மானிக்க முடியாது. அந்தத் தனிநபர் பிரபாகரனாக இருந்தாலும் கூட இதுதான் உண்மை. உண்மையில், இலங்கையில் தனிநாடு பிரிவது என்ற தீர்மானத்தை ஒரு தனிப்பட்ட பிரபாகரனோ அல்லது அவருக்கு முன் தமிழரசுக் கட்சித் தலைவர் செல்வநாயகமோ எடுக்கவில்லை. அதை எடுத்தது இலங்கையின் இனப்பிரச்சினையின் வரலாறு. தமிழ் தேசிய இனம் ஒடுக்கு முறைக்கு உள்ளாக்கப்பட்டு வந்ததன் விளைவாக அது வந்தடைந்த முடிவு: தன்னைப் பாதுகாக்கவும் பேணவுமென கண்ட ஒரே வழியாகத்தான் அது வந்தது.

அந்த முடிவு வேறு வழியேதுமில்லை என்பதால் வந்த முடிவே அன்றி, ஒரு தனிநாடு தேவை என்ற ஆசையால் வந்த முடிவல்ல.

ஆகவே, அதை விடுவதென்பது எந்தவொரு தனிநபரதும் விருப்பத்தில் தங்கியில்லை. அந்த முடிவுக்கு வருதற்கு எந்தக் காரணங்கள் காரணமாக இருந்தனவோ அந்தக் காரணங்கள் அவை இல்லாமல்போகும்வரை அல்லது மாறாதவரை அந்த முடிவு மாறுவது சாத்தியமில்லை.

அப்படி மாற்றிவிடமுடியும் என்று முடிவு செய்து செயற்பட்டவர்கள் அனைவரும் அரசியற் தற்கொலையை செய்து கொண்டவர்களாகி விட்டுள்ளனர் என்பது எமது பிற தமிழ்க் கட்சிகளைப் பார்த்தாலே தெரியும்.

ஆனால், வில்ஸ் உக்கு இது புரியாது. புரிய வேண்டிய அவசியமும் அவருக்கு இல்லை.

அவர் அப்படிச் சொன்னதெல்லாம் அவரது நாட்டின் தனிப்பட்ட நலன், திமிர், அதிகாரம் போன்றவற்றிற்கு அவ்வாறான ஒரு பிரிவு ஆபத்தாக அமையக் கூடும் என்பதால்.

தமிழ் மக்களின் மீதான அக்கறையாலல்ல.

ஆனால், தமிழீழத்திற்கு மாற்றான ஒரு தீர்வை பரிசீலிக்கத் தயார் என்று புலிகள் எப்போதோ சொல்லி விட்டார்கள். இன்று வரை அந்த மாற்றுப்பற்றி, தமிழீழத்தை கைவிடுமாறு கூறும் எவரும் எதுவும் சொல்லவில்லை.

ஆனால், தமிழீழம் வேண்டாம், அது எமக்கு விருப்பமில்லை என்று திருப்பித்திருப்பச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தியா முதல் அமெரிக்கா வரை ஏறக்குறைய எல்லா நாடுகளினதும் கதை இதுதான்.

ஆனால், வரலாறு இத்தகைய கதைகளால் தீர்மானிக்கப் படுவதில்லையே!

⊙

நன்றி - நூலகத்திட்டம்




# கமல் அத்தரஆராச்சி வழக்கு: பெண்களின் பாதுகாப்பு யார் கையில்?

**– ரத்னா**

1993 ஒகஸ்ட் 25ம் திகதி 16 வயது பாடசாலை மாணவியான இனோக்கா கால்லகேயை பாலியல் வல்லுறவுக்குட்படுத்திய பிரபல நடிகர் கமல் அத்தரஆராச்சியின் வழக்கு அவர் ஒரு நிரபராதி என்ற மேன் முறையீட்டு நீதிமன்றத் தீர்ப்புடன் நிறைவு பெற்றுள்ளமை சமூக அக்கறை கொண்ட அனைவரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

இந்த ஆணாதிக்கக் கட்டமைப்பில், குறைந்த பட்சம் சட்டத் துறையில் கூடப் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை என்பதை இச்சம்பவம் நிரூபித்து விட்டது.

1993 ஒகஸ்ட் 25ம் திகதி



இச்சம்பவத்தின் இரண்டு நாட்களுக்குப் பின்னர் அதாவது 93 ஓகஸ்ட் 27 வெலிக்கடை பொலிசாரினால் தொடுக்கப்பட்ட வழக்கில் போதிய சாட்சிகள் இல்லையெனக் கூறப்பட்டு 94-12-14 அன்று கொழும்பு மேலதிக மாஜிஸ்திரேட் சம்பா புத்திபாலவினால் கமல் விடுதலை செய்யப்பட்டார். எனினும் மாஜிஸ்திரேட் சம்பா புத்திபால கலையுலகத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தமையும், அவருடைய தீர்ப்புடனான சில நடவடிக்கைகள் ஐயத்தை ஏற்படுத்தியமையும் இவ் வழக்கை மீண்டும் விசாரணைக் குட்படுத்தத் தூண்டுகோலாகின. இதற்கு சிங்கள வாரப் பத்திரிகையான ராவயவின் பங்கு கணிசமானளவு இருந்ததையும் மறுக்க முடியாது.

கமல் மாஜிஸ்திரேட்டினால் விடுதலை செய்யப்பட்ட பின் 'கமலின் வழக்கில் சந்தேகத்துக்கிடமான நிகழ்வுகள்', 'சினிமா கலைஞர்களுக்கு சிறுமிகளைப் பாலியல் வல்லுறவு புரிய சட்டம் அனுமதிப் பத்திரம் வழங்கியுள்ளது' என்ற தலைப்பில் இரு கட்டுரைகளை வெளியிட்டு சம்பவத்தில் காணப்படும் உண்மைத் தன்மைகளைச் சுட்டிக் காட்டியிருந்தது. இந்நடவடிக்கைகளினால் ஏற்பட்ட ஐயங்களை அடுத்தும், மேன்முறையீட்டை அடுத்தும் 95.07.26 அன்று உயர்நீதிமன்றத்தினால் கமலுக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டு வழக்கு விசாரணைத் தொடர்ந்தது எனலாம்.

எவ்வாறாயினும், கமல் அத்தர ஆராச்சியின் திரையுலக செல்வாக்குக் காரணமாக இவ்வழக்கில் அரசியல் வாதிகளும், திரையுலகப் பிரபலஸ்தர்களும் அவருக்கு ஆதரவான போக்கையும், இனோக்காவுக்கு எதிரான போக்கையும் கொண்டிருந்தனர். சனத் குணதிலக்க, ஐ.தே.க முன்னாள் பா.உ மேர்வின் சில்வா, வசந்தி சத்துராணி, ஜக்சன் அந்தனி, ரவீந்திர ரன்தெனிய, அனோஜா வீரசிங்க, ஜயந்த சந்திரசிறி, ஐராங்கனி சேரசிங்க போன்றோர் மாஜிஸ்திரேட்டின் தீர்ப்பை சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு இனோக்காவை மிரட்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர் என அன்றைய காலப்பகுதியில் ராவய செய்திகளை வெளிப்படுத்தியிருந்தது. மேலும் இப்பிரபலங்கள் தமது செல்வாக்கைப் பயன்படுத்தி ஜனாதிபதியிடம் பொது மன்னிப்பு வழங்குமாறு கோரும் மகஜரை அனுப்பும் நடவடிக்கைகளில் இவர்கள் ஈடுபட்டதாகவும் தெரிய வந்தது.

எவ்வாறாயினும், 16 வயது மாணவியான இனோக்கா கால்லகேயை கடத்திச் சென்றமை, பாலியல் வல்லுறவு புரிந்தமை ஆகிய குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு, கமல் அத்தர ஆராச்சிக்கு எதிராக சம்பவம் நடைபெற்று சுமார் 4 ஆண்டுகளுக்குப் பின்னர் மேல்நீதிமன்ற நீதிபதி ஷிராணி திலக்கவர்தன அவர்களினால் பத்து ஆண்டுகள் சிறைத் தண்டனையும், 10 லட்சம் தண்டப்பணமும் தீர்ப்பாக விதிக்கப்பட்டது. அதன்பின் மேன்முறையீடு செய்யப்பட்டது நாம் அறிந்ததே.

இவ்வாறு சுமார் 29 தடவைகள் விசாரணைக்குட்படுத்தப்பட்ட பின் இவ்வழக்கு டிசம்பர் 15ம் திகதி அன்று தீர்ப்பளிக்கப்பட்டு கமல் அத்தரஆராச்சி எனும் இந்நாட்டின் புகழ் பூத்த திரைப்படக் கலைஞர் எந்தவித குற்றங்களுமற்றவர் எனவும், இளம் பெண்ணைப் பாலியல் வல்லுறவு புரிந்திராத ஒரு நிரபராதி எனவும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் ஹெக்டர் யாப்பா மற்றும் பி.எச். குலதிலக்க ஆகியோர் தீர்ப்பளித்துள்ளனர்.

இத்தீர்ப்பில், "முறைப்பாட்டாளரின் சாட்சி திருப்திகரமானதாக இல்லை. குறிப்பாக பெண் முறைப்பாட்டாளரின் சாட்சிகள் நம்பிக்கைக் கொள்ள முடியாதளவிற்கு பலவீனமானவை.

எவ்வாறாயினும், அப்பெண் ஒரு பாடசாலை மாணவியாவார். இவர் வயதில் குறைந்த அப்பாவி கிராமப்புற பெண். குற்றஞ்சாட்டப்பட்டவர் வயது முதிர்ந்தவர் என்பதால் சற்றுப் பொறுப்புடன் நடந்து கொண்டிருக்கலாம். அப்பெண் அவரைத் தேடிச் சென்றமை, இரவில் அவரது வாகனத் தில் தனியே பயணித்தமை, அவருடன் நடந்து கொண்ட விதம், கதைத்த விதம் என்பனவற்றை ஆராய்ந்து பார்க்கும் போது அவர் அப்பெண்ணைக் கடத்திச் செல்லவில்லை என்பதையும், அவர் அப் பெண்ணுடன் பலவந்தமாக உடல் உறவு கொள்ளவில்லை என்பதும் தீர்ப்பில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அத்துடன் " சந்தர்ப்பத்துக்கு ஏற்ற வகையில் குற்றம் சுமத்தப்பட்டவர் ஒழுக்கம் கொண்ட மனிதராக நடந்து கொள்ளவில்லை. இப்பெண் வயது குறைந்த முட்டாள்தனமான பெண்ணாவார். அப்பெண் தன் விருப்பின் பேரில் அவருக்கு உதவி புரிய முயற்சித்துள்ளார்.

இப்பலவீனம் அவரிடம் காணப்பட்டாலும், அவர் ஒரு பாலியல் வல்லுறவாளர் எனக் கூறுவதற்கு சட்டத்தில் இடமில்லை. அவரை ஒரு பாலியல் வல்லுறவாளர் என அழைக்குமளவிற்கு சட்டம் ஒன்றும் அவ்வளவு கருணையற்ற ஒன்றல்ல" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட இனோக்கா கால்லகே விடுத்த முறைப்பாட்டினை அடுத்து கமல் அத்தரஆரச்சி தலைமறைவாகி பின்னர் சட்டத்தரணி ஒருவரின் உதவியுடன் பொலிசில் சரணடைந்ததும் இங்கு குறிப்பிடத் தக்கதாகும்.

எவ்வாறெனினும், சுமார் 7 வருடங்களாக விசாரணைக்குட் படுத்தப்பட்ட இவ்வழக்கில் பாதிக்கப் பட்ட பெண்ணுக்கு நியாயத் தன்மையை வழங்க சட்டத்தினால் இயலாமல் போய்விட்டது என்றே கூற வேண்டியுள்ளது. பணபலத்தின் முன்னும், அதிகார பலத்தின் முன்னும் அப்பெண் தலைகுனிந்து நிற்க வேண்டிய நிலைமை, இந்நாட்டில் பெண்களுக்கு எவ்விதத்திலும் பாதுகாப்பில்லை என்பதையே நியாயப் படுத்துகின்றது எனலாம்.

சந்தரேக்கா வழக்கும் இவ்வாறு எந்தவித நியாயத்தையும் பாதிக்கப் பட்ட பெண்ணுக்கு வழங்காமல் முடிவுற்றதும் இங்கு நினைவு கூரத் தக்கதாகும். அத்துடன் பேருவளை சிறுவர் பாதுகாப்பு இல்லத்தில் நடந்த பாலியல் துஷ்பிரயோகச் சம்பவங்கள், மஜிஸ்திரேட் லெனின் ரத்னாயக்கவினால் பாலியல் வல்லுறவு புரியப் பட்ட பெண்ணின் வழக்கு என்பன அதிகார பலத்தினால் திசை திருப்பப் பட்ட வழக்குகளாகும். இங்கு குற்றம் புரிந்த மாஜிஸ்திரேட்டுக்கு தண்டனை வழங்குவதை விடுத்து சம்பளத்துடனான விடுப்பு வழங்கப்பட்டது. இது போன்று இன்று இனோக்கா



கால்லகேயின் வழக்கும் அப்பெண் மீது குற்றத்தை சுமத்திவிட்டு குற்றம் சுமத்திய ஆணை சுத்தவாளியாக்கி விட்டுள்ளது.

வரிசைக்கிரமமாக இலங்கையில் நடந்து முடிந்துள்ள இவ்வாறான சம்பவங்களில் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு இலங்கைச் சட்டங்கள் அளித்துள்ள பாதுகாப்பு தான் என்ன என்ற கேள்வியையே கேட்கத் தோன்றுகின்றது.

சமூகப் பிரக்ஞை கொண்ட தொடர்பூடகம் ஒன்றும், சில சிவில் அமைப்புகளும் பாலியல் வல்லுறவாளரை சட்டத்தின் பிடிக்குள் கொண்டு வர எடுத்த முயற்சிகள் யாவும் விழலுக்கு இறைத்த நீராகி விட்டன. சட்டங்கள் எந்தப் பெண்ணுக்கும் பாதுகாப்புத் தரப் போவதில்லை என்பதையே இச்சம்பவங்கள் அனைத்தும் துரதிருஷ்டவசமாக நிரூபிக்கின்றன என்பதையே அறுதியிட்டு கூற வேண்டியுள்ளது. ⊖

# சிறுமிகள் பராமரிப்பு ஒரு கேலிக்கூத்து!

**– வாணி**

பாலியல் துஷ்பிரயோகங்களுக்குட்படும் இளம் பெண்களை புனருத்தாரணம் செய்யும் பல நிலையங்கள் அரசின் அனுமதியுடன், ஆதரவுடன் இயங்கிவருவது தெரிந்த விடயமே.

இந்நிலையங்களில் பராமரிக்கப்படும் பெண் பிள்ளைகளுக்கு உகந்த சிறந்த பாதுகாப்பை வழங்குவது அரசின் கடமையாகக் கருதப்படுகின்றப் போதிலும் அங்கு இடம்பெறும் வெளிப்படுத்தப்படாத பல சம்பவங்கள் அதிர்ச்சியை ஏற்படுத்துவனவாகும்.

இவ்வகையில் ரம்முத்துகல சிறுவர் பராமரிப்பு நிலையத்தைச் சேர்ந்த அனுஷா தமயந்தி (15) எனும் சிறுமி 2000.08.21 அன்று மர்மமான முறையில் இறந்தது குறித்து பல திடுக்கிடும் தகவல்களை அறியக் கூடியதாகவுள்ளது. ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற இச்சம்பவம் சுமார் ஐந்து மாதங்களின் பின்னரேயே ஊடகங்களினால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

2000 பெப்ரவரி 7ம் திகதி அனுஷா தமயந்தி அவரது தாயின் இரண்டாவது கணவனினால் பாலியல் துஷ்பிரயோகத்திற்குட்படுத்தப்பட்டதன் காரணமாக பொலிஸ் விசாரணைக்குட்படுத்தப்பட்டு பின்னர் வழக்கு நடைபெறும் வரையில் இந்த ரம்முத்துகல சிறுவர் பாராமரிப்பு நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். பெற்றோர்கள் அனுஷாவை வீட்டுக்கு அழைத்துச் செல்ல அனுமதி கோரிய போதிலும், வழக்கு நடைபெறுவதினால் அனுஷா அங்கு தங்கிவிட நேர்ந்தது. அதன் பின்னர் ஓகஸ்ட் 21ம் திகதி பராமரிப்பு நிலையத்தைச் சேர்ந்த பெண் பராமரிப்பாளர்கள் அனுஷா இறந்து விட்டதாக வீட்டுக்கு சென்று செய்தி கூறியுள்ளனர் எனவும் அறியக் கிடைக்கின்றது.

மரணத்திற்கான காரணம் தெளிவுபடுத்தப்படாத நிலையில் அப்பராமரிப்பு நிலையத்தில் தங்கியிருந்த பிற சிறுமிகளின் கருத்தின் படி சுகவீனமுற்றிருந்த அனுஷாவை அங்கிருந்த பெண் பராமரிப்பாளர்கள் சரியான முறையில் கவனிக்கவில்லை எனவும், சந்தர்ப்பத்திற்கேற்றவாறு அனுஷாவை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஓகஸ்ட் 10 ம் திகதி தொடக்கம் அனுஷா தனது ஒரு கால் வீங்கியிருப்பது குறித்து அறிவித்து சில நாட்களின் பின்னர் அவ்விடத்தில் உள்ள சிறு கிராமிய வைத்தியசாலையில் 15ம் திகதி சிகிச்சையளிக்கப்பட்டுள்ளது. அதன் பின் ஓகஸ்ட் 18ம் திகதி அனுஷா நெஞ்சு வலிப்பதாகக் கூறி அழும் போது இது குறித்து பெண் பராமரிப்பாளர்களுக்கு அறிவிக்கப்பட்ட போதிலும், அவர்கள் இது குறித்து கவனம் கொள்ளவில்லை என கூறப்படு கின்றது. 19ம் திகதி அனுஷாவின் முகம் வீங்கி உடல் நலம் மிகவும் மோசமான நிலையை அடைந்த போதும் பராமரிப்பாளர்கள் அக்கறை எடுத்துக் கொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. அது குறித்து பீதியடைந்த அனுஷாவின் சக தோழிகள் கத்திக் குளறியதன் காரண மாக அனுஷாவுக்கு இரண்டு பனடோல் மாத்திரைகள் மட்டும் வழங்கப்பட்டுள்ளன. 20ம் திகதி நண்பகல் அனுஷா சத்தி எடுக்கத் தொடங்கியதுடன் சுய நினைவிழந் துள்ளார். அதன்பின் அப்பராமரிப்பு நிலையத்தின் மருந்து வழங்கலுக்கு பொறுப்பாக உள்ள சோமலதா என்பவர் அனுஷாவுக்கு கூகைக் கட்டு ஏற்பட்டுள்ளதாகக் கூறி அவரை குளிப்பாட்டியுள்ளார். அதன்பின் அனுஷாவின் நிலைமை மிகவும் மோசமடைந்து 7.30 மணியளவில் அவர் உயிரிழந்துள்ளார்.

65 சிறுமிகளை மட்டுமே பராமரிக்கக் கூடிய வசதியைக் கொண்ட இந்த பராமரிப்பு நிலையத்தில் தற்போது 170 சிறுமிகள் உள்ளதாகவும், இவர்களுக்கென 3 மலசலகூடங்களே உள்ளன எனவும் தெரியவருகின்றது.

எவ்வாறாயினும், இந்த ரம்முத்துகல நிலையம் குறித்து ஏற்கெனவே பல முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன எனவும், இதற்கு முன்னரான சந்தர்ப்பத்தில் ஒரு சிறுமியை பெண் பராமரிப்பாளர் ஒருவர் தீயால் சுட்டு சித்திரவதை செய்ததாகவும், மேலும் அங்குள்ள சிறுமிகளை பெண் பராமரிப்பாளர்கள் மோசமாக நடாத்துவதாகவும் கிடைத்த முறைப்பாடுகளை அடுத்து அனுஷா இறப்பதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைவர் கலாநிதி ஹரேந்திர சில்வா உட்பட சில அதிகாரிகள் அங்கு திடீரென சென்று விசாரணை நடாத்திய போது தடுத்து வைக்கப் பட்டிருந்த சிறுமிகள்- அனுஷா உட்பட - பராமரிப்பாளர்களுக்கு எதிராக முறையிட்டதாகவும் தெரியவருகின்றது. அதன் பின் குறிப்பிட்ட அப்பராமரிப்பாளர்களை கைது செய்யுமாறு உத்தரவிட்ட போதிலும், பொலிசார் முறைப்பாட்டை மட்டும் பெற்றுக் கொண்டனர். எவ்வாறாயினும் இப்பராமரிப்பு நிலையத்தில் இடம்பெறும் துஷ்பிரயோகங்கள் குறித்து கலாநிதி ஹரேந்திர சில்வா அறிக்கை ஒன்றை தயாரித்து பொறுப்பு கூற வேண்டியவர்களுக்கு இதன் பிரதிகளை அனுப்பியுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும், ஹரேந்திர சில்வா முன் சாட்சியமளித்த சிறுமிகள் காணாமற் போயுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

எவ்வாறாயினும் வாழ்வில் தாம் இழைக்காத தவறுகளுக்கு தண்டனை பெற்று இவ்வாறான கொடுமை நிறைந்த வாழ்க்கையை வாழும் இச் சிறுமிகளுக்கு எந்த விதத்திலும் எவராலும் பாதுகாப்பு வழங்க முடியாதென்பதையே இச்சம்பவம் தெளிவுபடுத்துகின்றது.

மேற்கூறப்பட்ட சிறுவர் பராமரிப்பு நிலையத்தைப் பற்றிய மோசமான முறைப்பாடுகள் கிடைத்த போதிலும் அரசாங்கமோ அதற்கு பொறுப்பாக உள்ள அதிகாரசபையோ ஆணைக்குழுவோ எந்த நடவடிக்கையும் எடுக்காதது, அவர்கள் அதிகாரபலமற்ற ஏழைகள் என்பதானாலா என்ற சந்தேகம் எழுகின்றது.

அனுஷா தமயந்தி இன்று நம்மத்தியில் இல்லை. எவ்வாறாயினும், கிரமமான விசாரணைக்கான தேவையை அனுஷாவின் மரணம் வலியுறுத்தியுள்ளது எனலாம். ஆனால் இன்று வரை அதற்கான துரித நடவடிக்கைகள் எதனையும் காணக் கிடைக்கவில்லை. ⊖

## ஒரு தமிழீழப் போராளியின் கதை -12

# புலிகளிலிருந்து வந்தவர்க்கும் அடைக்கலம் தந்தோம்!

***ரமேசுக்கு மரண தண்டனை***


அந்தப் படகினில் வந்தவர்கள் சிலர் ரமேசுடனும் வெளிநாடுகளுக்குப் போவதற்குமான முயற்சிகளில் ஈடுபட்டனர். இந்த நேரத்தில் ரமேஸ் குழுவினர் சுதனையும் தம்மோடு சேர்க்க முற்பட்டனர். ஆரம்பத்தில் சுதன் ரெலோவுடனும் புலிகளுடனும் முரண்பட விரும்பவில்லை. ஆனால் ரமேசின் வற்புறுத்தலின் பின் ரமேசுடன் சேர்ந்து புலியுடன் சேர உடன்பட்டார். ஏற்கெனவே கூறியது போல் ரமேஸ் தனக்கு விரும்பியவர்களை ரெலோவிடம் இருந்து பிரித்துக் கொண்டிருந்தார். இந்த நிலையில் ரெலோவின் திட்டப்படி ரெலோவின் உறுப்பினர்களில் சிலர் சுண்டல் வியாபாரிகளாகவும் மற்றும் பலர் மாறுவேடங்களிலும் மரீனா கடற்கரையில் நின்றார்கள். ரமேஸ் அங்கு ஒரு ரெலோ உறுப்பினரைச் சந்திக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ரமேஸ் அந்த இடத்திற்கு வந்தவுடன் ஏற்கெனவே தயார் நிலையில் இருந்த ரெலோ உறுப்பினர்கள் ரமேசைப் பிடித்து அன்றிரவே மரண தண்டனை வழங்கியதாக செய்தி எமக்கு வந்தது. இனி ரமேசின் பிரச்சினை நமக்கு இருக்காது என்பதனால் எமக்கு கொஞ்ச நிம்மதி ஏற்பட்டது. சில மாதங்களின் முன்பு இதே ரமேஸ், சுதனின் பிரச்சினைகளுக்காகப் போராடிய எமக்கு ரமேசின் மரண தண்டனைச் செய்தி நிம்மதியைத் தந்தது. அன்று ரமேசுடன் போவதற்கு முடிவெடுத்த சுதன் இந்த செய்தியைக் கேட்டதும் உடனடியாக ரெலோவுக்குத் தூது அனுப்பினார். இரு தினங்களுக்குள் ரெலோவின் பிரதேசத்துக்குள் வீடு எடுத்துப் போய் விட்டார். ரமேசையும் சுதனையும் நம்பி ரமேசுடன் ரெலோவை விட்டுப் பிரிந்து புலிகளுக்குள் வந்தவர்கள் புலிகளாக மாற வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆனால் சுதனோ தனது உயிரைப் பாதுகாப்பதற்காக ரெலோவின் பாதுகாப்பினைத் தேடி ரெலோவின் பிரதேசத்துக்குள் வந்து விட்டார்.

இந்த நிலையில் சில மாதங்களின் பின் புலிகளில் இருந்து இரண்டு உறுப்பினர்கள் எம்மைச் சந்திக்க வந்தனர். அவர்களில் ஒருவர் மனோ மாஸ்ரரின் அபிமானி. இவர் மனோ மாஸ்ரர் கொல்லப்பட்ட பின் தனக்குப் புலிகளில் தொடர்ந்தும் இருக்க முடியவில்லை என்றும் புலியை விட்டு விலகப் போவதாகவும் தங்களுக்கு தங்குவதற்கு இடம் தர முடியுமா என்றும் கேட்டார். மற்றைய நபர் புலிகளை விட்டு வந்து புதிய ஸ்தாபனம் ஒன்றை அமைத்து எம்முடன் சேர்ந்து வேலை செய்ய விருப்பமும் தெரிவித்தார். நாளாந்தம் வாழ்க்கைக்கே பணம் இல்லாத நிலையில் நாம் இருக்கின்றோம். எம்முடன் தோழிகளும் உள்ளனர். எமக்கே பாதுகாப்பில்லை. எம்மால் உங்களுக்கு பாதுகாப்பு வழங்க முடியாது. ஆனால் இருப்பதற்கு இடம் வேண்டுமானால் தரலாம் என்றோம். மீண்டும் ஒரு வாரத்தின் பின்னர் திரும்பவும் வந்தார்கள். தாங்கள் தங்கி இருக்கும் முகாமிலிருந்து 200 பேர் வரையில் புலிகளை விட்டு ஆயுதங்களுடன் பிரிவதற்குத் தயாராக இருக்கிறார்கள் என்றும், தங்களுக்கு இடம் ஒழுங்கு செய்யுமாறும் கூறினார்கள். இருநூறு பேர் வரையில் ஆயுதங்களுடன் வருகிறார்கள் என்று கேள்விப்பட்டதுடன் எனக்கு முதலில் மகிழ்ச்சியாக இருந்தது. எனினும் நாம் 200 பேர் வரையில் வருபவர்களில் யார் யார் வருகிறார்கள்? அதன் விளைவு நமக்கு என்ன நடக்கும் என்பது தெளிவாக இருந்ததினால் நாம் முழுதாக மறுத்து விட்டோம். அதாவது 200 பேருடன் இங்கு வர வேண்டாம் என்பதாகும். இந்த நிலையில் நாம் மலிவான வாடகையில் ஒரு சிறிய இடத்தினை ஆண்களுக்கு என எடுத்தோம்.

***மதகுரு அன்ரன் சின்னராசா கல்வி கற்க உதவினார்!***

இந்தக் காலகட்டத்தில் எம்முடன் இருந்த பெண்களில் ஒரு சிலர் படிப்பதற்காகவும் பெற்றோர்களின் உதவியுடன் தனியாகப் போய் விட்டனர். நம் நாட்டின் விடுதலைக்காகப் போராட வந்தவர்கள் இனி ரெலோவில் இருந்து போராட முடியாது. பிரிந்த நாமோ புதிய ஸ்தாபனத்தைக் கட்டப் போவதில்லை என்ற நிலையில் இருந்ததினால் வேறு இயக்கத்தில் சேர்ந்து போராட வேண்டும் என்ற முடிவில் வேறு சிலர் இருந்தனர். நாம் எவருமே அவர்களின் முடிவுக்குக் குறுக்கே நிற்கவில்லை. இந்த நிலையில் புலிகளைச் சேர்ந்த மதகுரு அன்ரன் சின்னராசா அவர்களின் தொடர்பு இவர்களுக்குக் கிடைத்தது. இவர்கள் செல்லும் தேவாலய மதகுரு இவர்கள் இலங்கையைச் சேர்ந்தவர்கள் என்பதால் மதகுரு அன்ரன் சின்னராசாவை அறிமுகப்படுத்தினார். இதன் விளைவாக அன்ரன் சின்னராசா இவர்களுக்குப் பாடசாலையில் அனுமதி எடுத்து படிப்பதற்கு வசதிகள் செய்வதாகக் கூறினார். நாமோ அது நல்ல விடயம் என்றும் எம்மால் தனிப்பட்ட நபர்களைப் படிக்க வைக்க முடியாது என்றும் படிப்பதனால் எல்லாரையும் தான் படிக்க வைக்க வேண்டும். ஆனால் அதற்கோ வசதி இல்லை.



மதகுரு உங்களுக்கு வசதி செய்வார் என்றால் நல்ல விடயம். ஆனால் இங்கிருந்து படிக்க முடியாது. அவருடன் போங்கள் என்றும் சொன்னோம். எனவே இவர்களின் விருப்பப்படி ஆறு பேர் அளவில் மதகுருவுடன் போய் விட்டனர். போனவர்களில் மூவர் தாம் படிப்பதற்காகப் போகவில்லை. இப்படியே இங்கே இருக்க முடியாது. புலிகளுடன் சேர்ந்து போராடப் போகின்றோம் என்று கூறினர். இதை நாம் ஏற்கெனவே எதிர்பார்த்தபடியால் மகிழ்ச்சியுடன் அவர்களை அனுப்பி வைத்தோம். இவர்களில் புலிகளில் சேருவதற்கு விரும்பினாலும் அன்று வரையும் புலிகளுக்கு பெண்களைச் சேர்ப்பது சம்பந்தமாக ஒரு கருத்தும் இருக்கவில்லை. ஆரம்பத்தில் தாதிமார் பயிற்சி போன்றவற்றை வழங்குவது என்ற கருத்துக்கள் தான் புலிகளிடம் இருந்தன. அதன் பின்னர் தான் அவர்களின் முடிவில் மாற்றம் ஏற்பட்டது. புலிகளின் முதல் பெண் படைப்பிரிவினர் எம்மிடமிருந்து போன தோழிகள் தான்.

***புலிகள் எம் வீட்டில் அடைக்கலம்***

இந்தக் காலகட்டத்தில் புலிகளிடமிருந்து விலகி பதினெட்டுப் பேர் வரையில் எங்களிடம் வந்தார்கள். அவர்களுக்கு இருப்பிட வசதிகளை நாமும் வேறு சிலரும் செய்திருந்தோம். இவர்கள் நான் வீட்டில் இல்லாத சமயத்தில் எமது வீட்டிற்கு வந்திருந்தனர். நான் வீட்டிற்கு வந்த போது எனக்குத் தெரியாத பன்னிரண்டு பேர் எமது வீட்டில் இருப்பதைக் கண்டு வீட்டிற்குச் செல்லவில்லை. இவர்கள் வந்தவுடன் இவர்களை வீட்டில் விட்டு எமது தோழர்கள் கடைக்குச் சென்று விட்டனர். ஏற்கெனவே எம்முடன் கதைத்த இரு புலி உறுப்பினர்களும் வீட்டில் இல்லாததால் எனக்கு மிகவும் குழப்பமாக இருந்தது. யார் இவர்கள்? வீட்டில் இருந்த மற்றத் தோழர்கள் எங்கே? என்ற கேள்விகள் என்னிடம் எழுந்தன. எமது இருப்பிடத்திற்கு மேலேயுள்ள வீட்டின் உரிமையாளரிடம் போய் நிலைமைகளைக் கேட்டேன். அவரோ இவர்கள் ஊரிலிருந்து வந்திருப்பதாக மற்றத் தோழர் சொன்னதாகக் கூறினார். நான் இவர்கள் யாரையும் ஊரில் பார்க்காத படியால் வீட்டிற்குச் செல்லாமலே வெளி வீதியில் நின்று வீட்டில் நடப்பதைக் கவனித்துக் கொண்டிருந்தேன்.

இந்த வீட்டின் உரிமையாளரைப் பற்றிச் சில வார்த்தைகள் சொல்லித் தான் ஆக வேண்டும். மற்றைய வீட்டு உரிமையாளர்கள் அதிகபட்ச வாடகை வாங்குவது தவிர வேறு எந்த உதவியும் எமக்குச் செய்ததில்லை. இவரோ குறைந்த பட்ச வாடகையில் தன்னால் முடிந்த உதவிகளைச் செய்து தந்தார். உதாரணமாக, கூப்பன் (ரேசன்) அட்டையில் மலிவு விலையில் வாங்கக் கூடிய பொருட்களை வாங்கித் தருவார். மேலும் அயல் வீடுகளில் உள்ள பாவிக்காத கூப்பன் அட்டைகளையும் வாங்கித் தருவார். வாடகை கொடுக்கப் பணம் இல்லாவிடினும் எம்மிடம் பணம் கேட்பதில்லை. இதற்காக இவர் ஒன்றும் வசதியானவர் இல்லை. மற்றைய வீட்டின் உரிமையாளர்களோ எம்மிடம் எவ்வளவு பணம் பறிக்கலாம் என்றும் வெளிநாட்டுப் பொருட்கள் கிடைக்குமா என்றும் எதிர்பார்த்தவர்கள்.

**நாம் ரெலோவில் இருந்த போது ஒரு நாளைக்கு ஏழ ரூபா வீதம் பணம் தந்தார்கள். அந்தக் கால கட்டத்தில் பலர் ஒன்றாக இருந்து சமைக்கும் போது அந்தப் பணத்தில் ஒரு நல்ல சாப்பாட்டினை சாப்பிடக் கூடியதாக இருந்தது. ஈ.பி.ஆர்.எல்.எஃவ் ஈரோஸ் போன்ற இயக்கங்களிலும் இவ்வாறான ஒரு நிலைமை இருந்ததாகக் கேள்வி. ஆனால் புலிகளிடம் மாத்திரம் சுமார் 50 ரூபா வரையில் ஒருவருக்கு செலவழிக்கப்பட்டது. தேவைக்கு மிஞ்சிய வகையில் அவர்கள் சாப்பாடு போட்டு வளர்க்கப்பட்டனர். சாப்பாடு மற்றும் பணப்பிரச்சினை எதுவும் புலிகளில் ஏற்படாதவாறு பிரபாகரன் அதிக கவனம் செலுத்தி இருந்தார். அதாவது தலைமைக்கு இதனால் பிரச்சினை ஏற்படாதவாறு அவர் நடந்து கொண்டார். ஆனால் மற்றைய இயக்கங்களில் உதாரணமாக ரெலோவில் தேவையான பணம் இருந்தும் இது சம்பந்தமாக தலைமை பெரிது படுத்தவில்லை.**

தமிழ் நாட்டில் கூப்பன் அட்டையில் சாமான்கள் வாங்குவதே ஒரு தனிக்கலை. அதாவது பொருட்களின் அளவுகள் பார்த்துக் கொடுக்கும் போது அரைவாசியை வெட்டி விடுவார்கள். பணம் முழுவதற்கும் கொடுத்தாலும் அவர்கள் தருவதைத் தான் வாங்க வேண்டிய நிலையில் தான் சாதாரண மக்கள் இருந்தனர். ஆனால் நாம் கடைக்குப் போகும் போது எம்மை மரியாதையாகவும் கொடுக்கும் அளவில் அரைவாசி இல்லாமல் முக்கால் வாசியைத் தருவார்கள். நாம் இயக்கக்காரர் என்பதால் தான் இவ்வாறு நடந்தார்கள். இதை அறிந்த எம் வீட்டுக்காரரும் அயலவர்களும் தமக்குத் தேவையான சிலவற்றையும் எம்மிடம் கொடுத்துக் கடையில் வாங்கினர். பின்பு எமது பழக்கத்தினால் கூப்பன் அட்டை இல்லாமலே எமக்குத் தேவையான பொருட்களை வழங்கினர். அக்கூப்பன் கடைக்காரரின் உணர்வுபூர்வமான ஆதரவு இருந்ததினால் பல சலுகைகளை நாம் பெற்றோம். அரச வைத்தியசாலைகளுக்குச் சென்றால் கூட சாதாரண மக்களின் கஷ்டங்களை நாம் எதிர் நோக்கவில்லை. போராளிகள் என்பதினால் இலவச மருத்துவமும் வெகுவிரைவில் மருத்துவரின் விசேட கவனிப்பும் எமக்கு இருந்தது. இந்த நிலைமை ராஜீவ் கொலைக்குப் பின் மாறி விட்டது.

எமது வீட்டிற்கு வந்தவர்கள் யார் என்பது எமது தோழர் மூலம் தெரிந்த பின்பு நான் வீட்டினில் நுழைந்தேன். அதுவரை காலமும் எமது சாப்பாடு எம்மிடம் இருக்கும் பணத்தைப் பொறுத்தும் நாம் விரும்பியபடியும் இருந்தது. இப்போதோ 15 பேருக்கு மேல் வீட்டினில் இருப்பதால் கட்டாயம் சமைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. நாம் விரும்பியபடி சாப்பாடு இருந்தது என்பதானது பெண்களின் சாப்பாட்டிற்கான பணமும் அவர்கள் விரும்பியபடி அவர்களின் முறை வரும் போது சமைத்துச் சாப்பிட்டனர். ஆண்களின் சமையல் என்பது பணத்தின் இருப்பைப் பொறுத்தே அமைந்தது. சோறும் பருப்பும் உருளைக் கிழங்கு போட்ட ஒரு குழம்பும் ஒரு முட்டையும் தான் பொதுவான ஒரு சாப்பாடு. வித்தியாசமாகச் சாப்பிடுவது என்பது ஒரு நாள் பருப்பு அதிகமாகவும் மற்றைய நாள் உருளைக் கிழங்கு அதிகமாகவும் மாற்றிச் சாப்பிடுவது என்பது. அரிசையை வடித்து கஞ்சியைக் குடிப்பது. குழம்பாக இருக்க வேண்டும் என்பதற்காக கஞ்சியைக் குழம்பில் ஊற்றி கட்டியாகவும் பார்ப்பதற்குக் குழம்பாகவும் சமைப்பது. இவ்வாறு பலவிதமான சமையலைப் பயின்றோம். சிலவேளைகளில் மத்தியானம் சோறு. இரவில் சோறு. காலை பழஞ்சோறு என்றெல்லாம் சாப்பிட்டிருக்கின்றோம். பாண் மற்றும் வேறு விதமாகச் சமையல் செய்து சாப்பிடுவதென்பது எம்மிடம் இருக்கும் பணத்தைப் பொறுத்துத் தான் அமையும். சாப்பாடு சம்பந்தமாக ஒரு சில சம்பவங்களை நான் சொல்லித்தான் ஆகவேண்டும். நாம் ரெலோவில் இருந்த போது ஒரு நாளைக்கு ஏழு ரூபா வீதம் பணம் தந்தார்கள். அந்தக் காலகட்டத்தில் பலர் ஒன்றாக இருந்து சமைக்கும் போது அந்தப் பணத்தில் ஒரு நல்ல சாப்பாட்டினை சாப்பிடக் கூடியதாக இருந்தது. ஈ.பி.ஆர்.எல்.எஃவ், ஈரோஸ் போன்ற இயக்கங்களிலும் இவ்வாறான ஒரு நிலைமை இருந்ததாகக் கேள்வி. ஆனால் புலிகளிடம் மாத்திரம் சுமார் 50 ரூபா வரையில் ஒருவருக்குச் செலவழிக்கப்பட்டது. தேவைக்கு மிஞ்சிய வகையில் அவர்கள் சாப்பாடு போட்டு வளர்க்கப்பட்டனர். சாப்பாடு மற்றும் பணப்பிரச்சினை எதுவும் புலிகளில் ஏற்படாதவாறு பிரபாகரன் அதிக கவனம் செலுத்தி இருந்தார். அதாவது தலைமைக்கு இதனால் பிரச்சினை ஏற்படாதவாறு அவர் நடந்து கொண்டார். ஆனால் மற்றைய இயக்கங்களில் உதாரணமாக ரெலோவில் தேவையான பணம் இருந்தும் இது சம்பந்தமாக தலைமை பெரிது படுத்தவில்லை. போராளிகள் மன ரீதியாகவும், உடல் ரீதியாகவும் பலவீனமாக இருந்தனர். இது ரெலோவில் பல விளைவுகளை ஏற்படுத்தி இருந்தது. நான் இந்தியாவிற்கு வருவதற்கு முன்பு ரெலோவில் நடந்ததாகக் கூறப்படும் சாப்பாட்டுடன் சம்பந்தப்பட்ட விடயங்கள் சிலவற்றினைக் குறிப்பிட விரும்புகிறேன்.

*தொடரும்*

தேவமகன்

நன்றி - நூலகத்திட்டம்



**தமிழ் காங்கிரசின் மறைந்த தலைவர் குமார் பொன்னம்பலம் அவர்கள் 1997இல் சரிநிகருக்கு (ஜூன் 2, 1997 "வருகை தந்து கையளித்த கட்டுரை" ஒன்று இவ்விதழில் பிரசுரமாகிறது. அப்போது இக்கட்டுரையிலுள்ள விபரங்கள் பல பத்திரிகைகளிலும் சரிநிகரிலும் ஏற்கெனவே வெளியாகியிருந்ததால் இது பிரசுரிக்கப்படவில்லை. திம்பு கோரிக்கையின் அடிப்படையில் இனப் பிரச்சினைக்கான தீர்வை வலியுறுத்திய குமார் அவர்களின் மறைவின் ஓராண்டு நிறைவை ஒட்டி அக்கட்டுரையை சற்றுச் சுருக்கமாக இங்கு பிரசுரிக்றோம். அரசுக்கும் புலிகளுக்குமான பேச்சுவார்த்தை முஸ்தீபுகள் நடந்து கொண்டிருக்கும் இச்சூழலில் இந்தக் கட்டுரை வெளிவருவது - குமார் கூறும் எல்லாக் கருத்துக்களுடனும் உடன் படமுடியாவிட்டாலும் கூட - காலப் பொருத்தமிக்கது என்று கருதுகிறோம்.**

**ஆ-ர்**

# ஒரு அரசியல் தீர்வில் திம்புக்கோட்பாடுகளின் முக்கியத்துவம்

பெருமைமிக்க தமிழர்கள் தங்களுடைய சரித்திரத்தைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது தமிழர்கள் ஆண்ட பரம்பரை, மீண்டும் ஆள விரும்புவதில் என்ன பிழை என்று கூறுவார்கள். எந்தவேளையிலும், தமிழர்களுடைய இறைமையை எவருக்கேனும் கையளித்ததில்லை என்றும் கூறுவார்கள். ஆகையால், அந்த அடிப்படையில் சரித்திரத்துக்கு ஏற்ப தமிழர்களுக்கென்றே ஒரு தனி நாட்டினை உருவாக்குவதற்கு 1977ல் தமிழர்கள் ஆணையிட்டார்கள்.

இந்த நிலையை அண்மைக்கால தமிழ் அரசியல்வாதிகள் பல அரசியல் மகாநாடுகளிலும், பல நாடுகளிலும் முன் வைத்ததை நாங்கள் சுலபமாக மறந்துவிட முடியாது, மறக்கவும் விடக்கூடாது.

இந்த நிலைப்பாட்டின் அடிப்படை தான் தமிழ் மக்களுக்கு எப்போதும் சுயநிர்ணய உரிமை உண்டு என்பதாகும். சுயநிர்ணய உரிமை என்பது ஒரு அதிமுக்கிய கோட்பாடு.

தமிழர்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு என்ற அந்தக் கோட்பாட்டின் அடிப்படையில் தான் ஓகஸ்ட் 1944ல் இலங்கையின் முதலாவது தமிழ் கட்சியான அகில இலங்கை தமிழ் காங்கிரசே உருவாகியது.

இந்த தமிழர் சரித்திரத்தின் அடிப்படையிலும், சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டின் அடிப்படையிலும், தமிழ் மக்களுடைய ஆணையை இரத்தத் திலகங்களிட்டு 1977ல் தமிழ் அரசியல் வாதிகளுக்குப் பிறப்பித்தார்கள் தமிழ் மக்கள்.

ஒரு தமிழ் ஈழத்தை அமைப்பதென்றால் பேச்சுவார்த்தைகளினாலும், ஒப்பந்தங்களினாலும் அமைக்க முடியாதென்பதை 1977 பொதுத்தேர்தலில் வெற்றி பெற்ற தமிழ் அரசியல்வாதிகள் நன்கு உணர்ந்திருக்க வேண்டும். இந்தச் சாதாரண உண்மையை அவர்கள் உணர்ந்திருக்காவிட்டால், அவர்கள் அரசியல் கதைப்பதற்கு அருகதையற்றவர்களாவர்.

ஆனாலும், என்ன நடந்தது? 1977ம் ஆண்டு கழிந்ததும், அன்றைய அரசியல்வாதிகள் தாங்கள் பெற்ற ஆணையையும் மறந்து தாங்கள் மேடை மேடையாகத் தமிழ் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளையும் மறந்து, அன்றைய சிங்கள அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை தொடங்கி, நிர்வாகப் பரவலாக்கலை நிறுவுவதற்கு மாவட்ட அபிவிருத்திச் சபைகள் என்னும் அமைப்பை உருவாக்க ஒத்துழைத்தார்கள். அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் சட்டமும் நிறைவேற்றப்பட்டு 1981ல் அதற்கான தேர்தல்களும் நடைபெற்று எல்லாமே நெருப்பில் முடிவடைந்தது. ஆணையை மறந்து வாக்குறுதிகளைக் காற்றில் பறக்க விட்டதன் விளைவு, அந்தக் காற்றின் உதவியுடன் பரவிய தீயை இன்றும் எம்மால் காணக்கூடியதாக இருக்கின்றது.

1983ல் ஒரு பூகம்பம் வெடித்தது. அந்தப் பூகம்பம் தமிழரின் சரித்திரத்தை மட்டுமல்லாமல் இலங்கையின் சரித்திரத்தையும் மாற்றியது. இந்தப்பூகம்பத்தின் விளைவுகள் இன்றும் கூடத்தணியாமல் எரிகின்றன.

1984ல் ஜனாதிபதி ஜயவர்த்தனாவினால் கூட்டப்பட்ட வட்டமேசை மகாநாட்டில், தமிழ் தலைவர்கள் 1977 ஆணையை எல்லாம் மறந்து பேச்சுவார்த்தைகளுக்குப் போய் மாவட்ட அபிவிருத்திச் சபை வேண்டாம், மாகாண சபைகள் தான் வேண்டும் என்றும் கேட்டார்கள். நிர்வாகப் பரவலாக்கல் வேண்டாம், அதிகாரப் பரவலாக்கல் தான் வேண்டும் என்றும் கேட்டார்கள். ஆனாலும் தமிழ் தலைவர்கள் தங்களுடைய அரசியல் நிலைப்பாட்டிலிருந்து அவ்வவ்போது சறுக்கலாம் என்ற உண்மை தெரிந்திருந்த சிங்களத் தலைவர்கள், மாவட்ட அபிவிருத்திச் சபைகளுக்குக் கூடுதலாக இம்மியளவும் கூடக் கொடுக்கப் போவதில்லை என்ற நிலைப் பாட்டைக் கடைப்பிடித்தார்கள்.

1984 முழுவதும் நடைபெற்ற வட்டமேசை மகாநாடு படுதோல்வியில் முடிவுற்றதன் பின், இந்தியா ஒழுங்கு செய்த திம்பு மகாநாடு இலங்கை அரசாங்கத்துக்கும், இலங்கைத் தமிழ் அமைப்புக்களுக்குமிடையில், பூட்டானில் 1985ல் இடம்பெற்றது. அந்த மகாநாட்டில் ஜூலை 13ம் திகதியில், தமிழ் இனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 6 தமிழ் அமைப்புகள் கூட்டாக தமிழ் தேசிய இனத்தின் அரசியல் கோட்பாடுகளை முன்வைத்தன. அதன் அடிப்படையில் தான் இனிமேல் ஏதேனும் ஒரு அரசியல் தீர்வு சிங்களவர்களுக்கும், தமிழர்களுக்கும் இடையிலான பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வர உதவும் என்ற நிலையை உலகறியச் செய்தனர்.

இந்த அடிப்படைக் கோட்பாடுகளின் அடிப்படையில் தான் இலங்கை அரசாங்கம் எந்த ஒரு ஆலோசனையையும் முன்வைப்பதில் பிரயோசனம் இருக்கும் என்பதை இக்குழுக்கள் எடுத்துரைத்தது மாத்திரமல்ல, இந்த அதி முக்கியமான 4 கோட்பாடுகள் மறுக்கப்பட்டதன் விளைவாகத் தான் ஒரு சுதந்திரத் தமிழ் இராச்சியத்தை உருவாக்குவதற்கு முனைந்தார்கள் என்றும், சுட்டிக் காட்டி இருந்தார்கள்.

இந்த 4 அதிமுக்கியமான கோட்பாடுகளை இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதிகள் ஜூலை 13ம் திகதி அங்கீகரிப்பதற்கு மறுத்ததால், அந்த மாகாநாடு உடனடியாக ஸ்தம்பிதம் அடைந்தது. இந்த மகாநாட்டில் கலந்து கொண்ட 6 அமைப்புகள் புளொட் (PLOTE), ஈ.பி.ஆர்.எல்.எப். (EPRLF), ரெலோ (TELO), ஈரோஸ் (EROS), எல்.ரீ.ரீ.ஈ (LTTE), ரீ.யு.எல்.எப். (TULF) ஆகும்.

1987ல் இந்தியாவினுடைய தலையீட்டின் நிமித்தமும் இந்தியாவின் ஒத்துழைப்பின் நிமித்தமும் இந்திய - இலங்கை ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டது. இதன் விளைவாக அரசியல் சாசனத்தின் 13வது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டு, மாகாண சபைகள் அமைக்கப்பட்டன.

1985 ஜூலை 13ம் திகதி இலங்கை அரசாங்கத்தின் முன் வைத்த 4 அதி முக்கியமான கோட்பாடுகளையும் மிகவிரைவில் மறந்து தமிழ், அரசியல்வாதிகள் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை ஏற்பதற்கு முன் நின்றார்கள்.

ஆனால், நடந்து என்ன? தமிழ் அரசியல்வாதிகள் அரசியலில் உறுதியான அறுதியான நிலைப்பாட்டைக் கடைப்பிடிக்காதவர்கள் என்ற உண்மையைத் தெரிந்திருந்த சிங்கள அரசாங்கங்கள், மாவட்ட அபிவிருத்திச் சபையையும் மாகாண சபையையும் சட்ட ரீதியாகவும், நேர்மையாகவும் செயல்படுத்துவதற்கு முன்வரவில்லை. இதுவும் கூட நாம் எதிரிகளுக்கு எமது உறுதியற்ற அரசியல் நிலைப்பாட்டைக் காட்டியதன் விளைவேயாகும்.

ஆகையால், இன்றைய நிலையில் பேச்சுவார்த்தைகள் ஊடாகவும், ஒப்பந்தங்கள் ஊடாகவும் அமைக்கப்பட்ட மாவட்ட அபிவிருத்திச் சபைகளும், மாகாண சபைகளும், சரிவர இயங்க வைக்காதது மாத்திரமல்ல, தமிழ் இனத்தின் பிரதேசங்களில் அவை முற்றாக இல்லாதபடி சிங்கள அரசாங்கங்கள் ஒழித்து விட்டன. சிங்கள அரசாங்கங்களின் கர்வமிக்க செயல்கள் தமிழ் அரசியல்வாதிகளின் ஸ்திரமற்ற நிலைப்பாட்டின் விளைவேயாகும்.

இதையெல்லாம் பார்த்துக் கொண்டும்,



கடந்த காலங்களில் நடந்தைவையை உணர்ந்து கொண்டும், தமிழ் இனத்தின் சரித்திரம் என்பதைத் தெரிந்து கொண்டும், தமிழ் அரசியல்வாதிகள் 1989ல் ஜனாதிபதி பிரேமதாசாவினால் கூட்டப்பட்ட இன்னுமொரு சர்வகட்சி மகாநாட்டுக்குப் போனார்கள். அந்த மகாநாட்டிலும் கூட, தமிழ் அரசியல்வாதிகள் தங்களுக்கு வசதியான முறையில் திம்புவில் முன்வைக்கப்பட்ட அந்த 4 அதிமுக்கிய கோட்பாடுகளையும் காற்றில் பறக்கவிட்டு, வேறு ஏதோ அடிப்படையில் தமிழ் தேசிய இனத்தின் அரசியல் நிலையைப் பிரதிபலிக்க எத்தனித்தார்கள்.

1993ம் ஆண்டு நடுப்பகுதிக்குப் பின்பு சிங்கள இனத்தின் விசித்திரமான ஒரு நிலைப்பாட்டைக் காணக்கூடியதாக இருந்தது. இந்த விசித்திரமான நிலைப்பாட்டின் கதாநாயகராகக ஜனாதிபதி விஜேதுங்க விளங்கினார்.

இந்தப் பேர்வழி, இலங்கைத்தீவு ஒரு சிங்கள நாடு என்றும், இலங்கைத்தீவு ஒரு பௌத்த நாடு என்றும், மரத்தில் படரும் கொடிகள் தான் தமிழர் என்றும், தமிழர்கள் சிறுபான்மை மக்கள் மாத்திரம் தான் என்றும், இலங்கையில் நிலவுவது இனப்பிரச்சினை அல்ல ஒரு பயங்கரவாதப் பிரச்சினை தான் என்றும், தமிழரைப் பார்த்து ஏளனமாக வர்ணிப்பதற்கு முன் வந்தார். இந்த நிலைப்பாட்டுக்கு ஆதரவு அளிக்கவும், பிரதிபலிக்கவும், முன்னுக்கு எடுத்துச் செல்லவும் சிங்களவர், ஒருவரை ஒருவர் முந்தினர்.

ஜனாதிபதி விஜேதுங்கவின் நிலைப்பாடும், சிங்கள இனத்தினுடைய இந்த நிலைப்பாடும், சிங்கள தமிழ் மக்களுக்கு இடையிலான பிரச்சினையில் ஒரு திருப்பு முனையைக் கொண்டு வந்திருக்கின்றன. அது என்னவென்றால், சிங்களவர்களுடைய கூற்று தமிழ் தேசிய இனத்தின் தனித்துவத்துக்கும் இந்தத் தீவில் தமிழர்களின் நிலையையும் அந்தஸ்தையும் பற்றிக் கேள்விக்குறி எழுப்புவதாக வந்து அமைகின்றது. இது மிகவும் பொல்லாத ஒரு நிலைப்பாடாகும்.

ஏன், இன்னும் கூட ஜனாதிபதி குமாரதுங்க சொல்லிக் கொண்டு இருக்கின்றார், இலங்கையில் இனப்பிரச்சினை இல்லை. பயங்கரவாதப் பிரச்சினை தான் இருக்கின்றது என்றும், தமிழர்கள் சிறுபான்மை மக்கள் மாத்திரம் தான் என்றும் கூறிக்கொண்டு வரும் இந்த வேளையில், தமிழ் தேசிய இனத்தினுடைய தனித்துவத்தை திம்பு கோட்பாடுகளுக்கு அமைய முதற்கண் நிலைநாட்டாமல், வேறு ஏதேனும் விடயங்களில் தமிழ் அரசியல்வாதிகள் தங்களுடைய கவனத்தைச் செலுத்தினால் அவர்கள் தற்போதைய சந்ததியினருக்கு இழைக்கும் துரோகம் மாத்திரமல்லாமல், வருங்காலச் சந்ததியிருக்கும் கூட இழைக்கும் துரோகம் ஆகும்.

இன்று என்ன நடந்து கொண்டிருக்கின்றது? ஒரு சிங்களக் கொமிஷனை நிறுவி அந்தக் கொமிஷனில் தமிழருக்கு எதிராக ஒரு சாட்சியம் ஒவ்வொரு நாளும் அளிக்கப்பட்டு வருகின்றது. இது போதாதென்று கலாநிதி நளின் டி சில்வா தமிழ் மக்கள் இலங்கையின் ஒரு சிறிய பிரிவினர் மாத்திரமே என்று கூறத் தொடங்கியுள்ளார். இந்தக் கேலிக்கூத்தை ஆமோதிக்கும் விதத்தில், சிங்கள இனமே அவரின் பின்னால் அணிவகுத்து நிற்கின்றது.

இவர்களுக்குத் தமிழ் இனம் கொடுக்கும் மறுமொழி என்ன? இப்படியான வஞ்சகர்களுக்குக் கொடுக்கக் கூடிய தகுந்த பதிலடி என்னவென்றால், தமிழ் தேசிய இனம், ஒரே குரலில் திம்புவில் முன்வைத்த 4 கோட்பாடுகளையும், உடனடியாக இலங்கையின் அரசியல் சாசனத்தில் உள்ளடக்கக் கோரி, சிங்கள இனம், அதற்கு முன்வராத பட்சத்தில், தமிழ் ஈழம் என்னும் தனி நாட்டை இலங்கையின் தமிழர்கள், அமைக்கப் போகின்றோம் என்று சொல்லி, அதை நிறைவேற்ற முற்று முழுதாக உழைப்பது தான்.

இந்தத் தமிழ் நிலைப்பாட்டை வெளிப்படுத்தி உலகறியச் செய்வதற்கு தமிழ் அரசியல்வாதிகள் முன் வரவேண்டும்.

திம்புக் கோட்பாடுகளுக்கு சாவுமணி அடிக்கும் விதத்தில், இந்தத் தமிழ் அரசியல்வாதிகள் தீர்வுப்பொதியில் இரு விஷயங்களுக்குத் தலை அசைத்துக் கொண்டு இருக்கின்றார்கள். இவை யாவை?

தீர்வுப்பொதி என்னும் விசித்திர மாயையில் "கலைக்க முடியாத பிரதேசங்களின் கூட்டமைப்பு" (Indissoluable Union of Regions) என்ற பதம் இருக்கின்றதாம். அப்படியாகப் பிரதேசங்கள் கலைக்கப்பட முடியாது என்ற பதம் இருந்ததால் அது தமிழ் தேசிய இனத்தின் அதி முக்கிய கோட்பாடாகிய தமிழ் தேசிய இனத்திற்கு சுய நிர்ணய உரிமை இருக்கின்றது

நன்றி - நூலகத்திட்டம்



என்ற கோட்பாட்டுக்கு நேர்முரணான ஒரு விஷயமாக வந்து அமைகின்றது. இதைத் தமிழ்த்தேசிய இனம் எக்கட்டத்திலும், எக்காரணத்திற்காகவும், அனுமதிக்க முடியாதென்பதை இந்தத் துரோகச் செயலில் ஈடுபட்டு இருக்கின்ற நேர்மையற்ற, தமிழ் அரசியல் வாதிகளுக்கு உடனடியாக உணர்த் துவதற்கு முன்வர வேண்டியது அவசியமாகின்றது.

இன்னும் ஒரு தீய செயலில் இந்தத் தமிழ் அரசியல் துரோகிகள் ஈடுபட்டுக் கொண்டு உள்ளார்கள். அது என்னவெனில், பாரம்பரிய தமிழ் தாயகத்தின் எல்லைகளை மாற்றுவதற்குத் தயாராக இருக்கின்றனர் என்று சிங்கள விரோதிகளுக்குக் கொடுத்த வாக்குறுதியாகும். திம்புக் கோட்பாடுகளில் ஒரு கோட்பாடு தான் தமிழர் தாயகமென்று ஒன்று இருப்பது. ஆனால், அந்தக் தாயகத்தினுடைய எல்லைகள் இவை தான் என்பதைத் திட்டவட்டமாகத் தமிழ் அமைப்புகள் திம்புவில் சுட்டிக் காட்டவில்லை என்பதைத் தமிழினம் மறந்துவிடக்கூடாது. வருங்காலத்தில், தமிழ் தாயகத்தினுடைய எல்லைகள் ஏதோ ஒரு காரணத்தின் நிமித்தம் விஸ்தீரணமடையும் நிலை வந்து விட்டால் அதற்கு வழிகோலும்



விதத்தில் தான் எல்லைக்களைக் குறிப்பிடாமல் விட்டு விட்டார்கள். இந்த உண்மையை எல்லாம் மறந்து, இன்று சிங்கள எஜமான்களுக்கு ஜவாப் சொல்ல வேண்டுமென்ற ஒரு காரணத்திற்காக பாரம்பரிய தமிழ் பிரதேசத்தினுடைய எல்லைகளை அல்லது வடக்கு கிழக்கு மாகாணங்களின் எல்லைகளை, மாற்றியமைக்க முடியும் என்ற நிலைப்பாட்டிற்குத் தமிழ் அரசியல்வாதிகள் சாதகமாக இருந்ததால், அது, வடக்கு கிழக்கு மாகாணங்களில் இன்று இருக்கும் நிலப்பரப்பைக் குறைக்க அவர்கள் ஒத்தாசை கொடுக்கத் தயாராக இருக்கின்றார்கள் என்பதைப் பிரதிபலிக்கின்றது என்பதை தமிழினம் மறந்து விடக் கூடாது. ஆகையால் இதுவும் கூட, திம்புக் கோட்பாடுகளில் ஒன்றுக்கு நேர்முரணான ஒரு விடயமென்பதை இந்த தமிழ் அரசியல்வாதிகள் அறியாமல் இல்லை.

ஆகையால் அதிமுக்கியமான தமிழ் தேசிய இனத்தின் அடிப்படைக் கோட்பாடுகளுக்கு சாவுமணி அடிக்சக்கூடிய தன்மையை இந்த அரசாங்கத்தின் தீர்வுப்பொதி என்ற பாதகமான திட்டம் உள்ளடக்கி இருக்கும் பொழுது, எக்காரணம் கொண்டும், எந்த ரீதியிலும், அதனை ஆதரிக்க நான் தயாராக இல்லை. ஏனென்றால், அது தமிழ் தேசிய இனத்தினுடைய தனித்துவத்துக்கும், அந்தஸ்துக்கும், நிலைக்கும் விளைவிக்கும் இராஜ துரோகமாக வந்தடைகின்றபடியால் தான், இப்படியான ஒரு தீர்வுப் பொதியைத் தமிழினமே ஒன்றுபட்டு எதிர்க்க வேண்டுமென்று தாழ்மையாக வேண்டிக் கொள்கின்றேன். அதே மூச்சில், இந்தத் தீர்வுப்பொதியை ஆதரிக்கும், எந்த ஒரு தமிழரும், துரோகி என்ற அடிப்படையில், அந்தத் தமிழரை அரசியல்வானிலிருந்து ஒதுக்கவும், தமிழ் இனம் முன்வரவேண்டும் எனத் தாழ்மையாகக் கேட்டுக் கொள்கின்றேன்.

அதிமுக்கியமான 4 அடிப்படைத் திம்புக் கோட்பாடுகளை முதற்கண் இலங்கை அரசியல் சாசனத்தில் உள்ளடக்கி, அடுத்தபடியாக உள்ளடக்கப்பட்ட அரசியல் சாசனத்தின் அடிப்படையில் தமிழ் தேசிய இனத்தினுடைய தனித்துவத்தையும், அந்தஸ்தையும், நிலையையும் ஸ்தீரணப்படுத்தியதன் பின்பு தான் ஒரு அரசாங்க முறையைப் பற்றிக் (Syetem of Goverment) கதைப்பதில் பிரயோசனம் இருக்கும் என்ற அந்த உண்மை தமிழ் மக்கள் மத்தியில் வலுப்பெற்றுக் கொண்டு வருவதைக் காணக் கூடியதாக இருக்கின்றபடியால், இன்று திம்புக் கோட்பாடுகளுக்கு எதிரான கட்டுரைகளை ஒரு சில வெட்கம் கெட்ட தமிழர்கள் புனை பெயர்களுடன் தமிழ் பத்திரிகைகளுக்கும், ஆங்கிலப் பத்திரிகைகளுக்கும் எழுதத் தொடங்கியுள்ளார்கள் என்பதைத் தமிழ் மக்கள் கருத்தில் கொள்வது அவசியமாகின்றது.

அது மாத்திரமல்ல, கேவலம் பத்து வருடங்களுக்கு முன்னர் திம்புவில் இந்தக் கோட்பாடுகளின் முக்கியத்துவத்தையும், உண்மையையும் உணர்ந்து முன்வைத்த ஒரு தமிழ்க்கட்சி இன்று அந்தக் கோட்பாடுகள் சம்பந்தமாக வினா எழுப்ப முன்வந்திருப்பது, எவ்வித துரோகச் செயல் என்பதைத் தமிழ் மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

அதேபோல் அந்த 4 அடிப்படைக் கோட்பாடுகளை ஆமோதித்து உலகறியச் செய்த இன்னும் 4 தமிழ் கட்சிகள் இன்று அந்தக் கோட்பாடுகள் சம்பந்தமாகத் திட்டவட்டமாகத் தங்களுடைய நிலைப்பாட்டைச் சொல்வதற்கு ஒழித்து விளையாடித் தங்களுடைய கோழைத்தனத்தை வெளிப்படுத்துவதையும் தமிழ் இனம் கவனிப்பது அவசியமாகின்றது.

இன்னுமொரு உண்மையையும் தமிழ் இனம் மறந்துவிடக் கூடாது. அது என்னவெனில், தமிழீழ விடுதலைப் புலிகளினுடைய ஒத்தாசையும், ஒத்துழைப்பும், அரசியல் தீர்வுக்கு அத்தியாவசியம் என்றும், அவர்களுடைய நிலைப்பாடு என்னவென்று ஏங்கித் தவிக்கும் பல நாடுகளுக்கும், இனங்களுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் திம்புவில் முன்வைத்த 4 கோட்பாடுகளையும், முற்றுமுழுதாக ஆதரித்ததன் நிமித்தம், அந்தக் கோட்பாடுகளை முழுமையாக உள்ளடக்கிப் பிரதிபலிக்கும் எந்த அரசியல் தீர்வுக்கும் விடுதலைப் புலிகள் மற்ற அமைப்புகளைப் போல் அல்லாமல், நேர்மையாக ஆதரிப்பார்கள் என்ற நம்பிக்கையை உலகம் அறிந்திருக்க வேண்டியது அத்தியாவசியமாகின்றது. ஆகையால், திம்புக்கோட்பாடுகள் நான்கும், முழுமையாக உள்ளடக்கப்பட்ட ஒரு அரசியல் சாசனத்தின் அடிப்படையில் தான் வேறு எந்த விடயமும் அலசி ஆராயப்பட முடியும் என்பதை, முதற்கண் உலகம் உணர வேண்டும்.

வடக்கிலும், கிழக்கிலும் வாழ்கின்ற தமிழ் மக்களின் குரலை அந்நிய சிங்கள இராணுவம் ஒலிக்கவிடாமல் தடுத்திருக்கும் பொழுது தமிழ் இனத்தினுடைய நிலைப்பாட்டை உலகறியச் செய்யக்கூடிய நிலையிலிருக்கும் கொழும்பு வாழ் தமிழர்களுடைய குரலை, கொழும்பு வாழ் தமிழர்களே ஒலிக்காது இருக்கச் செய்தல் எவ்வளவு ஒரு கவலைக்குரிய விஷயம் என்பதை கொழும்பு வாழ் தமிழர்கள் உணர வேண்டிய நாள் வந்து விட்டது.

அது மாத்திரமல்ல கொழும்பில் வெளிநாட்டு ராஜதந்திரிகள் இருக்கின்றார்கள். வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் இருக் கின்றார்கள். வெளிநாட்டு ஸ்தாபனங்கள் இருக்கின்றன. வெளிநாட்டு அரசு சார்பற்ற ஸ்தாபனங்கள் இருக்கின்றன. இவர்கள் எல்லோரும் உணரக் கூடிய விதத்தில் தமிழ் இனம் தனது நிலையைத் திட்டவட்டமாக உணர்த்த முடியும். அந்த சந்தர்ப்பத்தைக் கொழும்பு வாழ் தமிழ் இனம் உடனடியாகக் கையேற்க வேண்டும். திம்புக் கோட்பாடுகளின் அடிப்டையில் தான் முதற்கண் தீர்வு வேண்டும் என்பது தான் தமிழ் இனத்தின் ஸ்தீரமான நிலை என்பதைத் தமிழ் இனம் உணர்த்தக் கூடியதாக இருந்ததால் அந்நிலை கொழும்பில் இருக்கும் வெளிநாட்டு ஸ்தாபனங்கள் ஊடாக உலகமெங்கும் பரவும். இதைச் செய்வதற்கு கொழும்பு வாழ் தமிழ் மக்கள் இக்காலகட்டத்தில் முன் வருவது அவசியமாகின்றது.

**- ஜீ.ஜீ.பொன்னம்பலம்**

உயர் - தொழில்நுட்பவியல் ஏகாதிபத்தியவாதம் - 02

# மழுங்கடிக்கப்பட்ட நெல்விதைகள்

**- றியாஸ்**

பண்டைய காலம் தொட்டே இலங்கை ஒரு பூர்வீக விவசாய நாடாக இருந்து வந்துள்ளது. இதற்கு இலங்கையின் பல பாகங்களிலும் இருக்கின்ற குளங்கள் சான்றுகளாகும். உலகிலேயே ஒரு சதுர கிலோமீற்றருக்கு காணப்படும் குளங்களின் அடர்த்தி கூடிய நாடு இலங்கையாகும். இந்தக் குளங்களை பல சிங்கள, தமிழ் அரசர்கள் கட்டுவித்து, விவசாயத்தை அதிலும் குறிப்பாக நெற்செய்கையை ஊக்குவித்தனர்.

இலங்கையில் பெரும்பாலான விவசாயிகள் விவசாயத்தில் வல்லமையுள்ளவர்களாவர். அதிலும் மரபுவழி, கலாச்சார, பாரம்பரிய தொழில்நுட்பத்தை உள்ளடக்கிய முறைகளைக் கையாண்டு வெற்றிகண்டவர்கள். பண்டைய இலங்கையிலுள்ள குளக்கட்டுமான, நீர்ப்பாசன, சேதனப் பசளையை நம்பிய விவசாய முறைகள் இன்றும் மேற்கத்தைய விஞ்ஞானிகளை வியப்பில் ஆழ்த்தும் ஒன்றாகவே இருக்கின்றன. இருந்தும் இன்றைய நவீன தொழில்நுட்ப ஏகாதிபத்தியவாதம் நமது பண்டைய விவசாய முறைகளைச் சிதைப்பதில் குறியாயிருக்கின்றது.

நமது முன்னோரான விவசாயிகள் தமக்கு வேண்டிய விதை நெல்லை தமது வயல்களிலிருந்து பெற்ற அறுவடைகளிலிருந்து கணிசமான ஒரு பகுதியைச் சேமித்து விதையாகப் பயன்படுத்தி, நோய், பீடைத் தாக்கங்களிலிருந்து இயற்கையான பாதுகாப்பை பெற்று, நல்ல செழிப்பான அறுவடைகளைப் பெற்றார்கள்.

1950-60 களில் அதிக விளைச்சலைத் தரும் நெலினங்கள் என்று கூறிக் கொண்டு வெளிநாடுகளிலிருந்து புது நெல்விதையினங்கள் இறக்குமதி செய்யப்பட்டன. கூடவே விளைச்சலை அதிகரிப்பதற்கான இரசாயனப் பசளைகளும் அந்நாடுகளிடமிருந்தே வாங்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து குறுகிய கால நெல்லினமொன்று அறிமுகம் செய்யப்பட்டது. இதனால் இருபோக நெற்செய்கை முப்போகமாக அதிகரித்தது. பல்லினப் பயிர்ச்செய்கை விடுத்து ஓரினப் பயிர்ச் செய்கையும் அறிமுகப்படுத்தப்பட்டது.

இதன் காரணமாக அதிக விளைச்சல்கள் கிடைத்தாலும், நோய்க் கிருமிகளினதும், பீடைகளினதும் தாக்கம் அதிகரித்தது மிகவும் விரைவாகப் பல்கிப் பெருகிய கிருமிகளையும், பீடைகளையும் அழிப்பதற்கு இரசாயனக் கொல்லிகளை வகை தொகையாக இறக்குமதி செய்து கண்மண் தெரியாமல் பிரயோகித்து பீடைகளும், கிருமிகளும் ஒழிந்ததாக சந்தோசம் கொண்டார்கள்.

ஒரு அங்கியின் விருத்திக்கும், தொழிற்பாட்டுக்கும், கட்டமைப்புக்கும், அதன் கலத்தின், கருவின், நிறமூர்த்தத்தில் காணப்படும் பல்லாயிரக்கணக்கான பரம்பரையலகுகள் காரணமாகும். இந்தப் பரம்பரையலகுகளே ஒரு அங்கியின் தோற்றவமைப்பையும், பரம்பரையமைப்பையும் தீர்மானிக்கின்றன.

மேற்கத்தைய நாடுகளின் ஆதரவில், சில விவசாயக் கம்பனிகள் நிறைய விதைகளை உருவாக்கியுள்ளன. அவற்றில் முக்கியமானது, இந்தியத் துணைக் கண்டத்தினதும், தென்கிழக்காசிய, சீன, ஜப்பான் நாடுகளினதும் பிரதான உணவுப் பொருளான நெல்லாகும். ஒழித்துக் கட்டும் முயற்சியில் அணுகுண்டுகளை வைத்துச் சோதனை செய்த ஏகாதிபத்தியவாதம் இன்று அணுக்குண்டுகளை விடுத்து நெல்லில் தனது கவனத்தை செலுத்தத் தொடங்கியுள்ளது.

இன்று மழுங்கடிக்கப்பட்ட பாலுக்குரியதான பரம்பரையலகைக் கொண்டுள்ள விதைநெல் பாவனைக்கு விடப்பட்டுள்ளன. இந்த விதைகள் முளைத்து பயிராக வளர்ந்து, அறுவடை செய்யும் போது, அந்த விதைகளை உணவிற்காக மாத்திரமே பயன்படுத்த முடியும். அவற்றை விதை நெல்லாகப் பயன்படுத்தி மீண்டும் பயிர்ச் செய்கையில் மேற் கொள்ள முடியாது. ஏனெனில் அந்த விதைக்குள் மிகவும் வீரியமான மலட்டுத் தன்மை புகுத்தப்பட்டுள்ளது. இதனால் இலங்கை போன்ற நாடுகளிலுள்ள விவசாயிகள் ஒவ்வொரு முறையும் நடுகைக்காக வெளிநாட்டு புதிய பலவகை நெல் விதையினங்களையே நம்பியிருக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள் தள்ளப்படுகின்றனர். இந்த விதைகளை உற்பத்தி செய்யும் நாடுகள் தங்கள் நாடுகளில் இதனை பயன்படுத்த விரும்புவதில்லை. அபிவிருத்தியடைந்த நாடுகளோ இந்த விதைகளைப் பயன்படுத்துவதை புத்திசாதுரியமாக தவிர்த்துவிடுகின்றன.

இந்த மலட்டுத் தன்மையான விதைகளைப் பாவிக்கும் போது, காலநிலை, நோய், பீடைத் தாக்கம் போன்ற காரணிகளால் அறுவடை பாதிக்கும் நிலைமை ஏற்படலாம். இதனால் விவசாயியின்



வருமானம் குறைந்து, கடனாளியாகும் நிலை ஏற்படும். இதனால் அடுத்த போகத்துக்குரிய நெல்லை வாங்குவதற்குரிய பணத்திற்கு அவன் திண்டாடி, அடுத்த போக நெற்செய்கையைக் கைவிடுவான்.

இந்த மழுங்கடிக்கப்பட்ட விதை நெல்லைப் பயிரிட ஊக்கப்படுத்தும், ஆய்வாளர்களுக்கும், நிறுவனங்களுக்கும் பின்னால் இலாபத்தை மையம் கொண்ட பொருளாதார நோக்கு இருக்கிறதே தவிர வேறொன்றுமில்லை. அந்த விதைகளை ஏற்க மறுக்கும் நாடுகளுக்கு அதிக விளைச்சலை கொடுக்கும், வேறு தொழில்நுட்பங்களையும், வேறு உதவிகளையும் வழங்குவதற்கு மேற்கத்தைய நாடுகளும், அதன் நிறுவனங்களும் மறுக்கின்றன.

இன்று இலங்கையில் பல்தேசியக் கம்பனிகள் தமது சுயநலத்திற்காக பெருந்தொகையான பணத்தை முதலீடு செய்து இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன. வளர்ந்த நாடுகள் வளர்முக நாடுகளில் புகுத்தும் தொழில்நுட்பங்கள் தமது நாட்டின் வளர்ச்சிக்கு எந்தக் காலத்திலும் பொருத்தமற்றது என்று வளர்முக நாடுகளின் மக்கள் உணரத் தலைப்படத் தொடங்கிவிட்டனர். நமது விவசாயிகள் விளம்பரங்களைக் கண்டு பிறநாட்டு அறிமுகங்களை நாடாமல் நமது பிரதேசத்தில் உள்ள நல்ல உற்பத்தித் திறனுள்ள விதையினங்களைப் பாதுகாத்து, அதிலிருந்தே விதைகளைப் பெற்று உற்பத்தி செய்தால்தான், நாம் கூடிய விளைச்சலையும், அத்துடன் அவற்றின் பரம்பரையியலைப் பாதுகாக்கவும் (Genetic Conservation) முடியும். இதன் மூலம் எமது நாட்டுக்குரிய நெல் இனங்களைப் பேணிப் பாதுகாக்கவும் முடியும்.

எனவே இந்த நவீன தொழில்நுட்பங்களினால் ஏற்படும் தீமைகள் பற்றிய விழிப்புணர்வு விவசாயிகள் மத்தியில் இருப்பதுவே வரும் காலங்களில் நமது பாரம்பரிய விவசாய நடவடிக்கைகள் தடங்கல்கள் அடைய நேரிடாமல் பாதுகாப்பதற்குரிய ஒரே வழியாகும்.

நன்றி - நூலகத்திட்டம்



# புதிய அடையாளங்களும், முன்நோக்கிய பாய்ச்சல்களும்

## ~ ஓவிய அட்டைகள் பற்றிய பார்வை

– கிக்கோ

ஓவியம் என்பதை வெறும் ஓவியம், ஒரு படைப்பு, ரசனைக்குரிய ஊடகம் என்பதாக இதுவரை இருந்து வந்த தளத்திலிருந்து, ஓவியத்தை ஒரு பாவனைப் பொருளாக மாற்றிய முக்கிய நிகழ்வொன்று கடந்த ஆண்டு மார்கழி மாதம் மட்டக்களப்பில் ஆடம்பரமின்றி அமைதியாக நடந்து முடிந்துள்ளது. வசதி படைத்தோருக்கான, பிரபல்யமான ஓவியர்களுக்கும், 'உயர்ந்த" கலாரசனையுள்ள, பொருள் படைத்த மக்களுக்குமான உறவாக இருந்த ஓவியம், சுவரில் வைத்து அழகு பார்க்கப்படுவது என்ற நிலையிலிருந்து விடுபட்டு விலையிலும், பாவனை முறையிலும் சராசரி முக்களை நோக்கி இறங்கி வந்திருக்கிறது. இருவேறு குழுக்கள் தனித்தனியாக வெவ்வேறு தினங்களில் நடத்தி முடித்த இந்த "ஓவிய அட்டைகள் வாழ்த்து மடல்களாக..." என்ற கண்காட்சியும் விற்பனையும் பல்வேறு சிந்தனைகளைக் கிளறிவிட்டுச் சென்றுள்ளமை இவற்றுக்குக் கிடைத்த வெற்றி என்று சொல்லலாம்.

கடந்த மார்கழி 15,16ம் திகதிகளில் சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தின் முயற்சியில் சாள்ஸ் மண்டபத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த ஓவிய வாழ்த்து



அட்டைகள் பற்றிய கண்காட்சி பெயர் வெளித் தெரியாத அல்லது வெளிப்படுத்த விரும்பாத முழுமையாக ஓவியப் பயிற்சி பெறாத, தங்கள் உணர்வுகளை வர்ணங்களினூடு வெளிக்காட்டத் தெரிந்த பல பெண்களின் ஆக்கங்களைக் கொண்டிருந்தது. அதேவேளை கடந்த மார்கழி 18ல் மட்டு.தாண்டவன்வெளி ரோமன் கத்தோலிக்கப் பாடசாலையில் இடம்பெற்ற கண்காட்சி, ஓவிய நுணுக்கங்களும், அவை பற்றிய புரிதல்களும், கூடவே பயிற்சியும் பெற்ற ஸ்ரீ கமலச்சந்திரன் (ஸ்ரீ கமால்), ஈ.குலராஜ் போன்றோரும் நிரம்பிய படைப்புத்திறனுள்ள இளம் ஓவியர்களான வத்சன், தீபன், ரூபன் போன்றோரும் தங்கள் ஆளுமைகளை வெளிக்காட்டும் நிகழ்வாகவும் இருந்தது.

ஓவியத்தைப் பயன்பாடுள்ள சாதனமாக மாற்றுவது எங்ஙனம் என்கிற பிரக்ஞை ஏராளமான ஓவியர்களுக்கு வெகுகாலமாகவே இருந்து வந்துள்ளது. சரித்திர ஓட்டத்தில் சீன மண்சாடிகள் தொடக்கம் போர்வீரர்களின் வாளின் கைப்பிடியில் கூட, இடம்பெறுமளவு ஆதிக்கம் பெற்றிருந்தது ஓவியம். இதே நிகழ்வுகள் தமிழர் வாழ்வில் கோலமாகவும், பச்சை குத்தல், வேலைப்பாடுகள் நிறைந்த சேலைகள் மற்றும் ஆபரணங்கள் போன்று அன்றாடப் பாவனைப் பொருளாகியது ஒரு நிகழ்வு. இடைப்பட்ட காலத்தில் மேற்கத்தைய ஓவியச் செல்வாக்கும் ஓவியத்திற்கேற்பட்ட அபரிதமான மரியாதையும் ஓவியம் பாவனைப் பொருள் என்கிற தளத்திலிருந்து ஓவியம் ரசனைக்குரிய அல்லது மரியாதைக்குரிய பொருளாகியது. ஓவியம் பாவனைக்குரிய பொருளாக இருந்த போது விற்பனையை அடித்தளமாகக் கொண்டிருந்ததால் ஒரேவிதமான போக்கும் விருத்தியடையாத நுட்பங்களைக் கொண்டதாகவும், பரீட்சார்த்த முயற்சி அற்றதாகவும் அமைந்தது. ஆனால், அதுவே ரசனைக்குரியதாக மாறியபோது ஏராளமான பரீட்சார்த்த முயற்சிகள் நடந்தேறி புதிய புதிய நுணுக்கங்கள், வெவ்வேறு ஓவிய உத்திகள் பல ஆண்டுகாலச் சவாரியில் மிகுந்த போராட்டத்தின் மத்தியில் உருவாகின. உருவாகியது மட்டுமன்றி செவ்வகச் சதுர சட்டங்களின் மத்தியில் சுவரில் தொங்கவிடப்பட்டும், நூதன சாலைகளில் பாதுகாக்கப்படும் 'ஓவியம்' என்கிற மரியாதையுடன் அங்கீகரிக்கப்பட்டன. அதேவேளை பாவனைக்குரிய ஓவியம் துணிகளில், பீங்கான்களில், அலங்காரங்களில் என்று மீண்டும் மீண்டும் ஒரே பாடு பொருளில் வந்து சலிப்பேற்றி ஓவிய அந்தஸ்த்தை இழந்தன.

இந்தியாவில் மகாராஷ்டிராவைச் சேர்ந்த 'பகவான் சவான்' இது போல் வீட்டுப் பொருள்களில் நவீன ஓவியம் வரைபவர். ஓவியக் கல்லூரியில் படிக்கும்போதே தேசிய விருது வாங்கிய திறமையாளர். இது பற்றி தென்னிந்திய ஓவியரான ஆதிமூலம் "ஒரு ஓவியத்தை நாம் அன்றாடம் உபயோகப்படுத்தும் பொருட்களின் மீது வரைந்து வைப்பது ஓவியம் பற்றிய புரிதல் இல்லாதவரையும் கூட ஈர்க்கக் கூடிய விஷயமாக ஆகிவிடுகிறது. ஒரு பயன்பாட்டுப் பொருளாகவும் ஓவியம் மாறுகிறது. வெறுமனே ஓவியமாக இருக்கும்போது கவராத ஒன்று இந்தப் பொருட்களின் மீது இருக்கும் போது ஈர்க்கிறது" என்கிறார்.

ஓவியர் ரவிவர்மாவின் வருகையுடன் இந்திய மக்களுக்கான கலாசார அடையாளங்களுடன் கூடிய ஓவிய மரபு பின்தள்ளப்படுகிறது. காலங்காலமாக தனித் தன்மையுடன் இருந்த ஓவியங்கள் தமது ஈர்ப்பை இழக்க மேற்கத்தைய அச்சு அசலாக வரையும் பாணி ரவிவர்மா மூலம் உட்புகுத்தப்படுகிறது. ரவிவர்மாவின் தெய்வீக அழகு பொருந்திய மனித மற்றும் தெய்வ உருவங்களுடன், அவற்றின் மக்கட் செல்வாக்குடன் ஒப்பிடும்போது பண்டைய மரபு ஓவியங்கள் தமது அடையாளத்தை இழந்தன. தஞ்சாவூர் ஓவிய மரபு போன்ற வெகு சில தப்பிப் பிழைத்தாலும் ரவிவர்மாவின் வருகையை தொடர்ந்து ஏராளமான குட்டி ரவிவர்மாக்களின் படையெடுப்பால் இவ்வகை ஓவியங்கள் தொடர்ந்து இவை தான் ஓவியம் என்கிற கருத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்தின. இன்றைய காலண்டர்கள் முதல் வாழ்த்து அட்டைகளில் வரும் தெய்வப் படங்கள் வரை அனைத்தும் இவற்றின் தொடர்ச்சி தான். இன்று வரை தொடரும் இவ்வகை வாழ்த்து அட்டைகளின் வடிவமைப்பு மற்றும் அதன் தளப் பொருள் பற்றிய கேள்வியை எழுப்பியிருக்கின்றன இவ்விரு கண்காட்சிகளும்.

பல பெண்கள் அமைப்புகளின் ஒத்துழைப்புடன் சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தின் தலைமையில் இடம்பெற்ற இக்கண்காட்சி தன்னளவில் நிறைவானது. வெவ்வேறு அமைப்புகளின்



ஓவிய அட்டைகள் வெவ்வேறு பகுதிகளில் ஒழுங்குபடுத்தப்பட்ட நேர்த்தியும், தொங்க விடப்பட்ட பதாகைகளின் அமைப்பும் வழமையான ஓவியக் கண்காட்சிகளிலிருந்து வித்தியாசப்பட்டது.

மண்டபத்துக்குள் நுழைகிறபோதே பெண்விடுதலை பற்றியும், சமூகத்தால் பெண்கள்படும் அவதி பற்றியும் ஓவியங்கள் பேசும் என்று நினைத்துக் கொண்டு போனால் எந்தவிதப் பிரச்சார வாடையும் ஓவிய வாழ்த்து அட்டைகளில் இல்லை. மறுதலையாக இவை தொங்கல்களாகத் தொங்க விடப்பட்டிருந்ததையும் அவதானிக்க முடிந்தது.

இவர்களின் ஓவிய அட்டைகள் பற்றி திறந்த மனதுடன் தாராளமாகவே பாராட்டலாம். உருவங்களற்ற அல்லது மிகச் சொற்பமான உருவங்களைக் கொண்ட வர்ணச் சிதறல்களும், சேலைத் தலைப்புக்களில் காணப்படும் அலங்காரங்களுமே மையக்கருத்து. ஆனால், அவை ஓவியங்களாக வாழ்த்து அட்டைகளில் இடம் பெறும்போது நம்மையறியாமல் ஈர்க்கிறது. குறிப்பாக வர்ணக் கலவையில் பயன்படுத்தப்பட்ட வர்ணங்கள் அபூர்வமானவை. மென்மையான அல்லது மிக அதிகமான குளிர்மையான வர்ணங்கள். கண்களைக் கலவரப்படுத்தாத இந்த வர்ணங்கள் பெண்கள் வர்ணங்களைப் பயன்படுத்தும் போது மென்மையான, ஆடம்பரமற்ற, கலவரப்படுத்தாத வர்ணங்களையே விரும்புவார்கள் என்று நினைக்கத் தோன்றுகிறது. பாவிக்கப்பட்ட பெரும்பாலான வர்ணங்கள் fabric வகையைச் சேர்ந்தவை.

ஓவியம் வரையாதவர்கள், ஓவியம்



பற்றிய புரிதல் இல்லாதவர்கள் ஓவியம் வரைதல் என்பது ஓவியம் அனைவருக்குமான மொழி என்பதை இயம்பியிருக்கிறது. இந்த ஓவியர்களின் ஓவிய பின்புலத்தை ஆராய்ந்தபோது பல ஓவியப் பயிற்சிப் பட்டறைகளின் அனுபவங்களின் மூலம் ஓவிய நுணுக்கங்களையும், ரசனையையும் பெற்றார்கள் என அறியக் கிடக்கிறது. இந்த இடத்திலே ஒரு விடயத்தையும் கோடிட்டுக் காட்டுதல் வேண்டும். பயிற்சிப் பட்டறையில் விரிவுரை வழங்கிய அல்லது பயிற்சி கொடுத்த ஓவியரின்/ ஓவியர்களின் ஆளுமையும், வர்ணங்களின் பாவிப்பும் ஒன்றுமே அறியாத, ஓவிய நெளிவுச் சுளிவுகள் அற்ற ஒரு கூட்டத்தால் அப்படியே உள்வாங்கி விடவும், அந்த வர்ணக் கலவை தான் தனித்து ஒரு ஓவியம் என்றும் ஒரு நினைப்பை உருவாக்கி விடவும் நிரம்பவே சாத்தியமுண்டு. அதன் பிரதிபலிப்பு தானோ என்னவோ ஓவிய அட்டைகளில் தென்பட்ட பொதுவான சில அலங்காரங்களும் மென்மையான வர்ணச் சிதறல்களும். ஒருவேளை பயிற்சிப்பட்டறைகள் இல்லாமல் இந்தக் குழுவினர் வரைந்திருந்தால் வெவ்வேறு வர்ணக்கலவைகள், வெவ்வேறு வடிவங்களில் கிடைத்திருக்குமோ என எண்ணத் தோன்றுகிறது. அதேவேளை எந்த முன் முயற்சியுமே இல்லாமல் ஒரு ஓவியச் சமநிலையையும் ஓவியத்தையும் ஆக்க முடியுமா என்கிற கேள்வியும் எழுகிறது. எனினும் பயிற்சிப்




பட்டறையை வழங்கிய ஓவியரின் / ஓவியர்களின் தாக்கம் தெரிகிறதா இல்லையா என்பதைத் திட்டவட்டமாகக் கூற இதுபோல் மேலும் சில கண்காட்சிகள் தேவை என்பதும், இவை பற்றிய நீண்ட, தொடர்ந்த கலந்துரையாடல்கள் அவசியம் என்பதும் குறிப்பிடக்கூடிய ஒன்று.

இன்னும் ஒரு விடயம். தனித்து வாழ்த்து அட்டைகள் எனும் வரையறைக்குள் நிற்கிற போது இந்தப் பெண் ஓவியர்களின் கைகள் கட்டப்பட்டிருக்கலாம். "எப்போதும் நல்ல விடயங்களை மட்டுமே காட்ட வேண்டும்" என்கிற எமது கலாசார பண்பாட்டு ரீதியிலான நினைப்புடன் தொடரும் வாழ்த்து அட்டைகளை வடிவமைக்கும் போது, தங்களின் இயல்பான சமுதாயத்தின் மேலுள்ள கோபம், எரிச்சல், அனுதாபம் மற்றும் ஆதங்கம் போன்ற இயல்புகளை வெளிக் காட்ட முடியுமா? அவ்வாறு வெளிக்காட்டினால் வாழ்த்து அட்டைகளை எவரும் வாங்க முன்வருவார்களா என்பதெல்லாம் ஒருபுறம் இருக்க, இவை பற்றி நாம் எப்போது சிந்திக்கப் போகிறோம்? இன்னுமொருவரை அன்புடன் வாழ்த்தும் போது கூட நாம் படும் துன்பத்தின் சாயலை தெரியப்படுத்தக் கூடாதா? முழுவதுமாகப் போர்ச்சூழலில் வாழும் நாம் எவ்வாறு கந்தக வாசனையைச் சிறிதும் நுகராது வாழும் ஒரு மேற்கு நாட்டு அல்லது இந்திய வடிவமைப்பாளர்களின் வாழ்த்து அட்டைகளை கூசாமல் வாங்கி அனுப்புகிறோம்?

ஓவியர் ஸ்ரீ கமலச்சந்திரனின் கருத்தும் ஓரளவு இதை ஒட்டியிருந்தது. வழமையான போக்கிலிருந்து விலகியதாகவும், புத்தோவிய முறைகளை வாழ்த்து அட்டைகளில் புகுத்துவதும் தான் தனது நோக்கமாகக் கூறுகிறார் கமலச்சந்திரன். அனுபவம் பெற்ற பல ஆண்டுகளாக ஓவிய ஆசிரியராகக் கடமையாற்றிய அவரின்

⇨19

நன்றி - நூலகத்திட்டம்



## வெட்கம்

பல்வேறு விடயங்களுக்காக
நான் குற்றவாளி
முக்கியமாக மௌனமாக இருந்ததற்கு

எண்ணற்ற, அர்த்தமற்ற சண்டைகளில்
என் சகோதரர்கள்
ஒருவரையொருவர் கொன்றழித்தனர்.
எதிர்ப்பு எதையுமே
நான் தெரிவிக்கவில்லை.

நாகரிகத்தின் மத்தியில்
என் சகோதரிகள்
வதைக்கப்பட்டனர், கொளுத்தப்பட்டனர்
வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டனர்,
ஒடுக்கப்பட்டவருக்காக
எந்தவொரு பதாகையையும்
உயர்த்தியதில்லை நான்.



எங்கோ ஒரு குழந்தை
இறந்துபோன தன்தாயின்
வெற்றுமுலையை உறிஞ்சியபடி...
அவர்களுடன் செலவிட
எனக்கு நேரம் கிடையாது
கண்ணீர் கிடையாது
ஒரு சொல்தானும் கிடையாது.

கேடு
பெருமிதத்தில் அமர்ந்திருக்கிறது
அரியாசனத்தில்,
அதைக் கண்டித்து எழும்பவில்லை
என் குரல்.

கடவுளுக்கும் மனிதத்துக்கும் முன்னால்
என் அறியாமையை எதிர்க்க
வார்த்தைகள் இல்லை என்னிடம்.
ஏனென்றால்
எனக்குத் தெரியும்
பல்வேறு விடயங்களுக்காக
குற்றவாளி நான்.

முக்கியமாக
மௌனமாக இருந்ததற்கு.

*H.K. கௌல் அவர்கள் தொகுத்த, 'கவிதை இந்தியா: மௌனக் குரல்கள்" (poetry India: Voices of the Voicelees) ஆங்கிலக் கவிதைத் தொகுப்பில் இடம்பெற்றிருந்த ஒமேர் அஹமட் அவர்களது 'வெட்கம்" (shame) கவிதையின் தமிழ் வடிவம்
சி.ஜெயசங்கர்.

## கல்லறை வாழ்வு



எங்கிருந்து எதுவரை விசாலிக்கிறது
எம் வாழ்வு!
பிறப்பெனும் நிலையற்ற நிஜங்களுக்
குள்ளிருந்தா.../
எதுவரை விசாலிக்கிறது வாழ்க்கை!

துயரங்களின் துரத்துதலால் அவஸ்தைப்பட்டு
அடிமையாகிப்போன பீதியுறைந்த வாழ்வு
எம்முடையதென்ற உண்மை புரியுமா
உனக்கு/
புரியாது!
எமதின் துயரத்துடனான வாழ்வு
உனக்கு மட்டுமல்ல யாருக்குமே புரியாது!

பிறப்பெடுத்த கணங்களில் முளைவிட்ட
துயரங்கள் தான் எம் வாழ்க்கையினுடையது!
இன்று வாழ்வு துளிர்க்கும் கருவறைக்குள்
இருந்தும் துயரத்துடனேயே பிறக்கிறது
குழந்தை...

எனக்கும், உனக்குமுரியதான வாழ்வு
ஆத்மாவின் ஆகர்ஷிப்பில் அலைந்து திரியும்
ஆவிகளைப் போலாகிவிடுமென்றச்சம்
உன்னக முறுத்துகிறதா.../
ஆகட்டும் அவ்வாழ்க்கை அது அச்சங்களைக்
கடந்த சலன வாழ்க்கை...

துப்பாக்கிகளின் உறுத்தலுக்கும்,
காக்கிச்சட்டையின் காரணமற்ற
துலக்குதலுக்கும் காரணமாகிப்போன
இழிதுயர் வாழ்க்கை இனியும் வேண்டாம்!

இனித்துளிர்க்கும் வாழ்க்கை
இனிமை நிகர்த்ததாகவிருக்கட்டும்!

எனின், நீவா அன்ப,
ஒடுக்குதலை ஒழிக்கும் குரலாக ஒலிக்க,
நீ வா...!
இன்னும் எமக்கான கல்லறைகள்
காலியாகவே கிடக்கின்றன!
வா!
கல்லறைக்குள் காணாமல்போன
எமதின் வாழ்வுகள் மீளத்துளிர்க்க...!

~ பாலைநகர் ஜிஃப்ரி

# இது போராடும் காலம்!

"வீட்டிலை சின்னத்தம்பி நிற்கிறாரோ...?"

"ஆரது..? கொஞ்சம் கூட மரியாதையில்லாமல் பேர் சொல்லிக் கூப்பிடுகிறது." பலத்த குரலில் சத்தம் போட்டவாறு, வீட்டிற்குள் இருந்து முன் விறாந்தையூடாக வெளியே வந்தாள் சின்னத் தம்பியின் மனைவி சிவபாக்கியம்.

வீட்டு முற்றத்தில் மிதி வண்டியொன்றின் பின் பக்கத்தில் துணிப்பொட்டலம் ஒன்று கட்டடியபடியிருக்க மிதிவண்டியைப் பிடித்துக் கொண்டு நின்றான் சரவணன்.

"ஆர்.. நீ? கட்டாடி கணபதிப்பிள்ளையின்ரை மோனே...?"

"ஓமோம்."

சிவபாக்கியத்துக்கு முகம் சிவந்து விட்டது. பரம்பரை பரம்பரையாக தங்கள் பரம்பரைக்கு துணி வெளுத்துக் கொடுத்து, அடிமை குடிமையாக வாழ்ந்து வந்த ஒரு குடும்பம் இன்று தன் கணவரின் பெயரைச் சொல்லிக் கூப்பிடுகிற அளவுக்கு முன்னேறி விட்டதை நினைக்க... சிவபாக்கியத்தக்கு ஆத்திரத்தில் கால்கள் நிலத்தில் நிலை கொள்ளாமல் தவித்தன.

"கட்டாடியின்ரை பொடிப் பிள்ளைக்கு மட்டுமரியாதை தெரியேல்லைப்போல.." - அலட்சிய முகபாவத்துடன் ஆத்திரத்தோடு கேட்டாள் சிவபாக்கியம்.

"எல்லாம் தெரிஞ்சபடியால் தான் இண்டைக்கு நானே உடுப்புக்களை எடுத்துக் கொண்டு இஞ்சை வந்தனான்."

சிவபாக்கியத்தக்கு எதுவும் புரியவில்லை. "ஏன் உன்ரை கொப்பன் இன் வரமாட்டானா?"

"இல்லை! இனி நானும் வரமாட்டன்"

சரவணன் கூறிய பதிலைக் கேட்டு சிவபாக்கியம் திகைத்துப் போனாள்.

"அப்ப ஆர் இனி எங்கடை ஊத்தை உடுப்புக்களை வெளுத்துத் தாறது...?"

"இனி நாங்கள் உங்கடை வீடுகளுக்கு வந்து துணி எடுக்க மாட்டாம். நாங்கள் மாத்திரமல்ல! எங்கடை இனம் சனம் எல்லாம் அப்படித்தான். வருகிற முதலாம் திகதியில் இருந்து நீங்கள் தான் உங்களுக்குப் பிடித்த சலவைத் தொழிலாளியின் வீட்டுக்குப் போய் உங்கடை உடுப்புக்களைப் போடவேணும்."

சிவபாக்கியத்துக்கு வியர்க்கத் தொடங்கியது.

"இதென்ன புதிசா ஒரு சட்டம்! இவ்வளவு காலமும் நாங்களே உங்கடை வீட்டிற்கு வந்து உடுப்புக்களைப் போட்டனாங்கள்? எங்களாலை வர ஏலாது."

"நீங்கள் வராவிட்டால் நாறப் போறது நம்முடைய உடுப்பல்ல." -சரவணன் கூறிவிட்டு, மிதி வண்டியில் இருந்த துணிப் பொட்டலத்தை எடுத்து விறாந்தையில் வைத்துவிட்டு போய் விட்டான்.

சிவபாக்கியத்தால் அதை நினைத்துப்பார்க்க முடியவில்லை.


பரம்பரை பரம்பரையாக அவர்களை எங்கடை குடிமைகளாக வைச்சு நடத்திப் போட்டு, இப்ப நாங்கள் அவங்கடை வீடு தேடிப் போறதோ...? எங்கடை குலம் என்ன? கோத்திரம் என்ன? கஞ்சிக்கு வழியில்லாமல் எங்களிட்டை வந்து கையேந்தித் திண்ட கட்டாடி பரம்பரைக்கு நாங்கள் இனியென்ன அடிமைகளோ?"

அவள் தன் மனதுக்குள் சினந்து கொண்டாள்.

கால ஓட்டத்தில் நியதிகள் மாற்றம் பெறுவதை அவளால் நினைத்துப் பார்க்க முடியவில்லை.

நாட்கள் மெதுவாக நகர்ந்து கொண்டிருந்தன...

சிவபாக்கியத்தின் வீட்டில் அவளது கணவரின் உத்தியோக உடுப்புகள். பிள்ளைகளின் பள்ளிச் சீருடைகளென பலதும் பத்துமாக அழுக்கு உடுப்புகள் வீட்டு மூலைக்குள் குவியத் தொடங்கின. அதை வந்து எடுத்துச்செல்ல எந்தவொரு சலவைத் தொழிலாளிகளும் முன் வரவில்லை. சிவபாக்கியம், தானே சவர்க்காரத்தால் தேய்ந்து, அடித்து, துவைத்துப் பார்த்தாள். கணபதியின் கை



பட்ட துணியைப் போல் அது வெண்மையாக இருக்கவில்லை.

மாதமும் ஒன்றன் பின் ஒன்றாக கழிந்து கொண்டு செல்கிறது. சிவபாக்கியத்தால் எதுவும் செய்ய முடியாத நிலை.

'இதுவும் ஒரு விதியோ...?' என அவள் தன்னைத் தானே நொந்து கொள்கிறாள்.

000

"வீட்டிலை கணபதி நிற்கிறாரோ...?"

"ஆரது...?"

"அது நான் சிவபாக்கியம், ஊத்தை உடுப்புக்கள் கொண்டு வந்தனான். ஒரு கிழமைக்குள்ளை வெளுத்துத் தந்திடுங்கோ..."

மிகவும் பவ்வியமாகக் கூறியவள் கணபதி முன், தான் கொண்டு வந்த அழுக்கு உடுப்புகளை வைத்து விட்டு, திரும்பிப் பார்க்காமல் நடக்கத் தொடங்கினாள்.

கணபதி அவள் போகும் திக்கையே பார்த்துக் கொண்டிருந்தார்.

"இது போராடும் காலம்! பரம்பரை நியதிகள் எல்லாம் பாழாகும் நேரம்."

கணபதியின் வாய் அவரை அறியாமலே முணுமுணுத்துக்கொள்கிறது.

- அலெக்ஸ் பரந்தாமன்

இப்பகுதியில் போர்க்கால சூழலில் ஏற்பட்ட சமூக பெறுமானங்களின் உடைவுகள், மாற்றங்கள் தொடர்பான தங்கள் அனுபவங்களினை வாசகர்கள் பகிர்ந்து கொள்ளலாம். ஆ-ர்

நன்றி - நூலகத்திட்டம்



# "கொன்று போடாதையுங்கோ"

திடீரென்று கேட்ட கூச்சலும் அமளியும் என்னைத் திடுக்கிட செய்தது. என்ன கூச்சல் அது? படுக்கையில் இருந்து வெளியே வந்தேன். கிராமத்துப் பெரியவர்கள், சிறியவர்கள் ஒழுங்கையில் வேகமாக ஓடிப் போனார்கள். அவர்களின் பின்னால் வளர்ப்பு நாய்கள் வாலை ஆட்டியபடி குரைத்துக் கொண்டு.... பத்துமணி வெய்யில் புழுதி விரைவாக மேலெழுந்தது. மரத்து மந்திகள் அச்சங்கொண்டு கீச்சிட்டபடி மரத்திலிருந்து அடுத்த மரத்துக் இடம்மாறின.

எனக்கு இது புது அனுபவமாய் இருந்தது. இன்று ஞாயிற்றுக்கிழமை. சக ஆசிரியர்கள் ஊருக்குப் போய்விட்டார்கள். திங்கட்கிழமை பாடசாலை திரும்புவார்கள் அயல் கிராமங்களில் தான் அவர்கள் இருப்பிடம். பிரச்சினையில்லை. என்னால் மட்டும் வீட்டிற்கு போக உடன் முடியாது.

காரணம் யாழ்ப்பாணத்தில் பிறந்தவன். புண்ணியம் செய்தவர்கள் தான் "காசியில் பிறந்தவர்களென்று" சொல்வர்கள். புண்ணியம் செய்யாதவர்களை எல்லாம் பங்கிட்டு வடக்கு கிழக்கிற்கு அனுப்பி விட்டார்கள் போலும். இராமபிரான் பதினான்கு வருடங்கள் காட்டில் இருந்தது எல்லோருக்கும் தெரிந்ததே. பாவம் தமிழர்கள் எங்களுக்கு எத்தனை ஆண்டுகளென்று ஒருவரும் சொல்லவில்லை. பதின்னான்கா, பதினெட்டா, இருபதா, நாற்பதா தெரியவே தெரியாது அலைய வேண்டியது தான்.

நாய்களின் குரைப்புச் சத்தம் அருகில் கேட்கத் தொடங்கியது. எனக்குச் சமையல் செய்யும் பியதாசாவை இன்னும் காணவில்லை.

மதிய சாப்பாட்டிற்கு மீன் வாங்க சந்தைக்கு போய்விட்டானா? இண்டைக்கும் வழமைபோல் அறக்குளா மீன்தான் வாங்கிக் கொண்டு வருவனா? தினமும் ஒரே மீன் சாப்பிட்டு அலுத்து விட்டது. நாய்களின் விடாத குரைப்பு வவுனியாவில் வாரிக்குட்டியூரில் ஆசிரியத் தொழில் செய்து கொண்டிருந்த என்னை உசுப்பிவிட்டது. இரவில் தேடுதல் நடவடிக்கைக்காக அப்படித்தானே வருவார்கள். நள்ளிரவு வேளையில் நிலம் மெல்ல அதிரும். சருகுகள் சப்பாத்துக் கால்களினால் மிதிபட்டு சலசலக்கும். மிக அவதானமாக நடப்பார்கள். இருளோடு இருளாக அதிகாரத்திலுள்ள பச்சை உடுப்புக்கள் மறைந்து இருக்கும்.

ஆனால், ஊர் நாய்கள் அவர்களை காட்டிக் கொடுக்கும். முதலில் கண்ட நாய் காட்டிக் கொடுக்கத் தயங்குவதே இல்லை.

"உறங்கும் தமிழ் மக்களே உசார் உசார் அவங்க வாறாங்கள், வாறாங்கள்"

அப்புறமென்ன.

ஒன்று, இரண்டு மூன்று என தகவல் பரிமாற்றம் ஒரே அமர்க்களம். ஓடி ஓடிப் பாய்ந்து பாய்ந்து குரைப்பு நடக்கும்.

வீடுகளில் வெளிச்சம் மறைந்து இருளில் காணாமல் போய்விடும். கடைசி ஆள் கண்ணில் மறையும் மட்டும் அமளி அடங்காது.

நாய்கள் நன்றியுள்ள மிருகங்கள். காட்டிக் கொடுப்பதிலும், சில நாய்கள் வாலை ஆட்டவும் செய்கின்றன. மறுபடியும் அதே ஆர்ப்பாட்டம். பின் கூப்பாடுகள்.

விடாதே

ஓடு

வீமா வீமா

உதுக்குள்ளதான் உதுக்குள்ளதான்

கந்தசாமி தெற்கா பார்.

குரல்கள் நெருங்கி வருகின்றன. நாய்களின் குரைப்பு, வேடிக்கை பார்க்கும் சிறுவர்களின் ஆரவாரம் "அண்ணோய் உந்த பக்கமாத்தான் ஓடினது. நானும் பார்த்தனான். உதுக்கத்தான் ஓடினது.

"சரியான பெரிய முயலடா"

சிறுவர்கள் மிகவும் சந்தோசமாக முயல் ஓடி மறைந்த இடத்தைக் காட்டிக் கொடுத்தார்கள். நாய்கள் மூசியபடி ஓடி வந்தன. ஆறுபேருக்கு மேல் இருக்கும் சாரங்களை தூக்கி மடித்துக் கட்டியிருந்தார்கள். காய்ந்து போன உடம்பில் புழுதி படிந்து அப்பிக் கிடந்தது. எங்கிருந்து வந்தார்கள்?



ஒவ்வொருவர் கைகளிலும் நீண்ட பொல்லுகள். அவர்கள் முயல் ஓடிப் பதுங்கிய இடத்தைச் சுற்றி வளைத்து நின்றார்கள். நாய்கள் நாக்கைத் தொங்கப் போட்டபடி பற்றைக்குள் முயலைத் தேடின.

விசில் சத்தம்

கூக்குரல்கள்

கூ..ய்..ய்...ய்..

எனக்கு மனது திக்கென்றது.

அவர்கள் மெல்ல மெல்லக் கைகளில் ஓங்கிய பொல்லுகளுடன்......

பியதாசா ஓடி வந்தான்.

"ஐயா, முயல் பிடிக்க வந்திட்டாங்கள். நீங்கள் உது ஊரில பார்த்திருக்க மாட்டியள்.

பியதாச ஆர்வமுடன் கூறினான்.

என்னைவிடப் பத்து வயது இளையவன். தமிழரோடு கதைத்துக் கதைத்து தமிழ் "இனப்பிரச்சினையின்றி" சாவதானமாக வந்தது. உச்சரிப்பில் துல்லியம்.

பியதாச என்ன கேட்டான்?

முயல் பிடிப்பதை ஊரில் பார்த்திருக்க மாட்டியள். உண்மை தான் அங்கு முயலையா பிடிக்க வந்தார்கள்.

"சரி, பியதாச இண்டைக்கு மீன் வாங்கிப் போட்டியே?" "நான் இன்னும் சந்தைக்கு போகேல்ல. இஞ்சனியர் ஐயா வீட்டில வேலை செய்துபோட்டு வாறன்"

"இண்டைக்கெண்டாலும் வாய்க்கு ஏத்த மாதிரி புதுசாய் என்னத்தையும் பிடிச்சு சமையன்"

"நானும் அதைத்தான் யோசிக்கிறன். உவங்கள் முயலை பிடிச்சாங்களெண்டால் கேட்டுப் பார்த்தா என்ன? கனகாலமாச்சு முயல் இறைச்சி சாப்பிட்டு".

பியதாச நாக்கைச் சப்பை போட்டுச் சொன்னான். எனக்கும் வாயில் எச்சில் ஊறியது. முன்பும் முயல் இறைச்சி சாப்பிட்ட பல பேர் என்ன மாதிரிச் சொல்லியிருக்கிறார்கள்.

"முயல் இறைச்சி ஒரு நாளும் சாப்பிடேல்லையே... சா எப்படியிருக்கும். தெரியுமே? வாய்க்குள்ள போட்டு கடிச்சு சப்ப தேவையில்லை. சும்மா வாயை அசைத்தால் போதும். அப்படியே கரைஞ்சு போகும். வலு சொப்ற்".

வயிறு உடனேயே எரியத் தொடங்கியது. முயல் இறைச்சிய சாப்பிட உடன் மனது துடித்தது.

விடாதே

பிடி, வீமா ஓடு.

ஓடுதடா.

முயல் பாய்ந்து ஓடியது. எழும்பித் துள்ளியது. நாய்கள் விடவில்லை.

எறி. விடாதே

முயல் சடுதியாக அவர்களிடையே புகுந்து குறுக்காக எமது இருப்பிடத்தை நோக்கி ஓடியது. முயலைக் கலைத்துக் கொண்டு ஓடியவர்களுள் இந்த திடீர் குழப்பத்தை எதிர்ப்பார்க்கவில்லை.

பியதாசவும் நானும் எங்களை மறந்து முயல் போன திக்கில் முயல் பிடிக்க வந்தவர்கள் வர முன் நாங்கள் ஓடினோம். தறிகெட்டு ஓடிய முயல் திசை தெரியாமல் நான்கு புறமும், கட்டிடமாய் இருந்த இடத்தில் குழம்பி நின்று கடைசியில் திறந்து கிடந்த எங்கள் குசினிக்குள் நுழைந்து தன்னை மறைத்துக் கொண்டது.

நானும் பியதாசவும் விருட்டென்று குசினிக்குள் புகுந்து கதவினைச் சாத்தி தாளிட்டுக் கொண்டோம்.

வெளியே கூக்குரல்

உந்தப் பக்கமாகத்தான் ஓடினது. எங்க போயிருக்கும்?

எங்கேயோ பதுங்கிட்டு.

அவர்கள் அலைந்தார்கள். கையில் வைத்திருந்த பொல்லுகளால் சிறு பற்றைக்குள் மறைவிடங்களை தட்டிப் பார்த்தார்கள்.

நாய்கள் கடுப்புடன் சினம் பொங்க முயலைக் கண்டால் கடித்துக் குதறிவிடும் நிலையில் பேயாக அலைந்தன.

"ஐயா... இப்ப என்ன செய்யிறது? உங்கள் முயலைப் பிடிக்காமல் போக மாட்டாங்கள் போல கிடக்கு.

பியதாசா பதறினான்.

நான் மெல்ல அவன் காதில் சொன்னேன்.

"கொஞ்ச நேரம் அமைதியாக இருந்த பியதாசா. இண்டைக்கு கடவுளாய்ப் பாத்து முயலை எங்களிட்ட அனுப்பி விட்டார். பிறகென்ன மத்தியானம் விருந்து தான்."

நான் கண்களில் ஒளிர் மிளிர அவனைப் பார்த்தேன்.

"அப்ப என்ன ஐயா முயலை நாங்கள் பிடிப்பமோ?"

"பிறகென்ன யோசனை, பிடிக்க வேண்டியது தான். நான் வாழ்க்கையில் முயல் இறைச்சி சாப்பிட்டதேயில்லை."

"ஐயா, கவலையை விடுங்கோ. நானெல்லே இண்டைக்கு உங்களுக்கு முயல் இறைச்சி சமைச்சுக் காட்டுறன். சாப்பிட்டுப்போட்டு பிறகு எப்படியெண்டு சொல்லுங்கோ"

வெளியே முயல் பிடிக்க வந்தவர்கள் ஒருவரையொருவர் திட்டியபடி அலைந்தார்கள். குசினிக்கதவை நாய்கள் பிறாண்டின.

நாங்கள் மூச்சை அடக்கிக் கொண்டோம். கொஞ்ச நேரத்தில்

நன்றி - நூலகத்திட்டம்



ஆரவாரம், இரைச்சல், ஓய்ந்துபோனது. இப்போது நாம் இருவரும் முயல் பிடிக்க வந்தவர்கள் போல முயலைத் தேடத் தொடங்கினோம்.

முயல் எங்கே போய் ஒளிந்துள்ளது?

பியதாசா கையில் ஒரு விறகுக் கட்டையைத் தூக்கிக் கொண்டு என்னையும் ஒரு விறகுக் கட்டையை எடுத்து வைத்திருக்கச் சொன்னான்.

விறகுக் குவியலும், பழைய சமாமான்களும், நிறைந்திருந்த இடத்தில் முயல் எங்கு பதுங்கி உள்ளதோ?

"ஐயா, கவனம். உது பொல்லாத முயல் எங்களுக்கும் டிமிக்கி கொடுத்திடும். இண்டைக்கு எங்களுக்கு முயல் இறைச்சியோடு தான் சாப்பாடு. கவனமாய் தேடுங்கோ!

அவன் என்னை உற்சாகப்படுத்தினான்.

கையில் விறகுக் கட்டையை தூக்கிப் பிடிப்பது எனக்குப் புது அனுபவமாய் இருந்தது. முயலைக் கண்டால் விறகுக் கட்டையால் அடித்துச் சாகடித்து விட வேணும். கையில் நடுக்கம் ஏற்பட்டது. பியதாசா சொன்ன முயல் இறைச்சி மனதை அலைக்கழித்தது. விறகுக் கட்டையை இறுகப் பிடிக்கச் செய்தது.

"ஐயா. மெல்ல... மெல்ல..

உந்த விறகுக் குவியலுக்குள்ள தான் பதுங்கிக் கிடக்கும்.

நெஞ்சு பெரிதாக அடிக்க மூச்சு பெரிதாக இரைத்தது. பியதாசா கொலை வெறியுடன்....

அப்போது சுவரோடு கிடந்த விறகுக் குவியலுக்குள் அசைவு தெரிந்தது.

"உங்க.. உங்க.. உங்கதான் முயல் நிக்குது! பியதாசா பெரிதாக கூப்பாடு போட்டான். நான் அருகே நெருங்கிப்

விறகுக் கட்டையிலிருந்து கையை எடுக்கவில்லை.

"ஐயா, கையை எடுங்கோ. நேரம் போகுது" "ஐயோ பியதாசா முயலை அடிச்சுக் கொல்ல வேண்டாம்." நான் பெரிதாக கத்தினேன். ஒரு குழந்தைபோல் என் குரல் வீரிட்டது.

பியதாசா விறகுக் கட்டையைப் போட்டுவிட்டு அசைவற்று நின்றான். என் கையில் இருந்த விறகுக் கட்டை எப்போது கீழே விழுந்தது. எனக்குத் தெரியவில்லை.

"பியதாசா இங்க வந்து முயலை வடிவாப் பார். இந்த அப்பாவி முயலை சாக்காட்ட போறியே?" இருவரும் முயலை அருகே பார்த்தோம்.

நீண்ட செவி.

குறுகுறுத்த பெரிய கண்கள்.

நடுங்கிக் கொண்டிருந்த மேனி.

அந்தக் கண்கள் எங்களுக்கு என்னைத்தையோ சொன்னது. ஐயோ என்னைக் கொன்று போடாதையுங்கோ' என்னைக் கொன்று போடாதையுதேங்கோ. நான் இயக்கத்திற்கு உதவி செய்யேல்ல. யாரோ வேணுமெண்டு பெட்டிசம் போட்டாங்கள். எனக்கு ஒருத்தரையும் தெரியாது. என்னை அடியாதேங்கோ, அடியாதேயுங்கோ. உங்களை நம்பித்தான் ஊருக்கு வந்தனாங்கள். ஒண்டும் செய்து போடாதேங்கோ. நான் அப்பாவி.

"பார் பியதாசா நல்லாப் பார். உந்த முயலை சாக்காட்டாதே? பேசாமல் கதவைத் திறந்து வெளியில் போக விடு"

பியதாசாவின் பார்வையில் இப்போது இரக்கம் தெரிந்தது. சற்று மௌனம் முயலின் நடுக்கம் இன்னும் அப்படியே... அவன் குசினிக் கதவினைத் திறந்து வெளியே பார்த்தான்.

எல்லாம் அமைதியாக இருந்தது.

- சி.கதிர்காமநாதன்

பார்த்தேன். தன் நீண்ட பெரிய காதுகளை அசைத்தபடி... பெரிய கண்களை கலக்கத்துடன் பயப்பீதியில் உருட்டிக் கொண்டு....

மேனி ரோமங்கள் சிலிர்த்தபடி... பியதாசா விறகுக் கட்டையை ஓங்கினான். "என்ன அடிக்கப் போறியே..."

நான் பாய்ந்து விறகுக் கட்டையை பிடித்தேன்.

"என்ன ஐயா, கையை விடுங்கோ. முயல் ஓடப்போகுது. ஒரே போடு. ஆள் சரி.

"வேண்டாம். கொல்ல வேண்டாம்.

"என்ன நடந்தது. உங்களுக்கு அருமையான இறைச்சி தெரியுமே"

"எனக்கு இறைச்சியும் வேண்டாம். ஒண்டும் வேண்டாம். முயலை அடிச்சுக் கொண்டு போடாத அதை அப்படியே விட்டிடும்"

பியதாசா சினத்துடன் என்னைப் பார்த்தான்.

"உங்களுக்கு என்ன பிடிச்சிட்டுது. அப்ப அவங்களிட்ட சொல்லியிருந்தால் அடிச்சுக் கொண்டு போட்டு தூக்கிக் கொண்டு போயிருப்பாங்கள்.

நான் இன்னும் பியதாசா ஓங்கிய

விறகுக் குவியலுக்கு இடையில் 'பதுங்கிக் கிடந்த முயலை தடியினால் தட்ட உடன் துள்ளிப் பாய்ந்தது'. வெளியில் வந்து வாசலில் காதுகளை ஆட்டியபடி எம்மைப் பார்த்தது.

இப்போது அது நடுங்கவில்லை.

கண்களில் அச்சம் கலந்த பீதியில்லை. தலையை அப்படியும், இப்படியும் ஆட்டிவிட்டு போய் வருகிறேன் என்பது போல் பாய்ந்து ஓடியது. "பாவம் முயல் இப்ப விழுந்தடிச்சுக் கொண்டு எங்க போகுது?

பியதாசா ஆவலாக கேட்டான்.

"அவர் கன நேரமாகயெல்லே எங்களிட்ட மாட்டுப்பட்டுப் போனார். இப்ப தன்ர வீட்டுக்குத்தான் ஓடுறார். வீட்டில் பார்த்துக்கொண்டெல்லே இருப்பினம். போனவரைக் காணேல்லையே என்று...... என் குரல் தழுதழுத்தது.

"ஐயா நாங்கள் சாக்காட்டி இருந்தால்.. "என்ர குடும்பம் மாதிரித் தகப்பன் இல்லாமல் கஸ்ரப்பட்டிருக்கும் என்றான் பியதாசா"

நான் ஊரில் காணாமல் போன அப்பாவை நினைத்து அழத் தொடங்கினேன்.



கவனி
நான் நம்புகின்றேன்
காம நரம்பின் இறுகலினால்
உழன்ற புணர்தலில் அவளுக்கு
கொஞ்சமாவது வலியிராமலிராது.

உனது காரமான கேள்வியையும்
நான் சிறிதளவாகவாவது
உணர்கின்றேன்
எனக்கும் மனிதத்துவமுண்டு
நான் எதிர்பார்க்கும்
ஒரு புள்ளியை அல்லது மையத்தை
நீயும் தேடிக் கொண்டதாக
என்னால் முழுமையாய்
நம்ப முடியவுமில்லையே....

நிச்சயமாக
உனது தேடல் வேறு
எனது தேடல் வேறு
ஆனால் நம்முள் முரண்பாடாகாது

எதுபோலி
எது உண்மை
தினமும் வரும் ஆழ்மன உணர்வுகளை
என்னுள்ளே எவ்வாறு குமுறுதல் முடியும்

கண்முன்னே
மரண எச்சரிக்கைகளும்
மரண அச்சமின்றியே
ஒரு தென்றலைப் போல் அல்லாது
ஒரு அழகிய நதியைப் போல்
வெகு தூரமாக நடந்து அசைந்த
குஞ்சு மார்புகளும்
அழகான கண்களின் அசைவோடும்
நடனமாடும் இடையும் கூந்தலும்
மல்லிகை வாசத்தோடும் நீ தினமும் வருவாய்.

"நிலா வழுக்கி கடலில் விழுமா"
என்ற ஒருத்தியின் வார்த்தையை
தொண்ணூறுகளின் டையரியில்
பார்த்தபோது...
அதற்கான விடையும் கூறியிருந்தேன்
"ஆம்" நீதான் விடை.

இனிய வாழ்வும் அவகாசமற்றதாயிற்றே...
நம்பிக்கைகள் யார் மீது
பூனைகளின் நீண்ட புணர்ச்சியிலா
தவளையின் விசித்திரமான புணர்ச்சியிலா
நன்கு கவனி,
மனித புணர்வில் கிடைக்கும் அதிர்வை விடவும்,
சுவைத்து பார்த்து அவளினுள்ளே
முழுமையாக மூழ்குவதே அதிக சுவையானது.

உனது போதை தீரும் வரையில்,
அப்போ மிக மிக அதிகமாக குழம்பி விடாதே
மீண்டும் மீண்டும் மிக நுணுக்கமாகக் கவனி.
நீ திண்மமா
நீ திரவமா
நீ வாயுவா

விடையில்லாமல் நான் எப்படி
உணர்வுகள் பற்றியோ!
உள்ளுணர்வுகள் பற்றியோ
விடை தெரியாமல் பேசமுடியாதே

இனி வாழ்வுக்கோ
மரணத்திற்கோ அவகாசமில்லையே!

என்ன

திரும்பவும் குழம்பி விட்டேனா
யாரையும் குழப்பி விட்டேனா

எது மையம்
அல்லது எது ஒரு புள்ளி
எது சுவையானது
எது கொடுமையானது
உணர்வு மையமா
அல்லது உயிரா

நீயும் மிக அவதானமாக என்னைப் புரிந்துபேசு
சந்திப்பதாயினும் சந்திப்போம்
இன்னும் மிக நிறையப் பேசுவோம்.

-மஜீத் -

நன்றி - நூலகத்திட்டம்



## சியாம் செல்வத்துரையின் 'FUNNY BOY' 'விசித்திரமான பையன்'



# பன்றிகளுக்குப் பறக்க முடியாது (6)

அப்பாச்சி வீட்டுக்கு நாளைக் கழிப்பதற்காக நாம் செல்ல விருந்த அடுத்த தினத்தன்று காலையில் அம்மா எங்களைத் துாக்கத்திலிருந்து எழுப்பி விட வந்த போது நான் ஏற்கெனவே எனது கட்டிலில் அமர்ந்திருந்தபடி மணப்பெண் அணிகிற சேலையை மடித்துக் கொண்டிருந்தேன். அவளது கண்களில் தெரிந்த ஏதோ ஒன்று என்னை அவசர அவசரமாக சேலையைப் பையினுள் தள்ளி வைத்து விடச் செய்தது.

'அது என்ன?'

கைகளை நீட்டி என்னை நோக்கி வந்தபடியே கேட்டாள் அம்மா. ஒருகண நேர தாமதத்தின் பின் நான் அவளிடம் எனது பையைக் கொடுத்தேன். அவள் அந்தப் பையினுள் இருந்த பொருட்களைப் ஒரு முறை பார்வையிட்டாள். "எழுந்திருங்கள். இது நாங்கள் அப்பாச்சி வீட்டிற்குப் போகும் நாள்."

பிறகு, அந்தப் பையை தனது கையிலே வைத்துக் கொண்டே ஜன்னலருகாகச் சென்று வெளியேயிருந்த பாதையைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் வெளிப்படுத்திய தீவிரத்தன்மை, நான் ஏதோ மோசமான தவறு செய்து விட்டேன் என்பது போலவும் அது வழமையான தண்டனையான பிரம்பு அடியை விடப் பெரிய தண்டனைக்குரிய ஒரு தவறு என்பது போலவும் என்னை எண்ண வைத்தது. இந்த நிலை எனக்கு மிகவும் அச்சமூட்டியது.

காலைச் சாப்பாட்டிற்குப் பிறகு குளியறையில் பல் துலக்கிக் கொண்டிருந்த போது அனுலா அங்கு வந்து எட்டிப் பார்த்தாள்.

"அம்மா தன்னுடைய அறைக்கு உங்களைப் பேச வரட்டாம்" - அவளது குரலில் ஒரு வகையான இரக்கமற்ற சந்தோசம் தெரிந்தது. என்னுடைய முகத்தில் தெரிந்த கலவர்த்தை அவள் கவனித்திருக்க வேண்டும். பிறகு மெதுவாகச் சொன்னாள். 'வழமை போல ஏதோ குழப்படிக்காகத் தான்... நல்லதுக்கில்லை பிள்ளை"

அண்ணா 'தோண்டி' அம்மா அப்பாவின் அறைவாசலில் நின்றிருந்தான். அவனது ஒரு கால் அமைதியற்று மறுகாலை உரஞ்சிக் கொண்டிருந்தது. அம்மா லிப்ஸ்டிக் பூசிக் கொண்டிருந்தாள். அப்பா ஏற்கெனவே தனது ஞாயிற்றுக்கிழமைப் பந்தாட்ட விளையாட்டுக்குப் போய்விட்டார். வழமை போல அம்மா எங்களை அப்பாச்சி வீட்டில் இறக்கி விட்டுவிட்டு அவரை ஏற்றி வருவாள்.

கண்ணாடியூடு எங்களைக் கவனித்த அம்மா இருவரையும் உள்ளே வந்து கட்டிலின் ஓரத்தில் அமருமாறு லிட்ஸ்டிக்கினால் சைகை காட்டினாள். தோண்டி என்னுடைய பிழையால் தான் அம்மா போவதற்குத் தயாராக இவ்வளவு நேரம் எடுக்கிறாள் என்பது போல என்னை ஒரு மாதிரியாகப் பார்த்தான்.

கடைசியாக அம்மா தனது லிப்ஸ்டிக்கை மூடிவிட்டு இதழ்களை அழுத்தி நிறத்தைச் சீராகப் பரவச் செய்துகொண்டு எங்களை நோக்கித் திரும்பினாள்.

தமிழில்:
எஸ்.கே.விக்னேஸ்வரன்

"சரி மிஸ்டர்" அவள் தோண்டியைப் பார்த்தபடி சொன்னாள். "நான் உமக்கு ஒரு விசயம் சொல்லப் போகிறேன். இது என்னுடைய கட்டளை".

நாங்கள் அவளை அவதானமாய் பார்த்துக் கொண்டிருந்தோம்.

"உமது தம்பியை உங்கடை கிறிக்கற் ரீமிலை நீங்கள் சேர்க்க வேணும்."

நானும் தோண்டியும் திடுக்கிட்டுப் போய் அமைதியாக அவளைப் பார்த்தோம். பிறகு தோண்டி அவளிடம் சொன்னான்.

"ஐயோ... அம்மா...."

நானும் சேர்ந்து கத்தினேன்.

"எனக்கு முடியாது. என்னால் அவர்களுடன் விளையாட முடியாது... எனக்கு கிறிக்கட் பிடிக்காது"

"உமக்கு என்ன பிடிக்கும் பிடிக்காது என்பதைப் பற்றி எனக்கு அக்கறை இல்லை... ஆனால், அது உனக்கு நல்லது" - அம்மா சொன்னாள்.

"அர்ஜே உதவான்... அவன் எங்கடை அணியில் இருந்தால் எங்களாலை ஒரு நாளும் வெல்லேலாது" என்றான் தோண்டி.

அம்மா தனது கையை உயர்த்தி எங்களை அமைதியாக்கினாள். "இது என்னுடைய உத்தரவு"

"ஏன்" அவளுடைய பாவனைகளை





கவனிக்காதவனாய் நான் கேட்டேன்.

"ஏன் நான் பெடியங்களுடன் விளையாட வேணும்?"

"ஏனோ? ஏனென்றால் வானம் மிகவும் உயரமாக இருக்கிறது. பன்றிகளால் பறக்க முடியாது. அது தான்" - சொன்னாள் அம்மா.

"பிளீஸ் அம்மா.... பிளீஸ்..."

அம்மா திடீரெனத் திரும்பினாள். - தனது கைப்பையை மேசையிலிருந்து எடுத்தபடி தனக்குள்ளே சொல்வது போல் சொல்லிக் கொண்டாள். "பிள்ளைகள் பிழை செய்தால் குற்றம் சாட்டப்படுவது எப்போதும் தாய்மார் தான். தகப்பன் அல்ல..." அவள் தன் கைப்பையை அழுத்தி 'கிளிக்' என மூடினாள்.

நான் தலையை கையால் பிடித்தபடி அழத் தொடங்கினேன். "பிளீஸ் அம்மா... பிளீஸ்... விம்மலினூடு நான் அரற்றினேன்.

அவள் ஜன்னலைப் பார்த்தபடி தொடர்ந்து நின்று கொண்டிருந்தாள்.

நான் கட்டிலில் விழுந்து புரண்டு ஆற்றாமையுடன் உருண்டேன். நான் அழும் போதெல்லாம் செய்வது போல, அவள் என்னருக்காக வந்து என்னைத் தன் கைகளில் எடுத்து தனது நெஞ்சுடன் அழுத்தி மெல்லிய குரலில் 'என்ன இது... இப்பிடி எந்தச் சின்ன மனிதன் அழுவான்' என்று சொல்வாள் என்று எதிர்பார்த்தேன்.

ஆனால், அது நடக்கவில்லை. எனது அழுகையை அடக்க அவள் வரவில்லை. நான் அழுதபடி அவளது கதவைத் தட்டும் போதெல்லாம் என் அழுகையை அடக்கியது போல் அவள் இனி அடக்கப் போவதில்லை.

கடைசியாக நான் அழுவதையும் விழுந்து புரள்வதையும் நிறுத்தினேன்.

தோண்டி ஏற்கெனவே அறையை விட்டு வெளியேறியிருந்தாள். நான் அமைதியானதும் அம்மா என்னை நோக்கித் திரும்பி மகிழ்ச்சியுடன் சொன்னாள்.

"உனக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது... பொறுத்திருந்து பாரேன்"

"நான் ஏன் பெண்களுடன் விளையாடக் கூடாது?" - பதிலுக்கு கேட்டேன் நான்.

"உன்னால் முடியாது. அவ்வளவு தான்.

"ஆனால், ஏன்?"

அவள் சற்று தடுமாறினாள்.

"நீ இப்போது ஒரு வளர்ந்த பையன். வளர்ந்த பெடியங்கள் மற்றப் பெடியங்களோடு தான் விளையாட வேணும்".

"அது முட்டாள் தனம்"

"பரவாயில்லை.. வாழ்க்கை முட்டாள் தனங்கள் நிறைந்தது. சிலவேளைகளில் நாம் அவற்றைச் செய்யத் தான் வேணும்"

"நான் செய்யமாட்டேன்" நான் உறுதியாகச் சொன்னேன். "எனக்கு பெடியங்களுடன் விளையாட முடியாது"

அவளது முகம் கோபத்தால் சிவந்தது. அவள் என்னருகாக வந்தாள். என்னை என் தோள்களில் பிடித்து உலுப்பினாள். பின் தனது தலைமூடியின் மேலாக கையை தடவியபடி திரும்பினாள். நான் அவளை ஒருவகை அவலத் திருப்தியுடன் பார்த்துக் கொண்டிருந்தேன். அவளுடைய மகிழ்ச்சியான முகபாவத்தை நான் உடைத்து விட்டேன். தான் செய்வது எவ்வளவு துாரம் அவளைத் துன்புறுத்துகிறது என்பதை அவள் வெளிக் காட்டுமாறு செய்து விட்டேன். தான் சொல்வதில் நியாயமிருப்பதாக அவள் நம்பவில்லை என்பதை வெளிக்காட்டச் செய்து விட்டேன்.

ஒரு கணப் பொழுதின் பின் என்னை நோக்கித் திரும்பி, கிட்டத்தட்ட கெஞ்சும் தொனியில் சொன்னாள்.

"உனக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது"

நான் அவளைப் பார்த்தபடி சொன்னேன்:

"இல்லை எனக்கு வேண்டாம்"

அவளது முதுகு நிமிர்ந்தது. அவள் வாசற் கதவுக்குக் குறுக்காக நடந்து சென்று நின்றாள். என்னைப் பார்க்காமலே அழுத்தமாகச் சொன்னாள்: 'கார் இன்னும் ஐந்து நிமிடங்களில் வெளியேறும். அந்த நேரம் நீர் காரில் இல்லை என்றால்... பாாத்துக் கொள்ளும்"

நான் கட்டிலில் படுத்தபடி நுளம்புவலை மெல்லிய காற்றில் அசைவதைப் பார்த்துக் கொண்டிருந்தேன். எனது மனக் கண்ணில் அன்றைய நாளின் காட்சிகள் விரிந்தன. அப்பாச்சியின் வீட்டின் முன்னாலுள்ள வெளியில், தகிக்கும் வெயிலில் நின்றபடி கன்னங்களில் வியர்வை வடிய மாதத்தின் அந்த அருமையான ஞாயிற்றுக் கிழமையை வீணடிப்பதைப் பற்றி நினைக்கையில் ஒரு நிம்மதியீனமும் ஆற்றாமையும் என்னைப் பிடித்து இறுக்குவது போல இருந்தது. வீட்டின் பின்புறத் தோட்டத்தில் என்ன நடக்கப் போகிறது என்பதுவும் என்முன் படமாக ஓடியது. தொக்கையம்மா, என்னுடைய இடத்தை எடுத்துக் கொண்டு பெண்கள் குழுவுக்கு தலைவியாவாள்.

நான் கஷ்டப்பட்டு கண்டுபிடித்து திட்டமிட்ட சடங்குகள் எல்லாவற்றையும் அவள் தன்னுடையவை என்று சொல்லிக் கொள்வாள். ஜானகியின் கண்ணாடியின் முன்னால் அவள் நிற்க மற்றப் பெண்கள் அவளது தலையைச் சரிசெய்வதை நான் கண்டேன். அவளது முகத்திரையைக் குத்துவதை, அவளது சேலையை கொய்து மடிப்பதை எல்லாவற்றையும் கண்டேன். அந்த நினைவுகளே பயங்கரமாக இருந்தன. ஏதாவது செய்தாக வேண்டும். இதை அவ்வளவு இலேசாக விட்டுவிட முடியாது. தொக்கையம்மாவும், அவள் காந்தி அன்ரிமுன் சிணுங்குவதும் இன்று என்னை இந்த நிலைக்குத் தள்ளி விட்டது. அவள் அவ்வளவு இலகுவில் என் இடத்தை எடுக்க அனுமதிக்க முடியாது. ஆனால், நான்... நான்... என்ன செய்ய முடியும் என்னால்?

இதற்குப் பதில் சொல்வது போல, எனது பார்வையின் ஓரத்தில் கிடந்த ஏதோ ஒரு பொருள் என் கவனத்தை ஈர்த்தது. நான் என் தலையை சற்று திருப்பிப் பார்த்தேன். அது எனது துாக்குப்பை. அப்போது எனக்குள் ஒரு எண்ணம் உதயமாயிற்று. நான் அதனருகாகச் சென்று அதனை எடுத்து நெஞ்சுடன் அணைத்துக் கொண்டேன். அந்தப் பையிலிருந்த சேலை இல்லாமல் பெண்களால் மணப்பெண் விளையாட்டை விளையாட முடியாது. தொக்கையம்மாவைப் பற்றி ஒருவித வெற்றிக்களிப்புடன் எண்ணினேன். அவள் தனது உடம்பில் எதனை உடுத்திக் கொள்ளப் போகிறாள்? பொம்பிளைத் தோழிகளைப் போல ஒரு படுக்கை விரிப்பையா? இல்லை. நானும் எனது சேலையும் இல்லாமல் அவளால் ஒரு மணப்பெண்ணாக விளையாட முடியாது.

உடனடியாக ஒரு முக்கியமான தடையிலிருந்து நான் விடுபட்டாக வேண்டும். இந்தக் கிறிக்கற் விளையாட்டிலிருந்து எப்படியாவது தப்பியாக வேண்டும். அம்மா உத்தரவு போட்டு விட்டாள். தோண்டி என்னதான் துணிந்தவனாக இருந்தாலும் அம்மாவின் உத்தரவை மீறும் துணிவு அவனுக்கு இல்லை.

கார் ஸ்ராட் செய்யப்படும் சத்தம் கேட்டது. அந்தச் சத்தம் நான் அதுவரை யோசிக்காத ஒரு புதுச்சிக்கலை எனக்கு ஞாபகம் ஊட்டியது. எப்படி இந்தச் சேலையை காருக்குள் கடத்திச் செல்வது? அம்மா காரில் எனக்காகக் காத்திருப்பாள். நான் என் துாக்குப்பையை எடுத்துச் சென்றால் அதிலிருந்த சாறியை வெளியில் எடுக்கும்படி அவள் கட்டாயம் எனக்குக் கூறுவாள். அவள் கவனத்தில் படாமல் அதை எடுத்துச் செல்ல முடியாது. நான் காரின் இரைச்சலைக் கேட்டபடி அமர்ந்திருந்தேன். அனுலா காலைச் சாப்பாடு மேசையைச் சுத்தம் செய்யும் சத்தத்துக்கு பதிலளிப்பது போல அந்த இரைச்சல் அமைந்திருந்தது. திடீரென எனக்குள் ஒரு யோசனை உதயமாயிற்று!

(வரும்)

நன்றி - நூலகத்திட்டம்



மைக்கேல் ஒன்டாஜியின்

## அனிலின் ஆவி:

# வரலாற்றுத் தவிர்ப்பும் மௌனத்தின் அர்த்தமும்

- யமுனா ராஜேந்திரன்

**'கதையை எப்படி எழுதுவது என்பது பற்றி - எவ்வாறு இலங்கை யுத்தம் பற்றி எழுதப் போகிறேன் என்பது பற்றி எனக்கு நிச்சயமில்லாமல் இருந்தது. பிற்பாடு நான் முடிவு கட்டினேன்: அரசியலில் நேரடியாக ஈடுபடாதவர்களின் பார்வையிலிருந்து யுத்தத்தில் நேரடியாகப் பங்கு பற்றாதவர்களின் பார்வையிலிருந்து கதையை எழுதுவது என்று தீர்மானித்தேன்'**

Michael Ondatje's Cubist Civil War
Interview with ondatjee by Powell:

ஆஸ்கர் பரிசு பெற்ற திரைப்படமானதும் உலக அளவில் அதனது சர்வதேசிய பாத்திரப் படைப்புக்காகவும் மொழி நேர்த்திக்காகவும் பாராட்டப்பட்ட இங்கிலீஷ் பேஷண்ட் நாவலை அடுத்து, எட்டு ஆண்டுகள் இடைவெளியின் பின் வந்து வாசகர்களிடம் பெரும் எதிர்பார்ப்புக்களை ஏற்படுத்திய இலங்கை உள்நாட்டு யுத்தம் பற்றிய மைக்கேல் ஒன்டாஜியின் சமீபத்திய நாவல் அனில்ஸ் கோஸ்ட். அனில் திஸ்ஸரா இலங்கையின் மனித உரிமை மீறல்களைக் கண்டுபிடிக்கும் பொருட்டும், ரகசியப் புதைகுழிகளை ஆய்வு செய்யும் பொருட்டும் ஐக்கியநாடுகள் சபையின் ஆய்வுத் திட்டம் ஒன்றை முன்னிட்டு இலங்கைக்கு வரும் முப்பத்து மூன்று வயது இலங்கைச் சிங்களப் பெண். ஒரே சமயத்தில் இலங்கைச் சமூகம் குறித்த அன்னிய உணர்வும் அதனால் விளையும் தூரப்படுத்திப் பார்க்கும் மனோநிலையும் வாய்க்கப் பெற்றவள். அதேவேளை இலங்கை அரசின் கொலைகளைச் சகிக்கவொணாது எனது மக்கள் கொல்லப்படுகிறார்கள் என ஆத்திரப்படுபவளும் அவள் தான்.

இந்த விட்டுவிலகலும் ஒட்டியும் ஒட்டாமலும் இருப்பதுமான ஒரு தலைமுறை பின் காலனிய இடப் பெயர்வினாலும் பல்வேறு தேசிய இன யுத்தங்களாலும் மேற்கு நாடுகளுக்குக் குடிபெயர்ந்த புதியதொரு சமூகப் பகுதியினரின் மனோநிலை ஆகியிருக்கிறது. ஒரு மிகப் பெரிய வாசகர் வட்டமாகவும் இவர்கள் ஆகியிருக்கிறார்கள். இவர்களில் இலங்கையைச் சேர்ந்த தமிழர் சிங்களவரிலிருந்து, இந்திய சீக்கியர்கள், பாலஸ்தீனர்கள், அல்ஜீரியர்கள், காஷ்மீரிகள், ருவாண்டாவினர் எனச் சொல்லிக் கொண்டு போகலாம். இவர்களது நாடுகள் பற்றிய பிரச்சினைகளும், கோரங்களும் உலக செய்தித் தொடர்பு சாதனங்களின் அக்கறைக்குரியதாக ஆகியிருப்பது மட்டுமல்ல, பின் சோவியத் மற்றும் உலகமயமாதல் எதிர்ப்பியக்க உலகில் மனித உரிமை குறித்த அக்கறை கொண்ட ஒரு புதிய விழிப்புநிலை கொண்ட சமூகப் பகுதியினரை உருவாக்கியிருக்கிறது. இத்தகைய வாசக உலக சமூக சூழலில் தான் 'அனில்ஸ் கோஸ்ட்' நாவல் வெளியாகியிருக்கிறது.

இன்றைய சூழலில் எழுத்தாளர்களிடம் போராட்டங்களின் பாலான சார்பு நிலை எடுப்பது அருகி வருகிறது. தேச விடுதலைக்குப் பின்னான சமூகங்களில் சுதந்திரமும் தேர்வும் அற்ற நிலைமையும் நிலவிய சோசலிசம் ஏற்படுத்திய பின்னடைவுமே இதற்கான பிரதான காரணங்களாகும் இவ்வாறான நிலைமையில் பொத்தாம் பொதுவாக யுத்தத்திலும் போராட்டங்களிலும் சம்பந்தப்பட்டவர்களின் அனைத்து நடவடிக்கைகளையும் மனித உரிமைக்கு எதிரானதாகச் சித்திரிக்கும் அதிமனிதாபிமானம் எனக் கருதும் அரசியல்சார்பு நிலையற்ற ஒரு நிலைபாட்டை சில மனித உரிமையாளர்களும் கலைஞர்களும் முன் வைக்கிறார்கள். இந்த அணுகுமுறையின் மூலம் போராட்டங்களும் சமூகநெருக்கடிகளும் தோன்றியதற்கான காரணங்கள் அதற்கு மிக ஆதாரமான ஆதிக்க சக்திகளின் நடவடிக்கைகள் போன்றவற்றையும் இவர்கள் மறந்து விடுகிறார்கள். சிலவேளை தமது சமூக ஆர்வங்களின் பொருட்டு மறுத்து விடவும் செய்கிறார்கள். தமிழ் மக்களின் போராட்டத்தையும் அதனது அரசியல் சமூக தார்மீக அடிப்படைகளையும் மிக ஆழ்ந்த மௌனத்துடன் மறுத்துவிடும் நாவலாகவே அனில்ஸ் கோஸ்ட் நாவல் உள்ளது.

**இந்த நாவல் இலங்கை உள் நாட்டு யுத்தம் பற்றிய நாவல். தமிழ்ப் பிரிவினைவாதிகள். ஜே.வி.பி. இயக்கத்தினர் மற்றும் இலங்கை அரசுக்கு இடையில் நடக்கும் ஆயுத ரீதியிலான யுத்தம் பற்றிய நாவல். மூன்று பேருமே மனித உரிமை மீறலில் ஈடுபடுகிறார்கள். இன்னும் உள்நாட்டு யுத்தம் பற்றிய இந்த நாவலை எப்படி எழுதுவது என மிக நிதானமாகச் சிந்தித்து யுத்தத்தில் நேரடியாக ஈடுபட்டவர்களின் பார்வைகளைத் தவிர்த்து யுத்தத்திற்கு வெளியில் வாழ்கிற. ஆனால் ஏதோ ஒரு வகையில் சம்பந்தப்பட்வர்களின் பார்வையின் வழி எழுதுவது என்று அவர் தீர்மானித்துக் கொண்டு தான் செயலில் இறங்குகிறார்.**

இந்த நாவல் ஜே.வி.பி. இயக்கத்தினர் பற்றிய நாவலாகவும் அக்கால கட்டம் பற்றிய நாவலாகவும் சில விமர்சன வட்டாரங்களில் முன் வைக்கப்படுகிறது. மலையக மக்கள் பற்றிய பிரச்சினைகளையும், வடகிழக்குத் தமிழ் மக்கள் பற்றிய பிரச்சினைகளையும் ஒன்டாஜி இனி கவனம் கொள்ள வேண்டும் என்கிற எதிர்பார்ப்பும் முன் வைக்கப்படுகிறது. அவ்வகையிலேயே தமிழ் மக்களின் பிரச்சினைகளின் தோற்றம் அதனது அரசியல் பரிமாணம் தவிர்க்கப்படுகிறது எனும் கற்பிதமும் முன் வைக்கப்படுகிறது.

அனில்ஸ் கோஸ்ட் நாவலின் ஆசிரியரான மைக்கேல் ஒன்டாஜிக்கு இம்மாதிரியான மயக்கங்கள் ஏதுமில்லை. அவரைப் பொறுத்து இந்த நாவல் இலங்கை உள் நாட்டு யுத்தம் பற்றிய நாவல். தமிழ்ப் பிரிவினைவாதிகள், ஜே.வி.பி. இயக்கத்தினர் மற்றும் இலங்கை அரசுக்கு இடையில் நடக்கும் ஆயுத ரீதியிலான யுத்தம் பற்றிய நாவல். மூன்று பேருமே மனித உரிமை மீறலில் ஈடுபடுகிறார்கள். இன்னும் உள்நாட்டு யுத்தம் பற்றிய இந்த நாவலை எப்படி எழுதுவது என மிக நிதானமாகச் சிந்தித்து யுத்தத்தில் நேரடியாக ஈடுபட்டவர்களின் பார்வைகளைத் தவிர்த்து யுத்தத்திற்கு வெளியில் வாழ்கிற, ஆனால் ஏதோ ஒரு வகையில் சம்பந்தப்பட்வர்களின் பார்வையின் வழி எழுதுவது என்று அவர் தீர்மானித்துக் கொண்டு தான் செயலில் இறங்குகிறார். ஒன்டாஜியைப் பொறுத்து இந்நாவல் "அரசாங்கத்தின் மீது போர்ப்பிரகடனம் செய்த தென்னிலங்கை கிளர்ச்சியாளர்களதும், வட இலங்கை பிரிவினைவாத கெரில்லாக்களையும் பற்றியது. சம அளவில் இவர்களது நடவடிக்கைகளுக்கு எதிர்வினையாக அரசு சட்ட ரீதியிலும், சட்ட மீறலான வழிமுறைகளிலும், இராணுவத்தின் மூலமும், அது அல்லாத கொலைக்குழுக்கள் வழியிலும் மேற்கொள்ளும் வன்முறைகள் தொடர்பானது. இந்த நாவலின் அரசியல் காலமும் வரலாற்றுத் தருணமும் எண்பதுகளின் மத்தியில் இருந்து தொண்ணூறுகளின் ஆரம்ப ஆண்டுகள் என அமைகிறது". (அறிமுகப் பக்கம்: ஆசிரியர் குறிப்பு: மைக்கேல் ஒண்டாஜி மற்றும் நாவலின் கருத்துத் தேர்வும் பாத்திரப் படைப்பும் குறித்த மைக்கேல் பாவலுடனான நேர்முகம்: இணையத் தளம்)

இன்னும் இந்நாவல் தமிழ் பாத்திரங்களைக் கொண்டிருக்காததாலும், தமிழர் பிரதேசங்களின் நிகழ்வுகள் இடம்பெறாததாலும் இந்நாவல் தமிழர் பிரச்சினையைப் பற்றிப் பேசுவதில்லை என்கிற நிலைபாடும் சில விமர்சனங்களில் முன்வைக்கப்படுகிறது. என்னளவில் இத்தகைய வாசிப்பு நாவல் சாதிக்கும் மௌன இடைவெளிகளின் அர்த்தத்தைத் தவிர்த்த வாசிப்பாகும். முன்னூற்றிப் பதினாலு பக்கங்கள் கொண்ட இந்நாவலில் தமிழர்கள் பற்றி குறிப்பீடுகள் (ரெபரென்ஸஸ்) நிறைய இடங்களில் ஒரு சில சொற்றொடர்களில் வருகிறது. தமிழர்களின் போராட்டம் பற்றிய செய்திகளும் ஆசிரியர் எழுப்ப விரும்பும் அர்த்தங்களும் மிகத் துல்லியமாக அந்த வார்த்தைகளில் வெளியாகிறது.

இலங்கை ஜனாதிபதி தற்கொலைப் போராளியால் கொல்லப்பட்டது, அப்பாவிச் சிறுவர் சிறுமிகள் ஏதோ ஒரு இயக்கத் தலைவரின் அதிகார ஆசைக்காக பலியிடப்படுவது, பாதையோரத்து வெகுமக்கள் தமிழ் போராளிகளால் கொல்லப்படுவது, அப்பாவித் தமிழ் மக்கள் தென்னிலங்கையில் கொல்லப்படுவது, அர்த்தமற்ற தமிழ்ப் போராளிகளின் வன்முறை என நிறையக் குறிப்பீடுகள் நாவலெங்கும் விரவியிருக்கிறது. மிகக் கவனமாக வாசிக்காத எவரும் தமிழ் மக்களின் இருத்தலை இந்நாவலில் கண்டு கொள்ளவே முடியாது. இந்த நாவல் வரலாறு அறிந்த வாசகருக்கு ஏற்படுத்தும் பிரச்சினைகள் அநியாயமானது. மைக்கேல் ஒண்டாஜி இலங்கை உள்நாட்டு யுத்தம் பற்றிய ஆய்வுக்காக இலங்கையைச் சேர்ந்த ஏறக்குறைய ஐம்பது கல்வியாளர்களையும் மனித உரிமையாளர்களையும் சார்ந்திருக்கிறார். (ராதிகா குமாரசாமி எனும் ஒரே ஒரு தமிழ்ப் பெண் - அவரும் ஐக்கிய நாடுகள் நிறுவன அலுவலர்) ஒன்டாஜி இந்நாவலை உள்நாட்டு யுத்தம் பற்றிய நாவல் என்கிறார். இந்நாவலில் போராளிகளுக்கு (அது தமிழ்ப் போராளிகளோ ஜே.வி.பியோ எவராயினும் அவர்களுக்கு) குரல்களே இல்லை. அவர்கள் எதற்காக ஆயுதம் ஏந்தினார்கள். ஏன் தமிழ் போராளிகள் தற்கொலையாளர்களாக ஆகிறார்கள். ஜே.வி.பியினர் எந்தக் காரணங்களுக்காக அரசினால் கொல்லப்பட்டார்கள். இந்தக் கேள்விகள் எல்லாவற்றுக்கும் பதில் மௌனம் மட்டுமே. புத்த;ின் சிலையைத் தகர்த்ததற்கான காரணம் தங்கத்தை எதிர்பார்க்கும் திருடர் செயல். அரசியலோ மதமோ அல்ல (எனில் எப்போராட்டம் மதத்தை அடிப்படையாகக் கொண்டது. அதனது அரசியல் என்ன எனும் பிரச்சினை மௌனமாக்கப்படுகிறது) என பதிலிருக்கும் நாவல் போராளிகளின் அரசியல் சமூக உளவியல் நியாயங்கள் பற்றி முற்றிலும் மௌனம் சாதிக்கிறது. இத்தகைய மௌனங்கள் இருந்த போதிலும் இந்நாவல் மூன்று தரப்பினர் பங்கு பற்றும் இலங்கையின் உள்நாட்டு யுத்தம் குறித்த நாவல் என்று தன்னைக் கோரிக் கொள்கிறது. நாட்டுக்கும் பிரச்சினைகளுக்கும் அன்னியமாகி நிற்கிற அனிலின் மன நிலையும் அதே போன்று ஒன்டாஜியின் மனநிலையும் தான இதற்குக் காரணமாக இருக்கக்கூடும்.

அனில்ஸ் கோஸ்டை வாசிக்கும் போது எனக்கு தென்னாப்பிரிக்காவின் புகழ் பெற்ற பின்நவீனத்துவ வெள்ளை நாவலராசிரியர் கோஹெட்ஸியின் "அவமானம்" ("டிஸ்கிரேஸ்" எனும் வெள்ளை நிறவாத) நாவலின் மொழிநடையும் உத்தியும் தான் ஞாபகம் வருகிறது. அந்த நாவலில் வன்முறையிலும், பாலியல் பலாத்காரத்திலும் அனைத்து சமூக விரோதச் செயல்களிலும் ஈடுபடுகிறவர்கள் தென்னாப்பிரிக்க கறுப்பு மக்கள் தான். ஆனால் என்ன ஆச்சரியம் ஒரு இடத்திலும் கூட இவர்கள் தென்னாபிரிக்க கறுப்பு மக்கள் என்பதை விவரணத்துடன் நீங்கள் பார்க்கவே முடியாது. இதை கோஹெட்ஸியின் கனவான் உளநிலை எனப் புரிந்து கொண்டால் நீங்கள் தவறு செய்தவர்களாவீர்கள். நாவலின் இறுதி வரையிலும் நம்மால் பெயரை வைத்து இவர்கள் கறுப்பு மக்கள் என அடையாளம் காண்பது மிகச் சிரமமாகவே இருக்கும். ஆனால் வெள்ளைப் பாத்திரங்களின் அடையாளம் பிரகாசமாகவும் விவரணங்களுடனும் நமது மூளைக்குள் இறங்குகிறது. இந்நாவல் நிற ஒதுக்கலுக்குப் பிந்திய தென்னாபிரிக்க சூழலில் "போஸ்ட் அபார்த்தய்டு" வெள்ளை மக்களின் மனித உரிமைக்காகக் குரல் கொடுக்கும் நாவல் என மேலைத்தேய வட்டாரங்களில் அறியப்படுகிறது. எல்லாவற்றுக்கும் மேலாக இந்நாவலுக்கு புக்கர் விருதும் வழங்கப்பட்டது. தமிழர்கள் பற்றியும் இத்தகையதொரு அருவமான சித்திரிப்பைத் தான் என்னால் அனில்ஸ்கோஸ்ட் நாவலில் காணமுடிந்தது.

நாட்டை விட்டு வெளியேறினாலும் இலங்கை அரசை ஆவி போல் பிடித்தாட்டும் அனிலது கலகம் குறித்ததாகவும் அனிலது மனிதஉரிமை ஆவல்களையும், ஆய்வு மனப்பான்மையையும் ஆட்டிப் படைத்த மாலுமி எனும் பிணத்தின் ஆவியினது கதையாகவும் இந்தத் தலைப்பைப் புரிந்து கொள்ளலாம். முப்பத்தி மூன்று வயது அனில் திஸரா பதினைந்து ஆண்டுகளின் பின் புதைகுழிகள் தோண்டியெடுக்கும் பணிக்காக இலங்கை திரும்புகிறார். அவருக்கு திருமண வாழ்வு முறிந்த கசப்பான கடந்த காலம் உண்டு. மணமான கல்லிஸ் எனும் எழுத்தாளர் ஒருவருடன் மரபு மீறிய உடல் சார்ந்த காதல் உண்டு. லீப் எனும் அமெரிக்கப் பெண்ணொருத்தியுடன் சமபாலுறவும் உண்டு. இலங்கையின் வன்முறை மற்றும் கோரத்தினிடையில் அடிக்கடி தனது காதலனுடன் முயங்கிக் கிடந்த சம்பவ!ங்களை அனில் நினைவு கூர்கிறாள். சமபாலுறவுத் தோழியின் துாரத்துத் தொலைபேசிக் குரல் கேட்டு நெகிழ்கிறாள். இலங்கையில் அவள் தனது பணிகளுக்கு உதவிக்கு அகழ்வாராய்ச்சியாளரான நாற்பத்தியேழு வயது சரத்தைச் சந்திக்கிறாள். தொடர்ந்து சரத்தின் சகோதரனும் டாக்டருமான காமினியைச் சந்திக்கிறாள். காமினிக்கு தனது சகோதரன் சரத்தின் மனைவியின் மீது காதல் இருந்திருக்கிறது. காமினியின் மனைவி பிரிந்து போகிறாள். சரத்தின் மனைவி தற்கொலை செய்து கொள்கிறாள். சரத் அகழ்வாய்விலும் காமினி மருத்துவத் தொழிலிலும் தம்மை இழக்கிறார்கள். அனிலும் சரத்தும் கண்டுபிடிக்கும் நான்கு பிணங்களில் அரசுப் பாதுகாப்பிலுள்ள புராதன இடத்தில் மாற்றிப் புதைக்கப்பட்ட மாலுமியின் பிணத்தினது அடையாளம் காணப் புறப்படுகிறார்கள்.

(மிகுதி அடுத்த இதழில்)

நன்றி - நூலகத்திட்டம்



# அன்றிருந்த ஆபத்து ஒன்றும் இன்றுள்ளதைப் போன்று கடுமையானதல்ல!

நினைவுக் குறிப்புகள் – 13


இந்த இடத்தில் வாசகர்களுக்கு அவ்வளவாக ஆர்வம் தராத ஒரு விடயத்திற்காக ஒரு பக்கத்தை ஒதுக்க விரும்புகிறேன். பல்கலைக்கழக ஆங்கில பீடத்தில் இருக்கும் போது கட்சிக்கு வந்தவன் என்ற முறையில் இப்படி ஒரு பக்கத்தை ஒதுக்குவதற்கு நான் விரும்புகிறேன். ஆங்கில பீடத்தில் அப்போது என்னுடன் இருந்த மூன்று மாணவர்கள் ல.ச.ச.கட்சியில் இருந்தார்கள். ஆனால், அன்றிருந்த ஆசிரியர்கள், மாணவர்கள் எல்லோரையும் போலவே நாங்கள் எல்லோரும் நூற்றுக்கு நூறு வீதம் எப்.ஆர்.லீவிஸ் இன் இலக்கிய விமர்சனப் போக்கின் வழிசெல்பவர்களாக இருந்தோம். எங்களுள் டொரிக் கொஞ்சம் விதிவிலக்காக இருந்தார். ஆனால், அது அவரிடமிருந்த எந்தவொரு புலமைத்துவ கோட்பாட்டையும் எதிர்க்கின்ற இயல்பின் காரணமான விதிவிலக்கென்றே சொல்ல வேண்டும். ஆனால், அவர் எந்தவொரு விமர்சன நிலைப்பாட்டையும் இதற்குப் பதிலாக முன் வைத்ததில்லை. அவரை நான் ஒருபோதும் ஒரு மார்க்சிய இலக்கிய விமர்சகராக நினைத்ததில்லை. அவர் தனது மார்க்சியத்தையும் தனது கல்விசார் சிந்தனைகளையும் எப்போதும் வெவ்வேறு தனியான விடயங்களாகவே பார்த்து வந்தார்.

ஆங்கில பீடத்தில் இருந்த ல.ச.ச.கட்சியைச் சார்ந்த மாணவர்களான எம் மூவருக்கும் மார்க்சிய அரசியலில் இருந்தபடி கலாசாரம் தொடர்பாக லீவிசின் கருத்துக்களைக் கொண்டிருப்பது முரண்பாடாக தெரியாமல் போனது எப்படி? நாங்கள் லீவிஸ் இன் பரந்துபட்ட நாகரிக வளர்ச்சிக்கு எதிராக சிறுபான்மைக் கலாசாரத்தை முன்வைக்கும் போக்கிலிருந்த சமூக ரீதியான எதிர்ப்புரட்சித் தன்மையை காணவில்லையா? அல்லது அவரது தொழிற்புரட்சிக்கு முந்திய 'சேதன சமூகம்' என்ற இலட்சியத்தின் ஒடுக்கு முறைக் கூறுகளைக் கணக்கெடுக்கவில்லையா? அல்லது போப்பாண்டவர் அல்லது ஜேன் ஒஸ்ரனின் கருத்துக்களையும் காரணங்களையும் அவர் தூக்கிப் பிடித்ததை நாம் காணவில்லையா?

உண்மையில், கலாசாரம் தொடர்பான ஒரு நம்பகமான நிலைப்பாட்டை நோக்கி எமது அரசியல் மார்க்சியத்தை மாற்றிக் கொள்வதற்கான அடிப்படைகளை தரவல்ல எந்த ஒரு விடயங்களும் எங்களுக்குப் படிப்பதற்குக் கிடைத்திருக்கவில்லை. எங்களுக்குப் பார்க்கக் கூடியதாகவிருந்த இலக்கியம் தொடர்பான மார்க்சிய எழுத்துக்கள் எல்லாம் பிரித்தானிய ஸ்டாலினிஸ்டுக்களான கிறிஸ்டோபர் காட்வெல், றால்ஃ.பொக்ஸ், பிலிப் அன்டேசன் போன்றவர்களது பக்குவமற்ற அல்லது கரடுமுரடான எழுத்துக்கள் தான். இந்த எழுத்துக்களைப் படிக்கும் எந்தவொரு லீவிஸ் இன் கருத்துக்களை ஏற்பவரும் நியாயமாகவே மூக்கைச் சுழிப்பர் என்பதில் ஐயமில்லை.

இவற்றிலிருந்து சற்று மேம்பட்ட, ஃபிரான்ஸ் மேஃறிங் அல்லது ஜோர்ஜ் லூக்காஸ், அல்லது பாக்டின் / வலோஷினோவ் போன்றவர்கள் பற்றி நாம் அறிந்திருக்கவில்லை. தவிரவும், இவற்றில் பல அப்போது ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கவும் இல்லை. 'ரஷ்யப் புரட்சியின் வரலாறு', 'எனது வாழ்க்கை", 'காட்டிக் கொடுக்கப்பட்ட புரட்சி' போன்ற ட்ரொஸ்கியின் நூல்களை நான் மிகுந்த புலமைத்துவ கிளர்ச்சியுடன் படித்திருந்தேன் என்ற போதும் குறைந்தபட்சம் அவரது 'இலக்கியமும் புரட்சியும்' என்ற நூல்கூட இன்னமும் எங்களுக்கு தெரியாமலே இருந்தது.

எப்படியோ, லீவிஸ் இன் கருத்துக்களையும், மார்க்சியத்தையும் ஒரே நேரத்தில் ஏற்று இருந்ததால் ஒரு துரதிர்ஷ்டமான பின்விளைவு ஏற்பட்டது. இவை இரண்டும் உங்களை ஒரு தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதி போல நினைக்கத் தூண்டிக் கொண்டிருக்கும். லீவிஸ் இன்




தலைமறைவு வாழ்க்கை

றெஜி சிறிவர்த்தன

வழி தொடர்பவர்கள் என்ற முறையில் நீங்கள் ஒரு பாரபட்சம் காட்டப்படும் சிறுபான்மை இனத்தினைச் சேர்ந்த ஒருவராகவும், மார்க்ஸிஸ்ட் என்ற முறையில் புரட்சிகர முன்னணிப் படையிலுள்ள ஒருவராகவும் உங்களை காண்பீர்கள். வளரிளம் பருவத்திற்குரிய நிச்சயமான உறுதிப்பாட்டுடன் சேர்த்துப் பார்க்கையில் உங்களுக்கு இவற்றுக்கெல்லாம் பதில்கள் இருக்கும். ஆனால், இதன் விளைவு ஒருவரின் இயல்புக்கு ஊறு செய்வதாகவே இருக்கும். என்னைப் பொறுத்தமட்டில் இது என்னை எவ்வாறு பாதித்தது என்று மதிப்பிட முடியவில்லை. ஆனால், இந்தக் காரணத்தினால் உடைந்தும், தன்முனைப்பு மிக்கவர்களாகவும் போனவர்களாகக் கருதப்பட்ட ஒரு சிலரை நான் அறிவேன்.

கலாசாரம் குறித்த மயக்கங்கள் தொடர்பாக நாங்கள் எங்களது கட்சியின் உட் சூழலிலிருந்து எத்தகைய உதவியையும் பெறவில்லை. உண்மையில் லீவிஸ் தொடர்பாக கட்சி ஒரு நிலைப்பாட்டை தந்திருக்க வேண்டும் என்று நான் கூறவில்லை. ஆனால், அன்றைய ல.ச.ச.கட்சி கலாசாரத்தில் அரசியலின் முக்கியத்துவம் குறித்து - அதன் முழுமையான அர்த்தத்தில் - பெரியளவு அக்கறை கொண்டதாக இருக்கவில்லை. இலங்கையில், பெண்களின் பிரச்சினைகள் தொடர்பாக அதற்கிருந்த குருட்டுத் தனத்தைப் போலவே இவ்விடயம் தொடர்பாகவும், அது ஒரு இயந்திரத் தளமான பொருளாதாரப் பார்வையையே கொண்டிருந்தது. இந்த எல்லைப் படுத்தலின் தொடர்ச்சிகள் பெருமளவுக்கு பொதுவான முக்கியத்துவம் வாய்ந்தவையாக, வெறுமனே ஆங்கில பீட மாணவர்களின் சிறு குழுவொன்றிற்கிருந்த புலமைத்துவ இருதலைக் கொள்ளி நிலை என்ற பிரச்சினையை விட முக்கியத்துவம் வாய்ந்தவையாக - இருந்தன. இவை பற்றி நான் பின்னர் எழுதுவேன்.

000

நான் ல.ச.ச.கட்சிக்காக வேலைசெய்ய ஆரம்பித்தபோது எனக்கு 19 வயது ஆரம்பித்திருக்கவில்லை. இந்த அத்தியாயத்தை நிறுத்துவதற்கு முன்னால் இதுவரை எழுதியதைப் படித்த சில வாசகர்களுக்கு சிலவேளைகளில் ஏற்பட்டிருக்கக் கூடிய ஒரு கேள்வியைப் பற்றி நான் விவாதிக்க வேண்டியிருக்கலாம். தலைமறைவு வாழ்வினை வாழ்வதற்கும் வேலைசெய்வதற்கும் நான் விரும்பியதற்கு ஏதாவது வளரிளமைப் பருவத்து வீரசாகசக் கற்பனைகள் காரணமாக இருந்திருக்கலாமா? இவ் விடயத்துடன் சம்பந்தப்பட்ட தனிப்பட்ட ரீதியில் எனக்கிருந்த ஆபத்து இந்தக் கற்பனைகளை மேலும் உயர்த்தி விட்டிருக்கலாமா?

நான் ஏற்கெனவே குறிப்பிட்டிருந்தேன். ஒருவர் தன்னுடைய எல்லா நடவடிக்கையையும் பற்றி எல்லா வேளைகளிலும் முழுமையான பிரக்ஞையுடன் இருப்பதாகக் கொள்ள முடியாது. ஆனால், நான் தலைமறைவு வாழ்க்கையில் சம்பந்தப்பட்டது தொடர்பான எனது மனநிலையை புரிந்துகொள்ள முயன்றபோது, நான் எத்தகைய வீரசாகசக் கற்பனைகளும் எனது இந்த வாழ்வினை உந்திய அம்சங்களாக உணர்ந்ததாக காணமுடியவில்லை.

சில செயற்பாடுகள் அவை செய்யப்பட்ட சந்தர்ப்பங்கள் வழமைக்கு மாறானவையாக இருந்த போதும், அவ்வளவு பெரிய காரியங்களாக இல்லாதது ஒரு காரணமாக இருக்கலாம். லெஸ்லியிடம் இருந்து ஒரு கடிதத்தை எடுத்துப் போய் அதற்குப் பதில் வாங்கி வந்து கொடுப்பது ஒரு அலுவலகப் பணியாளரின் வேலைக்கொப்பான 'புரட்சிகர வேலை'யே. நான் செய்த வேறு சில வேலைகள் சலிப்பூட்டுவதாகவும், களைப்பைத் தருவதாகவும் இருந்தன. உதாரணமாக, இந்தப் பத்திரிகை விநியோகக் குழுவின் உறுப்பினர் என்ற முறையில் பட்டியலிலிருக்கும் 50 பேர்களுக்கு தொடர்ந்து ஒவ்வொரு பத்திரிகையையும், அனுப்பி வைக்கும் பொறுப்பு என்னிடம் இருந்தது. இவர்கள் எல்லாரும் யுத்தத்துக்கு முந்திய கட்சித் தோழர்கள். இவர்களுடன் கட்சி நேரடியாக இல்லாமல் மறைமுகமான தொடர்பை வைத்திருக்க விரும்பியது. என்வலப்பில் முகவரியை எழுதுதல், அவற்றுக்கு முத்திரை ஒட்டுதல், அவற்றை தபால் பெட்டியில் சேர்ப்பதற்காக கொஞ்சம் கொஞ்சமாக - பிடிபடாமல் இருப்பதற்காக - எடுத்துச் செல்லுதல் என்பவற்றைச் செய்தல் என்று அமைந்த இது ஒன்றும் பெரிய பயக்கிளர்ச்சி எதையும் தரக்கூடிய வேலையல்ல. என்னுடைய தலைமறைவு வேலை காரணமாக நான் எந்த மாணவர் நடவடிக்கைகளிலும் பங்கு கொள்ளக் கூடாது என்று மிகக் கண்டிப்பாக அறிவுறுத்தப்பட்டிருந்தேன் - குறிப்பாக அரசியல் விவாதங்கள், கலந்துரையாடல்களில்! இந்த இடங்களிற்கு நான் போனால் எனது கருத்துக்களையும் அபிப்பிராயங்களையும் வெளியிட்டிருக்க வேண்டி வந்திருக்கும். ஆகவே நான் ஒரு சிவப்பு ஷேட் அணிந்த பல்கலைக்கழக மாணவனுக்குரிய தோற்றத்தினையும் இயல்பினையும் கொண்டிருப்பது என்ற கேள்வி எழுவதற்கு இடமே இல்லை.

கட்சிக்காக நான் செய்த வேலையின் தன்மையானது நான் எனக்கு 14 வயதாக இருக்கும் போது கோவிலுக்குள் போக மாட்டேன் என்று சொன்னது போன்ற ஒரு உணர்வில் இருந்து வந்த உத்வேகமாகவே இருக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன். நான் சிலவற்றை நம்பினேன். ஆகவே அவற்றை நடைமுறைப்படுத்தும் தார்மீகக் கடப்பாடு எனக்கு இருந்தது என்று கருதினேன். சிலவேளைகளில் இது ஒருவகைத் தூய்மைவாதப் போக்காகவும் இருக்கலாம். இது இல்லாமல் இருப்பது ஒருவருக்கு சௌகரியமாக கூட இருந்திருக்கக் கூடும். ஆபத்தைப் பொறுத்தவரை, வாசகர் இன்றுள்ள ஆபத்துடன் ஒப்பிட்டு அதை யோசிக்கக்கூடும். சட்டவிரோதப் பத்திரிகைகளை கொண்டு செல்வதற்காக பிடிபடுவதற்கான வாய்ப்பு அப்போதெல்லாம் இன்றைய நிலையைப் போல அதிகமல்ல. அப்போது எங்கேயும் சோதனைச் சாவடிகள் இருக்கவில்லை. இதனால் இன்றையைப் போலல்லாமல் அன்று பிடிபடுவதற்கான வாய்ப்பு மிகவும் குறைவு. அத்துடன் அன்று பொலிசாரின் தொகையும் மிகக் குறைவு. அவர்கள் அவ்வளவு விழிப்புடன் செயற்பட்டார்கள் என்று கூறுவதும் கடினம் என்றே நான் நினைக்கின்றேன். அத்துடன் அவர்களிடம் அவ்வளவு கூர்மதி இருந்ததாகவும் கூற முடியாது. அப்படித்தான் ஒருவர் பிடிபட்டாலும் கூட அது அவரது உயிருக்கோ காலுக்கோ ஆபத்தாக இருந்திருக்கப் போவதில்லை.

(வரும்)

உண்மையில், கலாசாரம் தொடர்பான ஒரு நம்பகமான நிலைப்பாட்டை நோக்கி எமது அரசியல் மார்க்சியத்தை மாற்றிக் கொள்வதற்கான அடிப்படைகளை தரவல்ல எந்த ஒரு விடயங்களும் எங்களுக்குப் படிப்பதற்குக் கிடைத்திருக்கவில்லை. எங்களுக்குப் பார்க்கக் கூடியதாகவிருந்த இலக்கியம் தொடர்பான மார்சிய எழுத்துக்கள் எல்லாம் பிரித்தானிய ஸ்டாலினிஸ்டுக்களான கிறிஸ்டோபர் காட்வெல், றால்ஃ. பொக்ஸ், பிலிப் அன்டேசன் போன்றவர்களது பக்குவமற்ற அல்லது கரடுமுரடான எழுத்துக்கள் தான். இந்த எழுத்துக்களைப் படிக்கும் எந்தவொரு லீவிஸ் இன் கருத்துக்களை ஏற்பவரும் நியாயமாகவே மூக்கைச் சுழிப்பர் என்பதில் ஐயமில்லை.

நன்றி - நூலகத்திட்டம்



# பார்த்து எழுதுக!

கடந்த 17.12.2000 வெளியாகிய சரிநிகர் பத்திரிகையில் "சுகபோகச் சாமியார்கள்" என்ற பிரசுரம் பிரசுரிக்கப்பட்டுள்ளது. நாங்கள் அக்கோவிலுக்கு சென்று வரும் அடியார்கள். பத்திரிகையில் என்றும் நடைபெறாததும், உண்மையில்லாததுமான வதந்திகள் பரப்பப்பட்டு அவதானப்படுத்தப்பட்டுள்ளன. பெரியார் குளம் பகுதியில் ரமேஸ் என்பவரின் காணியில் தற்காலிகமான மனை அமைத்தது உண்மையான விடயமாகும். ரமேஸ் என்பவரின் காணியில் தவணைக்காலம் கேட்டு மனையும் கோயிலும் அமைத்து இருந்ததும் உண்மை. மேலும் தவணைக்காலம் முடிவடைந்தவுடன் வெளியேறியதும் உண்மை. கோயிலுக்குச் சென்றுவரும் பொதுமக்களின் உதவியினால் ரமேஸ் என்பவரின் காணியில் கிணறு ஒன்றையும் வெட்டியிருந்தார்கள். தற்போது மகாரம்பைக்குளக் கிராமத்தில் அம்மனிடம் வந்து வரம் பெற்று சென்ற வெளிநாட்டிலுள்ளவர்களினாலும், வவுனியா கொழும்பிலிலுள்ளவர்களாலும் கோயில் அமைத்து இருக்கிறார்.

மேலும் 26.01.2000 அன்று புகைப்படப் பிடிப்பாளர்கள் ஆலயத்திற்கு வருகை தந்திருந்தார்கள். அச்சமயம் கோயிலுக்கு சொந்தமானவர்கள் புகைப்பிடிப்பாளர்களை ஏன் படம் எடுக்கப் போகிறீர்கள் என்று வினவிய போது "இது ஒரு சக்தி உள்ள தெய்வம்" நாங்கள் பத்திரிகையில்



பிரசுரிக்கப் போவதாகக் கூறினார்கள்.

பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டமாதிரி மிகவும் கேவலமான நடத்தைகள் நடைபெறுவது இல்லை. இதனை எதிரிகளானவர்களிடம் மட்டும் விசாரிக்காது கோயிலுக்கு போய் வருகிறவர்களிடமும் விசாரித்து முடிவினை எடுத்துக் கொண்டிருக்கலாம்.

இதனை பத்திரிகையாசிரியராகிய நீங்கள் நேரில் வந்து பார்வையிடுமாறு அடியார்களாகிய நாம் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம். அத்தோடு அரச திணைக்கள உயர் அதிகாரிகள் மட்டுமல்லாது கிறிஸ்தவர்கள், முஸ்லிம் மக்கள் போன்ற மத மக்களும் ஆலயத்திற்கு சென்று வருகிறார்கள். அத்துடன் ஒரு இடத்தில் மட்டும் சென்றுகேட்டு வெளியிடாமல் பரவலாக வவுனியாக ஆலயத்திற்கு வந்து செல்லும் மற்றும் வன்னியில் இருந்து வவுனியா வந்து ஆலயத்திற்கு வருகை தந்து செல்லும் பொது மக்களையும் விசாரித்து செயற்படுமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

**இக்கடிதம் 20 பேர் கையெழுத்திட்டு அனுப்பப்பட்டிருந்தது.**

# புதிய அடையாளங்களும்............

கருத்தும் ஓவியச் சிந்தனைகளும் அவரது படைப்புக்களினுடாகப் பிரதிபலித்தன. மேற்கத்தைய ஓவியச் செல்வாக்கும், ஓவிய நுணுக்கங்களும் தாராளமாகவே இவரிடம் காணக்கிடக்கிறது. இருந்தும் தொடர்ச்சியாக இவர் படைப்புக்களைத் தராதது பெரும் ஆதங்கத்தையும் எழுப்பி விடுகிறது.

மறுபுறம் ஓவியப் பயிற்சியையே தன் வாழ்வாக்கிக் கொண்டு விட்ட ஈ.குலராஜின் ஓவிய வாழ்த்து அட்டைகள் இன்னுமொரு வித்தியாசமான அனுபவத்தைத் தந்தன. சிறுவயதிலேயே தமிழ் நாட்டுக்குச் சென்று பல ஆண்டுகள் தூரிகையும் கையுமாகவே அலைந்து திரிந்தவர் குலராஜ். இந்திய சிற்பங்களின் சாயலை நிரம்பவே கொண்டுள்ள புராணத் தன்மையான ஓவியங்கள் இவருடையது. ஓவியங்களை கோட்டுருவங்களால், வெவ்வேறு ஒத்திசைவான கோடுகளால் நிரப்பிவிடும் அசாத்திய திறமை இவருடையது. இவ்வாறு முழு ஓவியமுமே வரிகளாக்கப்பட்டு வேறு ஒரு தளத்திற்கு எம்மை இட்டுச் செல்வது ஒரு நல்ல அனுபவம். கூடவே பண்டைய கிராமிய ஓவிய வரிகளிலிருந்து உருவாகிய இவரது படைப்புகள் குலராஜை தனித்தே அடையாளப் படுத்துகின்றன. குலராஜ் மீண்டும் மட்டக்களப்பு திரும்பியிருப்பதும், அவரிடமிருந்து இளம் ஓவியர்கள் நிறையவே கற்றுக் கொள்ள வேண்டியிருப்பதும் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய ஒன்று. ஆனாலும், இந்திய சினிமாச் சுவர் ஓவியங்களை ஞாபகப்படுத்தும் விதத்தில் வர்த்தகமயப் படுத்தப்பட்டது போன்ற சில ஓவியங்களை ஓவியமாக ஏற்றுக் கொள்ள முடியவில்லை என்பதும் குறிப்பிடக்கூடிய ஒன்று.

கடதாசிகளை மடிப்பதன் மூலம் ஆச்சரியப்படுத்தக் கூடியவாறு கடதாசிச் சிற்பங்களைச் செய்யும் 'ஓரிகாமி' எனும் ஜப்பானியக் கலையை திறமையாகவே கையாண்டுள்ளார் வத்சன். அதுவும் இவற்றை வாழ்த்து அட்டைகளுக்குள் நளினமாக புகுத்தியிருப்பது ரசிக்கக் கூடிய ஒன்று. சிலுவையில் தொங்கும் இயேசுநாதரை காகிதத்தை மடித்து மடித்து சிற்பமாக்கியிருந்தது இவரைத் தெளிவாகவே அடையாளம் காட்டியிருந்தது.

திறமையான, ஆளுமைகளை வெளிப்படுத்தக் கூடிய படைப்புக்களைச் செய்யக் கூடியவரான தீபன் தனது முழுப் பரிமாணத்தையும் ஓவியங்களில் வெளிப்படுத்தாதது ஒரு பெருங்குறை. வழமையான தொனியிலுள்ள வாழ்த்து அட்டை வடிவமைப்பைத் திசை திருப்புவதற்காகவே நடாத்தப்பட்ட ஒரு கண்காட்சியில் இவரது பல படைப்புக்கள் அதே பழைய பாணியை நோக்கித் திரும்பியது ஒரு இடறலே. தீபனால் நல்ல ஓவியங்களைத் தர முடியும் என்றாலும் கூட நவீன ஓவியங்களை மக்கள் ஏற்பார்களா, புரிந்து கொள்வார்களா என்கிற சந்தேகம் அவருக்குள் இருப்பதாகப்படுகிறது. இவற்றை ஓவியங்களிலும் அவதானிக்க முடிந்தது. மூத்த ஓவியர்கள் பலருக்கும் உள்ள மிக இயல்பான இந்தக் கேள்வியைக் கடந்து வந்தால் அவர் நிறையவே சாதிக்கலாம்.

உணர்வுகளை உருவங்கள் மூலம் அணுகாமல் வர்ணங்களின் கலவையால் அணுகுதல் நல்ல உத்தி. மேற்கத்தைய ஓவியரான 'கன்டில்ஸ்கி'யின் தத்துவத்தின் அடிப்படையில் வரையப்பட்ட ரூபனது ஓவியங்கள் இவற்றைச் செய்தது. தொடர்ந்த தேடலும், நிரம்பிய வாசிப்பும், தனது ஓவியம் பற்றிய முழுமையான புரிதலும் இவரை ஓவிய உலகில் முன்தள்ளும் என்பதையும் குறிப்பிடவேண்டும். இவ்வாறான அரூபத்தன்மை வாய்ந்த இவரது ஓவியங்கள் பற்றிய மதிப்பீடு இன்னும் பல கண்காட்சிகளின் பின்பே முழுமையாக உணரப்பட முடியும்.

இவ்வாறாக நடந்து முடிந்த இந்த இரு கண்காட்சிகளும் பலதரப்பட்ட மக்களிடையேயும் பல புதிய சிந்தனைகளை விதைத்துச் சென்றது மட்டுமன்றி பலத்த வரவேற்பைப் பெற்றதும் பதியப்பட வேண்டிய ஒன்று.

# என் ஆசையும் வேண்டுகோளும் இது!

ஆரம்பகால சரிநிகர் வாசகனில் அடியேனும் ஒருவன் தங்களது உண்மை, நேர்மை துணிவிற்கும் நானும் கட்டுப்பட்டவன். தங்களது பத்திரிகை நீண்டகால சரித்திரத்தைக் கொண்டதாகவும், பாரம்பரியமான தமிழ் வாசகரின் கைகளில் சரிநிகர் தணியாத தாகமாக மலர்ந்து வளர்ந்து ஒளி விட்டுப் பிரகாசிக்க வேண்டுமென்பதே அடியேனின் ஆசையும், வேண்டுகோளுமாகும்.

அதற்கு முதற்கண் உண்மைச் செய்திகள் சரிநிகரில் வெளி வரவேண்டும். அதற்காக உண்மையான செய்திகள் சரிநிகரில் வெளிவரவில்லையென நான் வாதாடவில்லை! என்னைச் சாடிய விவேகி என் பெயரை மட்டுமே எழுதவில்லை! மற்றைய சம்பவங்கள் அனைத்தும் என்னைக் குறிப்பிட்டு உண்மைக்கும், நேர்மைக்கும் துணிவுக்கும் உழைக்கும் சரிநிகருக்கும் மாபெரும் துரோகம் இழைத்துவிட்டாரென்பதே என் வாதம். இனிவரும் காலங்களில் நல்ல பொதுநலவாதிகளின் உள்ளத்தை விவேகி போன்ற நிருபர்களின் செய்தி உண்மையானது என நம்பி பிரசுரிக்க வேண்டாமெனவும் எனது மறுப்புக் கட்டுரையைத் தயவு செய்து காலம் கடந்தாலும் என் சமூக மக்களதும் பொதுநல அமைப்புக்களினதும், மனங்களில் ஏற்பட்ட தாக்கத்தையும் போக்கும் வண்ணம் வெளியிட்டு உதவுமாறு அன்புடன் வேண்டுகிறேன். மீனவ மக்களது ஒன்றியம் சரிநிகர் பத்திரிகையில் ஒக். 30ம் திகதிய சில இதழ்களை எரிப்பதற்கு எத்தனித்த வேளையில் நான் தலையிட்டு அதனைத் தடுத்தேன். சில இளைஞர்கள் விவேகியை தாக்குவதற்கும் முயன்றனர். நானும் ஒரு சில நண்பர்களும், அவர்களுக்கு புத்திகள் சொல்லி எய்தவனிருக்க அம்பை நோகலாமாவென சாந்தப்படுத்தி பெரும் பிரச்சினைகள் வரவிருந்ததைத் தடுத்தோம்.

எனவே, களத்தின் நிலைகள் அறிந்து உண்மைகளை நேரில் கேட்டு செய்திகளை வெளியிட வேண்டுமென்பதே ஊடகவியலாளர்களின் தாரக மந்திரமாகும். விவேகி போன்றவர்களுக்கு நல்ல பயிற்சிகள் கொடுங்கள். அல்லது நிருபராக இருப்பதற்கு அவருக்குத் தகுதியே இல்லை என்பதே என் தனிப்பட்ட கருத்தாகும்.

**– வி. செல்வராசா**
**திருமலை**

# அந்த நூறும் ஒன்றா?

திருகோணமலைச் சேர்ந்த 25,000 தமிழர்களின் கையெழுத்துடன் ஐ.நா. செயலாளர் நாயகத்தின் பார்வைக்கென கையளிக்கப்பட்ட மகஜரின் விபரம் அறிந்து இது என்ன சிறுபிள்ளைத்தனமான வேலை என எரிச்சலும், மன வேதனையும் கொண்டவேளை, சரிநிகர் 211 என் மன உணர்வுகளின் வெளிப்பாடாக இருந்தது.

இப்போது சரிநிகர் 213 இல் வெளியான கடிதத்திற்கு எனது பதில்.

மகஜரில் கையெழுத்து வைத்த எவருக்குமே மகஜர் கொடுக்கப்படவில்லை. எல்லோருமே வெற்றுத்தாளிலேயே தமது கையொப்பம் இட்டனர். ஊர்ப்பிரமுகர்கள் கையளிக்க முன் மேலோட்டமாக பார்த்ததுடன் சரி, மகஜரில் தமிழரின் அபிலாஷைகளுக்கு எதிராக எதுவும் எழுதப்பட்டிருந்தாலும் கொடுத்திருப்பார்கள். இந்த மகஜரினைத் தயாரித்தது, கையெழுத்தப் பெற்றது எல்லாம் ஒரு இளைஞன் என்பதே அப்பட்டமான உண்மை? இதனை ஊர்ப்பிரமுகர்கள் (என்போர்) மறுக்க முடியுமா? அவர்களுக்குத் தேவைப்பட்டது சுயவிளம்பரம், தற்புகழ்ச்சி, பத்திரிகைப்படம்,?

இந்த ஊர்ப்(?) பிரமுகர்கள் திருக்கோணமலை நகரத்தின் எல்லைக் கிராமங்கள் எங்கிருக்கின்றன என்பதே தெரியாதவர்கள்.

இவர்கள் எல்லோரும் எந்த அரசிற்கும், இராணுவத்திற்கும் ஆமாம் சாமி அவர்கள் பாஷையில் "Yes Sir" போடுபவர்கள்.

நல்ல உதாரணம்:- குமாரபுரம் கிளிவெட்டியில் உள்ளது. ஆனால் மகஜரில் வடபகுதியில் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

எமது விடுதலைப் போராட்டமும் ஏதாவது செய்ய வேண்டும் என்பவர்களினால் இன்று எங்கோ இட்டுச் செல்லப்பட்டிருக்கிறது என்பதே இன்றைய யதார்த்த நிலை. அந்த மகஜரில் சாராம்சத்தை நோக்கினும் நோக்கம் எமக்கே தெளிவாகவில்லை. கொபி அனான் என்ன செய்வார் பாவம்? வேண்டுதல்கள் சர்வதேச அழுத்தம், இலங்கை அரசிற்கு ஆக்கபூர்வ அறிவுறுத்தல்கள், உதவிக்கான இறைஞ்சல். இவை தமிழரின் நியாயமான அபிலாஷைகள் எதையேனும் பிரதிபலிக்கிறதா?

இந்த 100 கையெழுத்தும் கொபி அனானுக்கு அனுப்பிய "முகமும் முகவரியும் அற்ற அந்தக் கையெழுத்துக்கள்" போன்று வெற்றுத்தாளில் பெறப்பட்ட கையெழுத்துக்கள் தானா? அல்லது ஒருவரே வைத்த கையெழுத்துக்களா?

இவ்வாறு ஒரு மகஜரினை ஒரு போதும் யாரேனும் யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், மட்டக்களப்பு, ஏன் அம்பாறை போன்ற இடங்களில் செய்ய முடியுமா? ஏன்?

இறுதியாக, அந்தக் கையெழுத்துக்களை அப்படியே Scan செய்து பிரசுரித்தால் நல்லது.

**ச.சிவானந்தம்**
**திருகோணமலை**

நன்றி - நூலகத்திட்டம்



# சரிநிகர்

வார இதழ்

"சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே" - பாரதி

இல.: 19/04, 01/01, நாவல வீதி, நுகேகொட.

தொலைபேசி, தொலைமடல்: 074-400045

மின்னஞ்சல்: sarini@sltnet.lk

## பிரபா - ஜனாதிபதி - எரிக் சொல்ஹெய்ம்! முடிவு என்ன?

நோர்வே தூதுவர் சொல்ஹெய்ம் திரும்பவும் இலங்கை வருகிறார் என்ற செய்தி இந்தப் பத்தியை எழுதிக்கொண்டிருக்கும் போது வந்து சேர்ந்திருக்கிறது.

போர்நிறுத்தம் பேச்சுவார்த்தை என்பன தொடர்பாக புலிகளுக்கும் அர்சுக்கும் இடையில் இப்போது ஏற்பட்டுள்ள இறுக்க நிலையை தளர்த்துவதில் சொல்ஹெய்ம் பங்கு வகிப்பார் என்று தொடர்பூடங்கள் செய்தி வெளியிட்டுக் கொண்டிருக்கின்றன.

வெளிநாட்டுத் தூதுவர் ஒருவரின் வருகை இத்தனை ஆரவாரத்துடனும், அங்கலாய்ப்புடனும் எதிர்பாக்கப்படுவது வரலாற்றில் ஓரிரு தடவை தான் நடந்திருக்கிறது. அந்த ஓரிரு தடவைகளில் இன்று சொல்ஹெய்ம் மீதான எதிர்பார்ப்பும் ஒன்று.

நத்தார் - தைப் பொங்கல் பண்டிகைகளை முன்னிட்டு விடுதலைப் புலிகள் அறிவித்த ஒருமாத போர்நிறுத்த அறிவிப்பின் பின் இலங்கை அரசு தனது போர் நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி குடாநாட்டில் முடிந்தளவு அதிகமான பகுதிகளைக் கைப்பற்றுவது என்ற வேகத்துடன் செயற்பட்டு வருகிறது.

போர் நிறுத்த அறிவிப்பின் பின்னான தாக்குதலில் இலங்கைப் படையினர் நடாத்திய தாக்குதலில் ஆயிரக்கணக்கில் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். பலர் கொல்லப்பட்டோ, கைது செய்யப்பட்டோ உள்ளனர். மிரிசுவில் புதைகுழி நடவடிக்கை ஒன்று நடைபெற்றுள்ளது தெரிய வந்திருக்கிறது.

தாம் ஒரு போதும் யுத்தத்தைக் கைவிடப் போவதில்லை என்று அரசாங்கத்தின் சார்பில் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க சூளுரைத்து வருகின்றார். தமது படைகள் ஆனையிறவை மீளக் கைப்பற்றுவது உறுதி என்றும், அதற்கான நாள் குறிக்கப்பட்டுவிட்டதென்றும் அவர் அறிவித்திருக்கின்றார்.

நேற்று முன்தினம் வடபகுதி மக்களை நோக்கி செய்மதியூடாக உரையாற்றிய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆற்றிய உரையில் பிரமதரின் இந்தக் கருத்து ஜனாதிபதிக்கே உரிய சொல்லலங்காரங்களுடன் வெளியிடப்பட்டுள்ளது. புலிகள்ள சமாதானத்துக்கு உடன்படுமாறு நிர்ப்பந்திக்கும்படி அவர் அந்த உரையில் தமிழ் மக்களைக் கேட்டிருந்தார். புலிகள் யுத்தத்தைக் கைவிட தயாராகாதவரை சமாதானப் பேச்சுவார்த்தைக்கு தயாராகாதவரை தம்மால் யுத்தத்தை நிறுத்த முடியாது என்று அவர் அறிவித்திருந்தார்.

ஆனால், புலிகள் ஏற்கெனவே யுத்த நிறுத்தத்தை அறிவித்து அது இரு வாரங்களுக்கு மேலாக நடைமுறையில் இருக்கிறது. அரச படைகள் முன்னேறித்தாக்கி புலிகளின் பிரதேசங்கள் சிலவற்றைக் கைப்பற்றியும் இருக்கிறார்கள். ஆனாலும் புலிகள் முன்னேறித் தாக்கவில்லை. தற்காப்புத் தாக்குதல்களைத் தவிர வேறெதுவும் செய்யவில்லை. பலவீனம் காரணமாக பின் வாங்கும் நிலை என்றால், பலமான இன்னொரு பகுதியில் திசைதிருப்பும் தாக்குதலை அவர்கள் தொடுத்திருக்க முடியும்.

ஆனால், புலிகள் அப்படிச் செய்யவில்லை: செய்யாதது மட்டுமல்ல செய்யப்போவதில்லை என்றும் தமது வானொலியூடாக அறிவித்திருக்கிறார்கள். அரசாங்கத்தின் இன்றைய படை நடவடிக்கை ஒவ்வொன்றும் 24ம் திகதி ஒரு மாத யுத்த நிறுத்தம் முடிவடைந்தபின் வரப்போகிற நிலைமைகளுக்கு முழுப்பொறுப்பையும் அரசே எடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்திக் கொண்டிருக்கின்றன.

புலிகள் யுத்தத்தைக் கைவிடவேண்டும், சமாதானத்திற்கு வரவேண்டும் என்று சொல்வதில் என்ன நியாயம் இருக்கிறது? ஒன்றில் ஜனாதிபதிக்கு நாட்டு அரசியல் சிக்கலின் தீவிரத்தன்மை புரியாமல் இருக்க வேண்டும். அல்லது அவருக்கும் இந்த வெற்றிக்களிப்பு ஒரு யுத்த வெறியை ஊட்டியிருக்க வேண்டும்.

புலிகள் யுத்தத்தைக் கைவிடுவது என்பது, அரசியலைக் கைவிடுவதாகும். தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளைக் கைவிடுவதாகும். மாற்று அரசியல் தீர்வு ஒன்று தமிழ் மக்களின் பிறப்புரிமையை சமத்துவத்துடன் அனுபவிக்கத்தக்க ஒரு தீர்வு இல்லாதவரை யுத்தத்தைக் கைவிடக் கோருவதில் தர்க்கமும் இல்லை, நியாயமும் இல்லை, ஆகவே ஏற்கப்படக் கூடியதும் இல்லை.

இதுதான் ஜனாதிபதியின் நிலை என்றால், என்றென்றைக்கும் இந்த நாட்டில் அவரால் சமாதானத்தை உருவாக்கிவிட முடியாது.

இது தான் இன்று இங்குள்ள மக்கள் மத்தியில் உள்ள புதிய அவசரமான நெருக்கடி.

இதைத் தீர்க்க வல்லவர், அல்ல தீர்க்கும் உடனடிவாய்ப்பை கையில் வைத்திருப்பவர் நோர்வே தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் ஒருவர் மட்டுமே என்று நம்புகிறார்கள் மக்கள்.

இந்தச் சிக்கலை அவர் வந்து தீர்க்க வேண்டும். பேச்சுவார்த்தை சூழலை உருவாக்க வேண்டும்.

யுத்தமற்ற நிலைமையில் மக்கள் வாழ முடியும் என்பதற்கான நம்பிக்கையை தரக்கூடிய பேச்சுவார்த்தையை அவர் துரிதப்படுத்த வேண்டும்.'

இந்த நாட்டு மக்களின் இன்றைய கையறு நிலையில் கோரிக்கையாக வெளிப்படுவது இதுதான்.

ஆனால்... செய்வாரா?

## ஜே.வி.பியின் ஊர்வலத்தின் மீது தாக்குதல்!
# கண்ணீர்ப்புகை வீச்சு!

அடிப்படை ஜனநாயக உரிமைகளைக் கடைப்பிடிப்பதை கூட அனுமதிக்கமாட்டோம் என்பதை மீண்டும் ஒரு முறை ட்றக் வண்டி கண்ணீர்ப் புகைக் குண்டு மூலம் சொல்லி வைத்திருக்கிறது அரசு. அரசுக்கு யுத்த ஆதரவு தருகிற சக்தியானாலும் கூட, முதுகு முறிக்கப்படுவார்கள் என்ற எச்சரிக்கையை இது வெளிப்படுத்தியுள்ளது.

கடந்த 8ம் திகதி ஜே.வி.பி ஆர்ப்பாட்டத்திற்கு எதிரான பொலிசாரின் நடவடிக்கை காரணமாக 5 பேர் பொலிசாரின் இறப்பர் குண்டுத் தாக்குதலினால் படுகாயமடைந்தும், 12 பேர் சிறு சிறு காயங்களுக்கு உள்ளாகியும் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.



காயமடைந்தவர்களில் ஜே.வி.பி தொழிற்சங்க செயலாளர் சிறிபால அமரசிங்க அவர்களின் கழுத்துப் பகுதியில் இறப்பர் தோட்டா பாய்ந்ததினால் அவர் கடும் காயத்திற்குள்ளாகி அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பொருட்களின் விலை ஏற்றத்திற்கு எதிராகவும், இலங்கையின் உள்ளக விடயங்களில் வெளிநாட்டுத் தலையீடுகளுக்கு இடமளிக்கப்படுகின்றமைக்கு எதிராகவும் தமது எதிர்ப்பைத் தெரிவிக்கும் முகமாக ஜே.வி.பி இந்த ஆர்ப்பாட்டத்தை ஒழுங்கு செய்திருந்தது.

புறக்கோட்டை போதிக்கருகாமையில் பி.ப 4 மணியளவில் ஆரம்பமான இவ் ஆர்ப்பாட்ட ஊர்வலம் கொழும்பு புறக்கோட்டை புகையிரத நிலைய்த்திற்கு அண்மையில் வந்தபோதே பொலிசாரின் தாக்குதலுக்குள்ளானது. புகையிரத நிலையத்தின் மக்கள் போக்குவரத்து பாலத்திற்கு முன்னால் பொலிசார் பாரிய டிரக்ட் வாகனத்தை இடையூறாக நிறுத்தி வைத்திருந்தனர். அதன் பின்னர் ஊர்வலம் முன்னோக்கிச் சென்ற போது நீர்பாய்ச்சியும், கண்ணீர்ப் புகையும் அடித்தும் ஊர்வலத்தைக் குழப்பினர்.

"கொழும்பின் அதிபாதுகாப்பு வலயத்திற்குள் பிரவேசிக்க முயன்றதன் காரணமாகவே பல முறை எச்சரிக்கப்பட்ட பின்னர் கண்ணீர் புகையை எறிந்து அவர்களை விரட்ட வேண்டிய நிலை ஏற்பட்டது" என்று கொழும்பு பிரதேச சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி தெரிவிக்கின்றார்.

புறக்கோட்டை போதிக்கருகாமையில் இருந்து கோட்டை புகையிரத நிலையத்திற்கு வருவதாக உறுதியளித்து விட்டுப் பின்னர், ஊர்வலம் நிறுத்தப்படாது முன்னோக்கிச் சென்றது. ஜனாதிபதி செயலாளர் அலுவலகத்தில் மகஜர் ஒன்றை கையளிக்க வேண்டுமானால் சிலர் மட்டும் செல்ல முடியும் என கூறியதைக் கேட்காமல் அனைவரும் முன்னோக்கிச் செல்ல முயற்சித்ததினால் தான் கண்ணீர்ப் புகைத் தாக்குதலை மேற்கொள்ள நேர்ந்தது என அவர் தெரிவித்தார்.

ஜே.வி.பியினர் கடந்த காலம் முழுவதும் அரசின் பலதரப்பட்ட நடவடிக்கைகளுக்கு எதிராக தொடர்ச்சியான ஆர்ப்பாட்டங்களையும் எதிர்ப்பு ஊர்வலங்களையும் நடாத்தி வருவது தெரிந்ததே.

அவர்களது சகல ஆர்ப்பாட்டக் கோஷங்களுடன் உடன்பட முடியாத போதிலும் ஒரு ஜனநாயக நாட்டில் (?) ஊர்வலம் நடாத்தவும், எதிர்ப்பு தெரிவிக்கவும் மக்களுக்கு, கட்சிகளுக்கு சுதந்திரம் இல்லையா என்று கேட்கத் தோன்றுகின்றது.

ஏற்கெனவே பல ஆர்ப்பாட்ட ஊர்வலங்களை பாதுகாப்பு காரணங்களுக்காக கலைத்து மக்களை, மக்கட் பிரதிநிதிகளை படுகாயமடையச் செய்த, கொல்லச் செய்த பெருமையைக் கொண்டது பொ.ஐ.மு அரசாங்கம். மக்களின் கருத்துத் தெரிவிக்கும் சுதந்திரத்தைப் பறித்துக் கொள்வதில் அதற்கு இணை அதுவே தான்!

விலைவாசி உயர்வுக்கும் அரசின் வரிவிதிப்புகட்கும் எதிராகப் போரிடலாம். சரி தான். அந்நிய சக்திகளின் தலையீடு என்று யாரைச் சொல்கிறது



ஜே.வி.பி?

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான நோர்வே முயற்சியையா?

அரசியல் என்றாலே அதில் இனவாதத்தைக் கலக்காமல் முடியாது என்று ஜே.வி.பி முடிவு செய்திருப்பது நியாயம் தான். பாராளுமன்றக் கதிரையில் இனவாதம் பேசாமல் அமர முடியுமா என்ன?

ஆனால், வடக்கு கிழக்கில் நடக்கும் தமிழ் மக்களின் போராட்டத்தை "பயங்கரவாதம்" என்று வர்ணிக்கும் "இனவாதிகள்" என்று குற்றம்சாட்டும் ஜே.வி.பியினர் மீண்டும் ஒருமுறை தாம் ஆயுதம் தூக்கும் நிலைமைக்கு தள்ளப்பட்டால், அப்போது தாங்கள் செய்வதையும் பயங்கரவாதம் என்பார்களோ?! 1972லும் 1981லும் தாம் செய்தது பயங்கரவாதம் என்பார்களோ...?


இலங்கை அரசின் பயங்கரவாத இயல்பைப் புரிந்து கொள்வதற்காகவேனும் அவர்கள் இன்னும் சில நாள் இப்படியான போராட்டங்களை நடத்தியாக வேண்டியது தான்!

⊙

**சிறுபான்மையினரின் உரிமைகள் மத்திய அரசினுள் பாதுகாக்கப்படுமா?**

மாதிரிப் பாராளுமன்ற விவாதம்

ஜனவரி மாதம் 16 ஆம் திகதி மாலை 7.30 மணிக்கு ரி.என்.எல் தொலைக்காட்சியில் விழிப்பு நிகழ்ச்சியைப் பாருங்கள்



**செவ்வாய் தோறும் இரவு 7.25 மணிக்கு ரி.என்.எல் தொலைக்காட்சியில்**

எரியும் இனப்பிரச்சினை ! மக்களின் அவலங்கள் போதும் !!

இன நல்லிணக்கம் மூலமான சமாதானத்திற்கு இளையவர்களின் பணி !!!

சமஉரிமை, சகவாழ்வு, சமாதானம்

இலங்கையின் வரலாற்றில் இனப்பிரச்சினை தொடர்பான முதலாவது தமிழ் தொலைக்காட்சி சஞ்சிகை நிகழ்ச்சி இது

... 19/04, 01/01, நாவல வீதி, நுகேகொட. அச்சுப்பதிவு: நவமக, 66/04, தர்மாராம வீதி, இரத்மலானை. 10.01.2001